www.padippakam.com


# புதிய சமதர்மம்

පුදිය සමධර්ම්

PUTHIYA SAMADHARMAM

இதழ் - 24 | விலை ரூபா - 10.00 | நவம்பர் - 1999 | பக்கங்கள் 12


# வேடதாரிகளை, நம்பிக்கெட்டது போதும்!

ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன். தமிழ் தேசிய இனம் பிரச்சினைக்கு அதிகளவு அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வு கொண்டு வந்து யுத்தத்தினை விரைவில் நிறுத்துவேன். நாட்டுக்கு சமாதானத்தையும் சுபீட்சத்தையும் கொண்டு வருவேன் என்றெல்லாம் சந்திரிகா அம்மையார் 1994ல் வாக்குறுதிகளை வாரி வழங்கினார். ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட கால இருண்ட. கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுபடுவதற்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம் வந்து விட்டதே என மக்கள் மகிழ்ந்தனர். அவரிடம் வசீகரம் மட்டுமல்லாமல் நேர்மையும் உண்டு என நம்பினர். 62.28% வாக்குகளை அள்ளி வழங்கி அம்மையாரைத் தெரிவு செய்தனர். வேறு யாரையும் விட கூடுதலாக சமாதானத்திற்காக ஏங்கித் தவித்த தமிழ் மக்கள் மிக அமோகமாக (80%-90%) ஆதரித்தனர். மக்கள் அம்மையார் மீது வைத்த நம்பிக்கை யாவும் தவிடுபொடியாகி விட்டது. குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்த வரை சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்த கதையாகி விட்டது. அம்மையார் தமிழ் மக்கள் முன் எந்த முகத்தோடு வருகிறார். தான் தமிழர்களை கைது செய்யவா நேரடியாக வருகிறார்? வெட்கம், ரோசம். பண்பு ஆகிய ஒன்றுமே அவரிடம் இல்லையா?

மறுபுறத்தில் ஜ.தே.க 1977 முதல் 1994 வரை நாட்டையும் அந்நிய கம்பனிகளின் ஆதிக்கத்திற்கு அகலத் திறந்து விட்டதோடு, தமிழ் மக்கள் மீது 1977 1983ல் படுமோசமான இனக் கலவரங்களை ஏவி பலத்த உயிர் உடைமை இழப்புகளை ஏற்படுத்தியது. வரலாறு காணாத துன்பதுயரங்களை சுமத்தியது. பல்லாயிரக் கணக்கான மக்களை அகதிகளாக நாடோடிகளாக துரத்தியடித்தது. 1979ல் பயங்கரவாத தடைச்சட்டத்தினைக் கொண்டு வந்தது. அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன பிறிகேடியர் வீரத்துங்காவை யாழ்ப்பாணம் அனுப்பி இளைஞர்களை படுக்கையிலிருந்து இழுத்தெடுத்து கொலை செய்வித்தார். நகங்கள் பிடுங்கப்பட்ட நிலையில் இன்பம், செல்வம், பரமேஸ்வரன் போன்ற பல இளைஞர்களின் சடலங்கள் வீதிகளில் வீசப்பட்டன. குமுதினி படகில் குழந்தைகளும் குதறப்பட்டனர். மானிப்பாயில் பலர் வரிசையில் நிறுத்தி சிங்கள படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வடமராட்சி மடமொன்றில் நூற்றுக்கணக்கானோர் பொசுக்கப்பட்டனர். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இன்று சந்திரிகாவும் ரணில் விக்கிரமசிங்காவும் தமிழரின் வாக்கு வங்கியில் தான் தமது வெற்றி தோல்வி தங்கியிருக்கிறது என்று பல்லைக் காட்டிக் கொண்டு வருகின்றனர். இவர்கள் வேடதாரிகள். இவர்கள் சிங்கள பௌத்த பேரினவாதிகள், இவர்கள் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள். குறிப்பாக தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை இந்த பேரினவாதிகள் வலையில் சிக்கித் தவிக்கக்கூடாது.

மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பி) சேர்ந்த நந்தன் குணத்திலக்க இம்முறை போட்டியிடுகிறார். இவரை ஒரு பொது இடதுசாரி அபேட்சகராக கருதி நவசமசமாஜ கட்சி முஸ்லிம் ஐக்கிய முன்னணி மற்றும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் போன்ற இடதுசாரி/முற்போக்கு சக்திகள் ஜே.வி.பி அபேட்சகருக்கு விமர்சனத்துடன் கூடிய ஆதரவை வழங்க உள்ளன. தமிழ் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் தெளிவின்மை உண்டு. ஆயினும் அக்கட்சியின் முற்போக்குத் தன்மையையும் யுத்தத்துக்கு எதிராகவும் சிங்கள வீரவிதான போன்ற இனவெறி சக்திகளுக்கும் எதிராகவும் அது இயங்கி வருவதை கருத்தில் கொள்வது அவசியம்.

எனவே தமிழ்/ முஸ்லிம் மக்களை பொறுத்தவரை பொதுஜனமுன்னணியையும் ஐ.தே.க.வையும் முற்றாக நிராகரிப்பது இன்றைய வரலாற்றுத் தேவையாகும். அக்கட்சிகளால் ஒவ்வொன்றும் 50% வாக்குகளை எடுக்க விடாமற் செய்ய வேண்டும். அவ்வாறாக அவற்றைத் திண்டாடச் செய்யவேண்டும்.

மீண்டும் தெரிவு செய்யப்பட்டால், முன்னரைக்காட்டிலும் கூடுதலான, அதாவது 2/3 பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்டால் இரண்டொரு மாதங்களில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என சந்திரிகா கூறுவதையும், வடக்கு கிழக்குக்கு சமச்சீரற்ற, அதாவது கூடுதலான அதிகாரம் வழங்கப்படும் என ரணில் கூறுவதையும் நம்பவே கூடாது நம்பிக்கெட்டது போதும்.

## எந்தத் தேர்தல்களையும் அங்கீகரிக்கத் தயாரில்லை!

-விசு-

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் குறித்து விடுதலை புலிகள் பெரிதாக எதையும் கருதவில்லை. வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக முடிந்த முடிவான கொள்கையை முன் வைத்தே போராடி வருகின்றோம். இந் நிலையில் நடைபெறும் எந்த தேர்தல் தொடர்பாகவும் எமது தலைமையகம் ஏற்கனவே தீர்மானித்த விடயமே முடிந்த முடிவாகும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு வாழ் மக்கள் விடுதலைப் போராட்டத்திற்குச் சிறந்த தீர்வு எட்டப்படும் வரை எந்த தேர்தலையும் விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கத் தயாரில்லை. கடந்த 5 வருடங்களாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் வரலாறு காணாத அளவு துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். சமாதானத்தைக் கொண்டு வருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்களினாலேயே மனித உரிமை மீறல்களும் அடக்கு முறைகளும் மிக மோசமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தெளிவான நிலைப்பாடு பற்றி விரைவில் எமது தேசிய தலைவர் தெளிவாக விளக்குவார் எனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழர்களின் 951 ஏக்கர் காணி சிங்களவர்களிடம்!

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள சுமார் 951 ஏக்கர் தமிழர்களின் வயல் காணிகள் தற்பொழுது சிங்களவர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு அவர்களாலேயே வயல் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புது முன்மாரிச்சோலை கல்வெட்டைகளவார் வெட்டு 25,35,37ம் குடியேற்றங்கள் ஆகியவற்றில் உள்ள தமிழர்களின் காணிகளுக்கே இக்கதி நேர்ந்துள்ளது. சிறிலங்கா படையினர் இக்காணிகளில் கடந்த சில வருடங்களாக நெற்செய்கை செய்வதற்கு தமிழர்களை அனுமதிக்கவில்லை. ஆனால் அவர்களது வயல்களில் நெற்செய்கை செய்வதற்கு சிங்களவர்களை அனுமதித்துள்ளனர். தற்பொழுது இவ்வியல்கள் யாவும் தமக்கே சொந்தமென் இச் சிங்களவர்கள் தெரிவிப்பதாகவும் தெரிவிக்கின்றன. இதனால் தமது நிலங்களை இழந்த சுமார் 320க்கும் மேற்பட்ட தமிழ் விவசாயிகள் மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இருக்கின்றனர்.

## தினமுரசு ஆசிரியரின் கொலை மர்மம் தொடர்கிறது

கடந்த 2ம் திகதி காலை 8.30 மணியளவில் கொழும்பு வெள்ளவத்தை தொடந்து நிலையத்திற்கு அருகில் இனந்தெரியாத ஆயுத பாணிகளின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கொழும்பு வைத்திய சாலையில் மரணமடைந்த தினமுரசின் ஆசிரியரான ரமேஸ் நடராஜாவின் கொலையில் தொடர்ந்து மர்மம் நிலவிவருகின்றது.

ஈ.பி.டி.பி குழுவின் பாராளுமன்ற உறுப்பினரான இவர் தினமுரசு வாரபத்திரிகை நடத்தி வந்தவர். அப்பத்திரிகையின் புனை பெயரில் கட்டுரைகளையும் கட்டுரை தொடர் ஒன்றையும் எழுதி வந்தவர். இவர் மீது மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கி சூடு சம்பந்தமாக பல்வேறு ஊகங்கள் வெளிவந்துள்ளன. எது எப்படி இருந்தாலும் தினமுரசு பத்திரிகை தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற பத்திரிகை இவரின் மறைக்கு பின் இப்பத்திரிகை வெளிவருவது கேள்வி குறியாகிவிட்டது.

## தமிழ்மக்களுக்கு நிவாரணம் இல்லை

வவுனியாவில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என தெரியவருகின்றது. இதே நேரம் இடம்பெயர்ந்த சிங்கள மக்களுக்கு தாராளமாக நிவாரணம் வழங்கப்பட்டதாக தெரிய வருகிறது. இது தேர்தல் காலம் என்பதால் ஆதரிப்பு கடுமையாக உள்ளதுபோல் தெரிகிறது.

# அமெரிக்காவின் இரட்டை வேடம்!



அமெரிக்காவின் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று உலகில் தான் ஒரு பொலிஸ்காரன் என்ற மாதிரியுள்ளது. அத்துடன் அதன் நடவடிக்கைகள் யாவும் இரட்டை வேடம் கொண்டதாயுமுள்ளது. அண்மையில் அமெரிக்கா தனது நேச அணியான நேட்டோ நாடுகள் மூலம் கொசோவோ பிரச்சினையில் யூகோஸ்லேவியா மீது படையெடுத்தமையும் அங்கு விமானத்தாக்குதல் மூலம் அந்நாட்டில் ஏற்படுத்திய சொல்லொணா அழிவுகளையும் நோக்கும் போது மேற்கூறிய கருத்து துலாம்பரமாகின்றது. ஐக்கிய நாடுகள் சபையைத் தனது கைப்பொம்மையாகப் பாவித்து வரும் அமெரிக்கா அச்சபையின் அனுமதியின்றியே யூகோஸ்லேவியா மீது விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்தது. இதே போன்று இன்றும் வட தென் ஈராக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதி இன்றி விமானத்தாக்குதல்களை அடிக்கடி நடாத்திவருகின்றது. ஈராக் நாட்டின் மீது விதித்த ஈவிரக்கமற்ற பொருளாதாரத் தடையால் அந்நாட்டில் உணவும் மருந்தும் இன்றி லட்சோப லட்சம் சிறார்களும் முதியவர்களும் மடியக்காரணமாயிருந்ததும், இந்த அமெரிக்காவே தான் அந்நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்க பாதுகாப்புச் சபையில் உள்ள ஏனைய நாடுகள் முன்வந்த போதும் அமெரிக்கா அதற்குத் தடையாக இருந்து வருகின்றது. உலகில் தான் ஒரு சிறந்த ஜனநாயக நாடெனக்காண்பிக்கும் அமெரிக்கா உண்மையில் தான் ஒரு முதலாளித்துவ சர்வாதிகாரியென்பதை நிரூபித்து வருகின்றது. தன் கொள்கைக்கு எதிரான நாடுகள் அனைத்திலும் குழப்பங்களையும், ஆட்சிக் கவிழ்ப்புக்களையும் ஏன்? பிரிவினைகளையும் தூண்டியும் ஊக்குவித்தும் வருவதுடன் இதற்காகப் பணத்தையும் ஆயுதங்களையும் கொடுத்து உதவி வருகின்றது,

இந்த வகையிலேயே ஒரே நாடுகளாய் இருந்த வியட்நாமையும் கொரியாவையும் அந்நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டதன் மூலம் வடவியட்நாம் தென் வியட்நாம் என்றும் வட கொரியா, தென்கொரியா எனவும் பிரிவினையை உண்டாக்கியது. இதற்கு முக்கிய காரணம் மேற்படி நாடுகள் சோவியத் ரஷ்யாவின் கோட்பாடுகளைக் கொண்டிருந்தமையே. அந்நாடுகளில் பிரிவினையை உண்டாக்கி தனக்குச் சார்பான நாடுகளுக்கு தன் ஆயுதங்களைப் பெருமளவில் விற்பனை செய்கின்றது.

சோவியத் ஒன்றியம் கலைந்து போனதற்கும் முக்கிய காரணகர்த்தா அமெரிக்காவே. சோவியத் ஒன்றியத்தில் இணைந்திருந்த சிறிய நாடுகளில் அமெரிக்காவின் சி.ஐ.ஏயின் தொழிற்பாடுகளும் தூண்டுதலுமே முக்கிய காரணியாகும்.

இன்று யுகோஸ்லாவியாவில் கொசோவோ மாகாணத்தில் நடந்து இருப்பதும் யூகோஸ்லாவியா சோவியத்யூனியன் சார்பான நாடு என்ற ஒரே காரணமே.

கொசோவோ மாகாணத்தில் அல்பேனிய இனத்தவர்களான முஸ்லீம்கள் தனி நாடு கோரி போராட்டம் நடாத்தி வந்தனர். இதனைக் கண்ட அமெரிக்கா அல்பேனியப் போராளிகளுக்குப் பணமும் ஆயுதமும் வழங்கி பிரிவினைக்கு ஊக்குவித்து வந்தது. ஈற்றில் அல்பேனியர்களின் பிரிவினைக்கு ஆதரவாக யூகோ மீது விமானத் தாக்குதல்களை தொடுத்து தற்காலிக தீர்வையே வழங்கியுள்ளது.

இப்படியாக தனக்கு எதிரான நாடுகளில் பிரிவினைக்கு ஊக்கமளிப்பதும் தனக்குச் சார்பான நாடுகளில் ஏற்படும் பிரிவினைச் சக்திகளை அழிப்பதுமே அமெரிக்காவின் கொள்கையாகும். அமெரிக்காவுக்கு எதிரான சூடான் நாட்டில் அந்நாட்டின் ஆட்சிக்கு ளுக்குப் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து வருவதோடு பணமும் ஆயுதங்களும் அளித்து வருகின்றது.

இதே அணுகுமுறையே அமெரிக்கா இலங்கை விடயத்திலும் கடைப்பிடிக்கின்றது. இலங்கை அரசு அமெரிக்காவின் நடவடிக்கைகள் யாவற்றுக்கும் ஆதரவு தெரிவித்தும் அதன் சொற்படி நடப்பதால் இலங்கையில் வடகிழக்கில் சுயநிர்ணய கோரிவரும் விடுதலைப்புலிகளை அமெரிக்க அரசு தடைசெய்துள்ளதோடு இனக்கொலை யுத்தத்திற்கு ஆலோசனையும் ஆதரவும் தெரிவித்து வருகின்றது. யூகோ நாட்டில் உள்ள கொசோவோ மாகாணத்தல் உள்ள அல்பேனியர்களின் போராட்டம் போன்றதே இலங்கையில் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிவரும் விடுதலைப் புலிகளின் செயற்பாடும். ஆனால் அமெரிக்காவின் பார்வையின்படி கொசோவோவில் போராடும் அல்பேனியர்கள் விடுதலைப் போராளிகள். இலங்கையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்னே! அமெரிக்காவின் இரட்டை வேடம்.

கடைசியாக இந்தியா, பாக்கிஸ்தான் நாடுகளுக்கிடையேயான கார்க்கில் யுத்தத்திலும் அமெரிக்கா மெல்ல தன் தலையை நுளைத்துள்ளது. இனி என்ன நடக்குமோ! கூடாரத்துக்குள் ஒட்டகம் நுழைந்த மாதிரியாகுமோ!

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் புத்தி ஜீவிகளே உபத்திரம் கொடுக்காதீர்கள்!

தமிழ் தேசிய இனத்தின் நாளாந்த வாழ்வு எல்லையற்ற துயரமயமாகியுள்ளது. கணவனை பறி கொடுத்த பெண் ஒருவரை துப்பாக்கி முனையில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியுள்ள சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு மீதான குண்டுவீச்சில், குழந்தைகள் முதல் முதியோர் வரை சிதறிப் போய் உள்ளனர். கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை, வெளியேறுமாறு வீரவிதான இயக்கம் அச்சுறுத்தி உள்ளது. வவுனியாவில் ஆயுதம் தாங்கிய காடையர்கள், தமிழ் மக்களை அச்சுறுத்த தொடங்கியுள்ளனர்.

இத்தகைய சோகம் மிகுந்த, சூழ்நிலையில் ஒரு தமிழ் பொதுமகன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை யாம் அனைவரும் உணர வேண்டும். தற்போது அரசாங்கம் நாட்டில் இயல்பு நிலை நிலவுகிறது என்பதை சர்வதேசத்துக்கு காட்டுவதற்கு பகிரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. குறிப்பாக தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வு, திருப்தியாக உள்ளது என்பதை உலகிற்கு உணர்த்துவதே அரசின் குறிக்கோளாக உள்ளது.

இன்று கொழும்பு நகரப்பகுதியில் வாழ்கின்ற தமிழ் பெரியார்கள் சிலர் அரசின் கபட நோக்கத்திற்கு துணை போகின்றவர்களாகவே உள்ளனர். இவர்களில் இடதுசாரிகள் வலது சாரிகள் நிமிடத்துக்கு ஒரு தரம் இறைவனின் நாமத்தை சொல்லும், ஆள்த்தீகர்கள், பத்திரிகையாளர்கள் கலையை விலை பேசி விற்கும், கலைஞர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பல்வேறு பிரிவினர் உள்ளனர். தமிழ் மக்களின் துயரத்தை கண்டிக்கும் கூட்டங்களில் இவர்கள் பேசும் போது. விடுதலைப் போராளிகளை விட ஒரு படி மேல் நின்று முழங்குகின்றார்கள். அதேவேளை அரச நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார்கள்.

இன்று கொழும்பின் பல்வேறு பகுதிகளில் ஏதாவதொரு, அரச சார்பு வைபவங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. இவ்வைபவங்களில் மேற் குறிப்பிட்ட கூட்டத்தில் உள்ளவர்கள் பங்குபற்றுவது சாதாரணமாகி விட்டது. இவ் வைபவங்களில் கலாச்சார அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி அனேகமாக கலந்து கொள்கிறார். விழாக்களில் பட்டாடைகள், பணமுடிப்புகள். கிரீடங்கள், என பல்வேறுபட்டவை பரிசாக கொடுக்கப்படுகிறது. இவற்றுடன் பட்டங்களும் கொடுக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகள், தொலைக் காட்சிகளில் காட்டப்படுகிறது. பத்திரிகைகளில் படங்களுடன் செய்திகளும் வெளிவருகிறது. இலங்கை அரசு எவ்வளவு நல்ல சேவைகளை செய்கிறது, என்பதை வெளியுலகிற்கு மிக நுணுக்கமாக காட்டப்படுகிறது.

நொந்து போய் இருக்கும் தமிழ் மக்களின் நெஞ்சங்கள் இதனால் எவ்வளவு வேதனைப்படும். நாம் தமிழ் மக்களின் துயரங்களில் பங்கெடுக்காமல் சுகபோகத்துடன் வாழலாம். ஆனால் அவர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தடையாக இருக்கக் கூடாது.

## தினமணி ஆசிரியருக்கான கொலை அச்சுறுத்தல்! பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது! பொலிஸில் முறைப்பாடு!

**கிழக்கிலங்கை சுதந்திர வெகுசன தொடர்பாடல் அமையத்தின் கண்டனச் செய்தி.**

தினமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இப்ரான்ஷா பெளறுதீனுக்கு எதிராக அண்மைக்காலமாக மேற்கொண்டுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பு சாதனவியல் சுதந்திரத்துக்குப் பெரும் அச்சத்தலாக அமைந்துள்ளதையிட்டு எமது கிழக்கிலங்கை சுதந்திர வெகுசன தொடர்பாடல் அமையம் வன்மையாக கண்டித்துள்ளது.

தினமணி ஆசிரியருக்கான மிரட்டல்கள், வன்முறைச் சம்பவங்கள், தாக்குதல்கள் போன்ற ஜனநாயக விரோதச் செயல்கள் ஊடகத்துறை சுதந்திரத்தை மலினப்படுத்துவதாக அமைகின்றமை கண்டிக்கத்தக்க விடயமாகும்.

தமது சொந்த கொள்கைகளையும், கோட்பாட்டுகளையும் நியாயப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். ஊழல் மோசடிகள் ஒழித்து மக்கள் நிம்மதியாக வாழ வழிவகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். மனித நேயம் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வரும் தினமணி மாத இதழ் பிரதம ஆசிரியர் இப்ரான்ஷா பெளறுத்தீனுக்கு எதிராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்கரைப்பற்று இணைப்பாளர் அதாஉல்லாவும், முன்னாள் கருங்கொடித்தீவு பிரதேச சபை பிரதிதவிசாளரும் முஸ்லிம் காங்கிரஸின் முன்றாம் தரத்தலைவர்களின் ஒருவருமான யூ.எல். உவைசும் காடைத்தனத்தை கட்டவிழ்த்துவிட்டு கொலை செய்வதாக அச்சுறுத்தி வருகின்றனர். என்று தினமணி பிரதம ஆசிரியர் அதாவுல்லா மீதும் உவைஸ் மீதும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளார்கள். செல்வாக்கு சரிந்துவரும் தமது கட்சியை காடைத்தனத்தைக் கொண்டு கட்டியெழுப்பிவிடும் அதாவுல்லா வினதும், உவைசினதும் முயற்சிகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அணையப்போகும் சுடர் படபடத்து சுடர் விடுவதைப் போல தமது அதிகாரத்தின் கடைசி மூச்சை ஜனநாயகத்தின் மீது கட்டவிழ்த்து விட்டு அச்சுறுத்தி தமது பணியை நிலைநிறுத்த முயல்வதை அக்கரைப்பற்று மக்கள் பிரதிநிதிகள் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

**ஜனநாயத்தை விரும்பும் சம்மாந்துறை மக்கள்.**

1999-08-24 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் அழைப்பை ஏற்று தினமணி ஆசிரியர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஊர்திரும்பும் போது சம்மாந்துறை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் உதுமானும், அவரின் மருமகனும் ஆயுதங்களுடன் மோட்டார் சைக்கிளின் மூலம் விரட்டிவந்து வழிமறித்து காடைத்தனத்தை ஆசிரியர் மீது காட்டினார். இதனை அறிந்த சம்மாந்துறை மக்கள் கொதித்தெழுந்து காடையர்களை விரட்டியடித்து தினமணி ஆசிரியரை பாதுகாத்து வழியனுப்பினர்.

ஊழல்களையும் மோசடிகளையும் பகிரங்கப்படுத்தப்படுத்தப்பட வேண்டும் உண்மைக்கு என்றும் அழிவில்லை தைரியமாக நின்று பேனாவைத்தூக்கி செயற்பட வேண்டுமென்றும் ஆறுதல் வார்த்தைகளை சம்மாந்துறை மக்கள் கூறினார்கள்.

## இராஜகிரிய வேலுப்பிள்ளை தோட்டத்தில் இனவாதம்!

கொழும்பில் இராஜகிரிய பகுதியில் 4வது ஒழுங்கையில் உள்ளது வேலுப்பிள்ளைத் தோட்டம். இக் குடியிருப்பில், 97 தமிழ் குடும்பங்களும், 3 சிங்கள குடும்பங்களும் உள்ளன. மிக நீண்ட காலமாக அரசாங்கத்தின் பொது வசதிகள் எதுவும் சரிவர கிடைக்காமல் இங்கு வாழும் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன.

இங்கே வாழும் தமிழ் குடும்பங்கள், தமது சொந்த முயற்சியின் மூலம் ஏதாவது அபிவிருத்தி செய்ய முயற்சிக்கும் போது, அதற்கு இங்கு வாழும் சிங்கள குடும்பங்கள் தடை செய்கின்றன. இதனால் தினமும் பிரச்சினை உள்ள பகுதியாக இப்பகுதி உள்ளது. புதிய கட்டிடம் எதுவும் கட்ட முடியாது தமிழ் குடும்பங்கள் வளர்க்கும் நாய் தெருவில் மலம் கழித்தால் பிரச்சினை, கோயில், தேவாலயம், திருத்தங்கள் செய்ய முடியாது. இவையாவற்றையும் இங்கு உள்ள மூன்று, நான்கு சிங்கள குடும்பங்கள் கட்டுப்படுத்தி வருகின்றன.

மழை பெய்து பெரு வெள்ளம் வந்தால் கூட, தமிழ் குடும்பங்களால் தான், வெள்ளம் ஏற்படுகிறது, என சிங்கள குடும்பங்கள் சண்டைக்கு வருவதாக கூறப்படுகிறது. அண்மையில் இங்குள்ள தமிழ் சிறார்கள் விளையாடும் போது, அவர்கள் விளையாடிய பந்து சிங்கள குடும்பம் ஒன்றின் வீட்டினுள் போய் விழுந்துள்ளது. இதை பெரிதுபடுத்தி பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிசார் 10 பேரை கைது செய்து தடுத்து வைத்திருக்கின்றனர்.

இராஜகிரிய பகுதியில் இருந்து தமிழ் மக்களை வெளியேற்றும் நய வஞ்சக நடவடிக்கையாகவே இதை கருத முடிகிறது.

சிங்கள பெளத்த பேரின வாதிகள் தமிழ், முஸ்லீம் மக்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என பகிரங்கமாக, அறிவித்தல் கொடுத்து வருகின்றனர். இதற்கு எதிராக அரசாங்கமோ, எதிர்கட்சியோ எத்தகைய செயற்பாடுகளிலும், ஈடுபடவில்லை. மாறாக வீரவிதான இயக்கத்துக்கு ஆதரவு கொடுக்கும் நடவடிக்கைகளில் திரைமறைவில் ஈடுபட்டு வருகின்றன. மேற்படி நடவடிக்கைகளை கண்டித்து கொழும்பு சேரி வாழ் மக்கள் முன்னணி ஒரு பொதுக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. இக் கூட்டத்திற்கு முன்னணியின் தலைவர் செல்வின் தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில், மேல் மாகாணசபை உறுப்பினர்களான, கலாநிதி விக்கிரமபாகு, கருணாரத்னா, மனோ கணேசன் ஆகியோர் உரையாற்றினார்கள். இம் மக்களின் பிரச்சினைகளை மாகாண சபையின் ஊடாக செய்ய கூடிய உதவிகளை செய்வதாகவும் இதற்காக பல பொதுப் போராட்டங்கள் ஒழுங்கு செய்து நடத்த வேண்டும் என்றும் பேச்சாளர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

கொழும்பு பகுதியில் தமிழ் மக்கள் இலங்கை அரசினால், இரண்டாம் தர பிரசைகளாகவே நடத்தப்படுகின்றனர். அண்மையில் காக்கைத்தீவு பகுதியில் இருந்து தமிழ் மக்கள் பொலிசாரினால், பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்.

தமிழ் மக்கள் அத்து மீறி குடியிருந்தால் அவர்களை உடனடியாக வெளியேற்ற விரும்பும் பாதுகாப்பு பிரிவினர் தென் இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிய காணிகளில் சிங்கள மக்கள் குடியிருந்தால், கண்டும் காணாதது போல் இருந்து விடுகின்றனர்.

இராஜகிரிய பகுதியில் உள்ள தமிழ் குடும்பங்களின் பிரச்சினைக்கு நாட்டில் உள்ள அனைத்து முற்போக்கு சக்திகளும் ஆதரவு கொடுக்க வேண்டும். வேலுப்பிள்ளை தோட்டத்துக்கு எதுவித உதவிகளையும், பொது வசதிகளையும் செய்து கொடுக்காது, அரசாங்கம் இம்மக்களை வஞ்சிக்கின்றது. மறுபுறத்தில் இனவாதிகள் இங்கு குடியிருக்கும் சிங்கள குடும்பங்களைக் கொண்டு இம்மக்களுக்கு அச்சுறுத்தல் செய்கின்றனர்.




## அமெரிக்க அரசே மியூமியாவை விடுதலை செய்!

அமெரிக்க அரசாங்கம் விடுதலைப் போராளியும், கறுப்பின மக்களின் உரிமைக்காக, போராடியவரும், மிகப் பிரபல்யமான பத்திரிகையாளருமான மியூமியாவை தூக்கில் இட உள்ளது. அமெரிக்க அரசியல்வாதிகள் செய்யும் ஊழல்களையும், கறுப்பின மக்களுக்கு எதிராக புரியப்படும் கொடுமைகளையும், தொடர்ந்து எதிர்த்து வந்ததினால் தான் இவருக்கு இந்த தண்டனை கிடைத்துள்ளது. பொலிசார் ஒருவரின் மரணத்தோடு தொடர்புடுத்தியே இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் பொலிஸ் நிர்வாகம், வழக்குத்தொடுக்கிறார். நீதிபதி ஆகியோர் ஒன்றிணைந்து செய்த சதியினால் தான் மியூமியாவுக்கு மரண தண்டனை கிடைத்துள்ளது.

கடந்த 17 வருட காலமாக தூக்குத் தண்டனையை எதிர்பார்த்திருக்கும் இவருக்கு ஆதரவாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வழக்காக விளங்கிய நீதிபதி, உரிய முறையில் விசாரணை செய்து தீர்ப்பை வழங்கவில்லை என உயர் நீதி மன்றத்துக்கு மேன்முறையீடு செய்யப்பட்ட போது உயர் நீதி மன்றம் மனுவை நிராகரித்துள்ளது. தற்போது மியூமியாவின் சட்ட ஆலோசகர்கள் சமஸ்ட்டி நீதிமன்றில் வழக்கை தாக்கல் செய்ய ஆயத்தம் செய்து வருகின்றனர். சமஸ்டி நீதி மன்றில், வழக்கு நிராகரிக்கப்பட்டால், மியூமியாவுக்கு இன்னும் ஒரு வருடத்தில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும். அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்கு எதிராக அநீதி இளைக்கப்படுவதாக நீண்ட காலமாக கூறப்படுகிறது. குற்றவியல் நடவடிக்கைகளின் போது, வெள்ளையர்களுக்கு வழங்கப்படும் தீர்ப்பைவிட கறுப்பின மக்களுக்கு எதிராகவே அனேக தீர்ப்புகள் வழங்கப்படுகிறது. கறுப்பு இன மக்கள் குற்றங்கள் புரிந்தால் மிகக் கடுமையாக தண்டிக்கும் குற்றவியல் ஊழல்கள் பற்றி பல புகார்கள் கிளம்பியுள்ளன.

கடந்த 30 வருட காலப் பகுதியில் அமெரிக்காவின் சிறைச்சாலைகள் 6 மடங்காக அதிகரித்துள்ளன. தென் ஆபிரிக்காவில் நிறவொற்றுமை இருந்த காலப்பகுதியில் தென் ஆபிரிக்க சிறைச்சாலைகள் இருந்தது போல் தற்போது அமெரிக்க சிறைச்சாலைகள் உள்ளதாக கூறப்படுகிறது. எனவே விடுதலைப் போராளியும், பத்திரிகையாளருமான மியூமியாவை விடுதலை செய்வதற்கு அநீதியை எதிர்க்கும் சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# மில்லேனியத்தின் மனிதன்!

காரல் மார்க்ஸ் இந்த ஆயிரமாண்டின் (ILLENIUM) மிகச் சிறந்த மூழை என பி.பி.சி _த்திய சர்வதேச போட்டி ஒன்றின் மூலம் தரிவு செய்யப்பட்டுள்ளார். சோசலிசம் தாவது சமதர்மம் முறைமை தான் உலகை ய்விக்க உகந்தது. அல்லது உலகில் காட்டு-ராண்டித்தனம் தாண்டவமாடும் என்ற நானிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, லகில் முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ழிக்கப்பட வேண்டும். சமதர்மம் ழைத்தோங்க வேண்டும் என்ற திசைவழியில் ரை நூற்றாண்டுக்கு மேலாகி தனது ரும்பாடுபட்டு தனது வாழ்க்கை ர்ப்பணித்தவர். சுரண்டல் அடக்குமுறையற்ற லகம் வேண்டும். என எண்ணிவந்த ஒரு பெரிய ்பாரும் மிக்காருமற்ற சிந்தனை சிற்பியாக கிய தத்துவப் படைப்பவராக விளங்கினார். வருடைய முன்னோடிகளாகிய ஹெல்கெல், யுவர்பாக் ஆகியோர் முன்வைத்த டைப்புகளின் ஒட்டுமொத்தமான தாடர்ச்சியாகவே மார்க்சிய இயங்கியல் பாருள் முதல்வாதம் என்று கோட்பாட்டை லகிற்கு அளித்தார்.

உலக முதலாளித்துவத்துக் கெதிராக லகலாவிய ரீதியில் உழைக்கும் மக்கள் ணிதிரட்டப்பட வேண்டும் என்ற அடிப்படையில் _லகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்" ன்று அறை கூவல் விடுத்தது மட்டுமல்லாமல் ர்வதேச உழைப்பாளர் சங்கம் என ழைக்கப்பட்ட முதலாவது அகிலத்தையும் தாற்றுவித்தார். பொதுவுடமை அறிக்கை என்னும் முத்தான முத்துப்போன்ற விஞ்ஞாபனத்தையும் உலகுக்கு அளித்தார். 1848ல் வரையப்பட்ட அந்த விஞ்ஞானமானது இன்றைய உலக நிலையைக் கூட தத்ரூபமாக எடுத்துக்காட்டி மைகாயாத ஆவணமாகத் திகழ்கிறது. மார்க்சின் வாழ்நாளில் அவரைப்பலர் சாடியுள்ளனர். அவர் முன்வைத்த தத்துவத்தை திரிபுபடுத்தினர். அவர்களின் பிறவுட்ஹெரன், பேண்ஸ்ரயின் ஆகியோர் பிரதானமான இருவர் ஆவர்.

மார்க்ஸ் மறைந்த போது, அவருடைய அருமை சகபாடியாகிய எங்கல்ஸ் லண்டன் ஹைகேட் மயானத்தில் ஆற்றிய உரையின் போது கூறிய வார்த்தைகள் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவர் அன்று கூறியதாவது, "20 நூற்றாண்டின் அதி உயர் சிந்தனையாளன், தனது இருக்கையில் இருந்த படியே சிந்திப்பதை நிறுத்திவிட்ட காட்சியைக் கண்டேன்" என்பதாகும். 20ம் நூற்றாண்டின் அதி உயர் சிந்தனையாளர் என அன்று எங்கல்சால் வர்ணிக்கப்பட்ட அவர் இன்று இந்த மில்லேனியத்தின் மூழை என தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒரு புறத்தில் உலக முதலாளித்துவம், ஏகாதிபத்தியமாகிய உச்சக்கட்டத்துக்குச் சென்று விட்டதாயினும் அதன் காரணமாக ஓரங்கட்டப்பட்டிருக்கும் மக்கள் சமூகத்திரத்தின் அபார சக்தி ஏகாத்தியத்துக்கெதிராக வெளிக் கொணரப்படுவதற்கு மார்க்ஸ் காட்டிய வழியில் புத்துணர்வுடன் செயற்படுவோம்.



## வேலைத் திட்டதின் அவசியம்!

"... புரட்சிகர கட்சியின் வளர்ச்சியில் சில குறிப்பான கட்டங்கள் இருக்கின்றன. இந்த ஒவ்வொரு கட்டமும் தமக்கேயுரிய குறிப்பான இயங்குவிதிகளைக் கொண்டவையாகும். தமது புரட்சிகர கட்சியின் குறிப்பான வளர்ச்சிக் கட்டம், அந்தக் கட்டத்தின் இயங்குவிதிகள் என்பனவற்றை கருத்தில் கொண்டு புரட்சியாளர்கள் அந்தக் கட்டத்தில் தாம் செய்தாக வேண்டிய முக்கியமான பணிகள், இலக்காகக் கொள்ள வேண்டிய மக்கட் பிரிவினர், அதற்கு அவசியமான சாதனங்கள், இவற்றுக்கு அவசியமான தாபன ரீதியான தயாரிப்புக்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கும் விதத்தில் ஒரு விரிவான வேலைத்திட்டத்தை வகுத்து அந்த வேலைத்திட்டத்தின் வழிகாட்டுதலில் பணிகளை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைக்கிரமப்படுத்தி தம் கைவசமுள்ள ஆற்றல்களுக்கேற்ப தமது வளங்களை சரிவர பங்கிட்டு தமது பணிகளை கிரமமாக செய்து வரவேண்டும்."

—லெனின்—

# தென் இலங்கையின் குக்கிராமங்களையும் பீதி கொள்ளச் செய்யும் கொலை வெறி வன்முறைகள்!

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. அண்மையில் அலுத்கம பகுதியில் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட சமீபலக்சான், இதே காலப்பகுதியில் இரனத்தினபுரி பகுதியில் கொல்லப்பட்ட ரோகணகுமார மரணங்கள் குற்ற வன்முறைகளின் வேகத்தை எமக்கு படம்பிடித்து காட்டுகின்றன.

1977ல் ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வந்தபோது, நாட்டை அழிவுக்குள்ளாக்கும் பல நாசகார திட்டங்களை அமுல் படுத்தியது. திறந்த பொருளாதாரக் கொள்கை, விகிதாசார பிரதி-நித்துவ முறைமை. நிறைவேற்று ஜனாதிபதி முறை, என பல புதிய விடயங்கள் அறிமுகப்-படுத்தப்பட்டன.

திறந்த பொருளாதார கொள்கையால் எமது உள்நாட்டு உற்பத்தி மாத்திரம் அழியவில்லை. இந்த நாட்டின் பாரம்பரிய கலாச்சாரங்களும் அழிவுக்குள்ளாகியது. மனித சமூகத்துக்கு ஒத்துவராத பல புதிய கலாச்சாரங்கள் வெளிநாட்டு பொருட்களுடன் கூடவே வந்து, எமது நாட்டுக்குள் ஒட்டிக் கொண்டது. அந்நிய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறோம், சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக பல வசதிகளை உருவாக்கிக் கொடுக்கிறோம், எனக் கூறிக்கொண்டு, கசினோ நிலையங்கள், உடற்பயிற்சி (மசாஜ் சென்ரர்) நிலையங்கள் என பல நரகங்கள் உருவாக்கப்பட்டன. போதை வஸ்த்து பாவனையும் அதிகரித்தது. வெளிநாட்டு பொருட்களின் வருகையுடன் நவீன ஆயுதங்களும், கடத்தி வரப்பட்டன. புதிய பானரி குற்றவியல் செயல்களுக்குரிய சினிமாக்களும், வந்து குவிந்தன. இவைகளினால் குற்றச் செயல்கள் நாட்டில் அதிகரிக்கத் தொடங்கின.

1977, 1979, 1981, 1983, ஆகிய காலப்பகுதியில் இனக் கலவரங்களை ஏற்படுத்தி, சமூக விரோதிகளுக்கு பயிற்சி கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சி புதிய வித சமூக விரோத பயிற்சிக்காக காத்திருந்தது. இதற்கான சந்தர்ப்பத்தை 1981ம் ஆண்டில் வடபகுதியில் நடந்த மாவட்ட சபைத்தேர்தல் மூலம் வழங்கப்பட்டது. இத்தேர்தலின் பின்பு தென் இலங்கையில் நடைபெற்ற அனேக தேர்தல்களில் வன்முறைகள் மிகவும் சாதாரணமாக பின்பற்றப்பட்டது. விகிதாசார பிரதிநிதித்துவ முறை தேர்தல் என்பது வன்முறை தேர்தல் என்னும் அளவுக்கு இந்த நாட்டில் தேர்தல் காலங்களின் போது வன்முறைகள் வெடித்துள்ளது. கடந்த வடமேல் மாகாணசபைத் தேர்தலில் நடைபெற்ற வன்செயலே அண்மைக்கால உதாரணமாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை வந்ததன் பின்பே, இந்த நாட்டில் இரத்தக்களரி மிக அதிகளவில் ஏற்படுத்தப்பட்டது. கொடிய குற்றவாளிகளைக் கூட மன்னித்து சமாதான நீதவான் வழங்கிய பெருமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு. அளவுக்கு அதிகமான அதிகாரங்கள், தனிமனிதன் கையில் குவிந்திருந்ததன் மூலம் இந்த நாட்டில் சமூக வன்செயல்கள் அதிகரிக்கன காரம்

அதிகாரத்துக்கு தொடர்ந்து வரவேண்டும் என்பதற்காக சமூகவிரோதிகளை தமது பக்கம் வைத்துக் கொண்டதால், இன்று நாடே பற்றி எரியும் நிலையில் உள்ளது.

தமிழ் தேசிய இனத்தை பொறுத்தவரையில் கடந்த 20 வருடங்களாக பல்வேறு துயரங்களுக்கு உள்ளாகி வருகின்றது. ஐக்கிய தேசிய கட்சியும், பொது ஜன முன்னணியும், வடக்கு கிழக்கு பகுதியை வேறு ஒரு நாடாக கருதியே யுத்தத்தை நடத்துகின்றன. பல வருடங்களாக யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதால் பலர் யுத்த முனைகளில் இருந்து தப்பி ஓடுகின்றனர். இவர்களில் பலர் சமூக விரோதச் செயல்களில் ஈடபட்டு வருகின்றனர். இவர்களுக்கு மிக எழிதாக யுத்த முனைகளில் இருந்து ஆயுதங்கள் கிடைக்கின்றன.

ஆரம்பகாலங்களில் தென் இலங்கை நகரங்களில், தமிழ் மக்களை மையமாக வைத்தே குற்றச் செயல்கள் புரியப்பட்டன. இதைக் கண்டும், காணாததுப் போல், பாதுகாப்பு பிரிவினர் இருந்துள்ளனர். இந்நிலை நாளுக்கு நாள் வலுப்பெற்று இன்று பள்ளிக்கூட சிறுவனை 17 வயது இளைஞன் கடத்தும் அளவுக்கு விரிவடைந்துள்ளது. யுத்தம் வடக்கு, கிழக்கில் நடைபெறுகிறது. புலிமீது, விமானக் குண்டு வீசினால் என்ன, பொது மக்கள் மீது வீசினால் என்ன? இரண்டும் ஒன்று தான் என வாதிட்டவர்களும் உண்டு. பதிவு தமிழ் மக்களுக்கு மட்டும் தான், தென் இலங்கை



மக்களுக்கு பிரச்சினை இல்லை என்ற படம் அற்புதமாக காட்டப்பட்டது. ஆனால் விளைவு என்னவாக உள்ளது. 25 லட்சம் பணம் தா அல்லது உனது பிள்ளையை கொல்வேன் என்கின்ற நிலைக்கு இந்த நாட்டின் பாதுகாப்பு நிலை உள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்க்கும் பொலிசாருக்கும் இடையே தொடர்பு உண்டு என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே பல அரசியல் வாதிகளுக்கும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர்க்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்து வருகின்றன.

தற்போது தென் இலங்கையில் எதற்கெடுத்தாலும், கொலை என்கிற நிலை காணப்படுகிறது. 40 ,000 போலி மருத்துவர்கள் நடமாடி வருகின்றனர். இலங்கையின் பொலிஸ்துறை மிக மோசமான நிலையில் இருப்பதாக அண்மையில் ஆய்வு நடத்திய சர்வதேச நிறுவனம் ஒன்று கூறியுள்ளது. யுத்தத்தை காரணமாக வைத்துக் கொண்டு இலாபம் அடைந்துவரும் புதிய ஒரு கூட்டம் எமது நாட்டில் உள்ளது. உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும், கொள்கைகளை மிகத்துரித கெதியில் நடைமுறைப் படுத்த முனைந்ததால், எமது நாட்டுக்கு, மஞ்சல் காய்ச்சலும், மலேரியாவுமே எஞ்சியது என்று பலர் சொல்வது உண்டு. ஆனால் இன்று அவற்றுடன் குற்றச் செயல்களும் சேர்ந்துள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



# இந்தியா: உலக மயமாக்கலின் துயரங்கள்!

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியோடு பனிப்போர் முடிவுக்கு வந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன. திறந்த பொருளாதாரக் கொள்கை கட்டாற்று வெள்ளம் மூன்றாம் மண்டல நாடுகளை அடித்துக் கொண்டு போய் உள்ளது. இதனால் இந்திய பொருளாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அத்துடன் இந்திய அரசியலின் அத்திவாரமும், கொள்கைகளும் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.

சர்வதேச நிலமைகளை அவதானிக்கும் போது வடக்கு நாடுகள் என்று அழைக்கப்படுகின்ற வளர்ச்சி பெற்ற வட அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தெற்கு நாடுகளை ஆசிய ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகள், பலவீனப்பட்டவையாகவே உள்ளன. வடக்கு நாடுகளின் தொடர்ச்சியான, திறந்த பொருளாதாரக் கொள்கை நடவடிக்கைகளினால், தெற்கு நாடுகள் தமது வர்த்தக, நிதி, மற்றும் தொழில் நுட்பங்களில் மாற்றங்களை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படன.

இந்தியா திறந்த பொருளாதாரக் கொள்கையை 1991ல் ஆரம்பித்தது. வெளிநாட்டு கடன் பழுவை தாங்க முடியாத இந்தியா இம் முடிவுக்கு வந்தது. உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும், தொடர்ச்சியான நச்சரிப்பினால், இம் முடிவை இந்தியா எடுத்தது. ஆனால் இந்தியாவின் கடன் பழு இப்போது முன்பை விட இரட்டிப்பாக உள்ளது. இன்று ஒவ்வொரு இந்திய பிரசையும் 1400 அமெரிக்க டொலர்கள் அந்நிய கடனுக்காக கட்ட வேண்டிய நிலையில் உள்ளனர். இந்தியா உலகில் கடன்பட்ட நாடுகள் வரிசையில் 3ம் இடத்தை பெறுகின்றது.

புதிய பொருளாதார கொள்கையினால், அந்நிய முதலீடுகள் இந்தியாவில் அதிகரித்துள்ளன. பல்தேசிய கம்பனிகள், எல்லாத்துறைகளுக்குள்ளும் ஊடுருவியுள்ளது. நுகர்பொருட்கள் கிடைக்கும் தன்மை அதிகரித்துள்ளது. குறிப்பாக ஆடம்பர பொருட்களின் அளவு மேலும் அதிகரித்துள்ளது. பொருட்கள் தெரிவும் அதிகரித்துள்ளது. உயர் நிலையில் உள்ளவர்களின் வேதனம் உயர்ந்துள்ளது. பொருளாதார கொள்கைகள் திட்டங்கள் யாவும் 250 மில்லியன் மத்திய தர வர்க்கத்தாரின் நலன்களை மையமாக வைத்தே தீட்டப்பட்டுள்ளது. அதே வேளை ஏழை மக்களின் நிலை கருத்தில் எடுக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 291 மில்லியன் வயது வந்தவர்கள் படிக்காதவர்களாக உள்ளனர். இவர்களில் அனேகமானவர்கள் பெண்கள். பெண்களே சமூகத்தின் மைய நாடி என்பதை நாம் கவனிக்க வேண்டும். 45 மில்லியன் பிள்ளைகள் ஆரமப் பாடசாலைக்கு செல்வதில்லை. 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 1/3 பங்கினர் கட்டாயமாக தொழிலுக்கு செல்ல வைக்கப்படுகின்றனர். 135 மில்லியன் மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் மறுக்கப்படுகின்றன. 226 மில்லியன் மக்கள் நல்ல குடி நீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். 640 மில்லியன் மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் வழங்கப்படவில்லை. 350 மில்லியன் மக்கள் வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள்.

பெரும்பான்மையான ஆண், பெண் தொழிலாளர்கள் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் வேலை செய்கின்றனர். இத்துறைகளில் காணப்படுவது நிச்சயமற்ற வேதனமும், தொழில் பாதுகாப்பு அற்ற நிலையுமாகும். எத்தகைய சட்டப் பாதுகாப்பும், தொழிற்சங்க உரிமையும் இவர்களுக்கு இல்லை. இத்துறைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் மிக மோசமாக சுரண்டப்படுகின்றார்கள். மும்பாய் நகரத்தில் மாத்திரம் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் 85% பெண்கள் வேலை செய்கின்றனர். பெண் தொழிலாளர்கள் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் கடமை புரியும் போது பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகிறார்கள்.



### விவசாயத்துறை

ஆலைத் தொழிலைப் போலவே விவசாயத் துறையிலும், பெரும் நிலத்தையுடைய விவசாயிகள் சிறு விவசாயிகள் நிலங்களை தமதாக்கிக் கொள்வார்கள். ஏற்றுமதிக்கான உற்பத்தி அதிகரிக்கும் போது சிறு உடமையாளர், பெரிய நில உடமையாளரிடம் சரணடைய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் இவர்கள் நிலமற்ற தொழிலாளர் ஆகின்றனர். ஏற்றுமதி பயிர் செய்கையில் வேலை வாய்ப்புக்கு அதிக இடம் இருக்காது. இதனால் மிகப்பெரியளவு வேலையில்லாத நிலை ஏற்படுவதுடன், சமூக அமைதியின்மை, போன்றவை தோற்றம் பெறும். இது உலகமயமாக்கலினால் விவசாயத்துறைக்கு ஏற்படும் விளைவுகளாகும்.

### உணவு பாதுகாப்பு

இந்திய பிரசைக்குரிய உணவு பாதுகாப்பு நிலை கேள்விக்குறியாக உள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கை நடவடிக்கைகளினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் உணவு உற்பத்தி பல பிரச்சினைகளுக்குள் சிக்கியுள்ளது. ஏற்றுமதி நோக்கமாகக் கொண்ட வர்த்தக பயிர்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கிறது. அரிசி முதலிய உற்பத்திகள் குறைக்கப்படுவதனால், பெண்களின் வேலை வாய்ப்பு கேள்விக்குரியாகி உள்ளது. பெண்கள் தமது குடும்பத்தை நடத்துவதற்கு பல்வேறுபட்ட கீழ்த்தரமான தொழில்களைச் செய்வதற்கு தூண்டப்படுகின்றாள்.

### அரசியல் நிலை

திறந்த பொருளாதாரக் கொள்கையினால் மக்கள் சந்தைப் பண்டமாக கருதப்படுவார்கள், புதிய நிறுவன அமைப்புகள் பல்வேறுப்பட் தாக்கத்தை சமூகத்தில், ஏற்படுத்தும். ம களை பாதுகாப்பது கலை, கலாச்சா பண்புகளை பாதுகாப்பது போன்ற அர ஜனநாயக செயற்பாடு இல்லாது ஒழிக்க படுகின்றது. அதிகார வர்க்கத்தின் செயற்பா அதிகரிக்கிறது. சிறு கூட்டத்தின் ஆட்சி உண்மையில் அங்கு காணப்படும். சமூக நல நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படும். தொழி லாளர்களுக்கு எதிரான, ஏழைகளுக்கு எதி ரான, நடவடிக்கைகள் மேலும் மேலும் வலு பெற்று வரும். சமூக பாதுகாப்பு குறையும், வறுமை அதிகரிக்கும். வேலையில்லாத் திண்டாட்ட அதிகரிக்கும், அநீதிகள், பக்கச்சார்புக அதிகரிக்கும், இதனால் ஏழைகளும், வேலையற் றவர்களும், மிகவும் கோபமடைந்து போராட் டங்களில் ஈடுபடுவார்கள்: நிச்சயமற்ற தன்மை எங்கும் நிலவும்.

### சாராம்சம்

புதிய பொருளாதாரக் கொள்கையினால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது சிறு உற்பத்தி நிறுவனங்கள் இருந்த இட தெரியாது போகின்றன. அத்தியாவசிய பொருட் கள். சாதாரண விலைக்கு அப்பாற்பட்டு செல் கின்றன. இத்தகைய தாக்கங்கள் தற்போது சாதாரணமாகி விட்டது. உலக மயமாக்கலை மக்கள் நிச்சியமாக கண்டிக்க வேண்டும். தீவி ரமாக எதிர்த்துப் போராட வேண்டும். ஏனென் றால், அது முதலில் பொருளாதார கட்டுபாட்டை தகர்க்கிறது. அதாவது, அதில் பொருளாதார நடவடிக்கை, விலைகள், விநியோகம், வேலை வாய்ப்பு வேதனம் என பல அடங்குகின்றன அரசாங்க நடவடிக்கைகள் பின் தள்ளப்படு சர்வதேச சந்தையையும் நிதியையும் மையமாக வைத்தே பொருளாதார நடவடிக்கை இயக்கப்படும்.

இந்திய அரசியல் கட்சிகளிடையே உலக மயமாக்கல், சம்பந்தமாக பெரிய எதிர்ப் திட்டம் என்றென்றும் காணப்படவில்லை ஆனால் இன்று பல்வேறு மட்டத்தில் இது பற் இவர்கள் முரண்படத் தொடங்கியுள்ளனர் அத்தோடு பல்வேறு அரசியல் சார்புடைய தொழிற்சங்கங்கள் உலகமயமாக்கலுக்கு எதிர்ப்பு காட்டத் தொடங்கியுள்ளன.

இந்தியாவில் பல்வேறுபட்ட மக்கள் அமைப் புகள் உலகமயமாக்கலுக்கு எதிராக தமது எதிர்ப்புக்களை காட்டத்தொடங்கி உள்ளன விவசாயிகள் மீனவ அமைப்புகள் என்ப இப்போராட்டங்களில் முன்னணியில் உள்ளன.

உலக மயமாக்கல் என்பது பெரும் பூதமாக உள்ளது. இதை எதிர்ப்பதற்கு உள்நாட்டு சர்வதேச எதிர்ப்பு சக்திகளின் ஒன்றிணைந்த போராட்டங்கள் அவசியமாகும்.

# எல்லை மீறும் துயரங்கள்!

"சாவை அறியாவீட்டில் இருந்து பிடி அரிசி கொண்டு வாருங்கள்" என புத்தபிரான் தனது மகனை உயிர்ப்பிக்குமாறு கேட்ட தாய்க்கு விடை பகன்றிருந்தார். இன்று புத்த பிரான் இருந்திருப்பாரானால் "சிதறி வாழாமல் இருக்கும் ஒரு தமிழ் குடும்பத்தை காட்டு" என்றே கூறியிருப்பபார். அவ்வளவு தூரம் தமிழ் மக்கள் தமது குடும்ப அங்கத்தவர்களை பிரிந்து வாழ்கின்றனர். இலங்கைக்குள்ளேயே, இலங்கை அரசால் பிரிக்கப்பட்ட நிலையில் தமிழ் குடும்பங்கள் உள்ளன.

வட பகுதியில் இருந்து கொழும்பு வர விரும்பும் ஒரு தமிழ் பிரசை சந்திக்க வேண்டிய சோதனைகள் பல. கிராம சேவகர் தொடக்கம், இராணுவ அதிகாரியின் காரியாலயம் வரை 4க்கு மேற்பட்ட இடங்களுக்கு, பல நாட்கள் தவம் கிடந்தே அனுமதி பெற வேண்டிய நிலை உள்ளது.

இதை விட வன்னியில் இருந்து ஒருவர் கொழும்பு வர நினைத்தால், அது உலக சாதனை என கருதப்படும். தமது உறவினரை சந்திப்பதற்கு அரசாங்கம் செலவு செய்யுமானால், நாம் இதை பெரிது படுத்தத் தேவையில்லை. தமது சொந்த பணத்தை பெருமளவில் விரையம் செய்து, இவ்வளவு தூரம் தொல்லைப்படும் நிலையில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

வவுனியா அகதி முகாம்களில் வாழும் சிறு குழந்தைகளிடம், உனக்கு சோறுதருபவர் யார் என்று கேட்டால் "கச்சேரி ஐயா" என்கின்றன குழந்தைகள். இதை ஒரு மிகப்பிரபல்யமான பத்திரிகையாளர், அண்மையில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியிருக்கிறார். புத்தளம் அகதி முகாம்களில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு குழந்தை பிறந்தால் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் குழந்தை பிறந்த இடம் அகதி முகாம் என குறிப்பிட்டிருப்பதாக தெரிய வருகிறது. இந்த நிலமையை கண்டு முஸ்லீம் சகோதரர்கள் கொதித்து போய் உள்ளனர்.

வன்னியில் வாழும் பாடசாலை மாணவர்களிடம் சித்திரம் கீறச் சொன்னால் விமானத்தில் இருந்து குண்டுகள் வீழ்வது போலவும், மக்கள் பலியாகி சிதறிக் கிடப்பது போலவும் படங்கள் வரைகின்றார்கள். பொதுவாகவே முகாம்களில் வாழும் சிறார்களிடம் வீட்டின் பகுதிகள் எவை என்று கேட்டால் அவர்களால் பதில் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. அகதி முகாம்களில் வாழும் மாணவர்களுக்கு வெறும் மண்டபம் மட்டுமே தெரிய வாய்ப்பு உண்டு. படுக்கை அறை, சமையலறை வரவேற்பு அறை என்பன தெரிவதற்கு அவர்களுக்கு வாய்ப்பே இல்லை.

வன்னிப் பகுதியில் பெரும்பான்மையான மக்கள், வானமே கூரையாக வாழ்கின்றனர். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை தண்டிப்பதாகக் கூறிக்கொண்டு சாதாரண மக்களின் உணவு, மருந்துவகைகளை காலத்துக்கு காலம் தடுத்து வருகிறது இலங்கை அரசு. குண்டுகளையும் வீசிக்கொண்டிருக்கிறது. யுத்த சூழ் நிலையில் கடமை புரியும், அரச ஊழயர்களை துன்புறுத்துவதிலும், இலங்கை அரசுக்கு விருப்பம் உள்ளது போல் தெரிகிறது. யுத்த சூழ் நிலையில் சேவை செய்யும் இவ் அரச ஊழியர்களை அனுதாபத்துடன் அணுகாது சந்தேகப் பார்வையுடன் கைது செய்து தடுப்புக் காவலிலும் வைத்துள்ளது. வன்னி பெருநிலப் பரப்பிலிருந்து வவுனியாவுக்கு மருத்துவ சிகிச்சைக்காக வந்தவர்களில், இடை வழியில் மரணத்தை தழுவியவர்கள் பலர். நோயாளர்களுக்காவது தனது சட்ட இறுக்கங்களை சற்றேனும் தளர்த்தும் எண்ணம் இலங்கை அரசுக்கு கிடையாது!

இலங்கையில் பொலிஸ் நிர்வாகம் திருப்தியாக இயங்கவில்லை என சர்வதேசநிறுவனம் ஒன்று, தனது ஆய்விலிருந்து வெளிப்படுத்தியுள்ளது. மனித உரிமை மீறல்கள் புரிந்தவர்கள் பொலிஸ் உயர் பதவிகளில் உள்ளனர். என ஏற்கனவே உயர் நீதி மன்றம் தீர்ப்பு ஒன்றில் தனது கருத்தை வெளியிட்டுள்ளது. பயங்கரவாதத்தை ஒடுக்குதல் என்ற போர்வையில், தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு யுத்தமே தற்போது நடைபெறுகிறது. இதற்காக எத்தனையோ சட்டங்கள் உருவாக்கப்பட்டன. பாதுகாப்பு பிரிவினருக்கு சாதகமாக அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டதாலேயே இந்நிலை தோன்றியுள்ளது.

இலங்கையின் பல்வேறு சிறைகளில் பல வருடகாலமாக விசாரணை இன்றி, எண்ணற்ற தமிழ் மக்கள் வாடுகின்றனர். தமது சக்திக்கு ஏற்ற அளவில் எத்தனையோ, போராட்டங்களை அவர்கள் நடத்திக் கொண்டு இருக்கின்றனர். இவை பற்றி இலங்கை அரசு கவலை கொண்டதாக தெரியவில்லை. விசாரணை இன்றி சிறைகளில் நீண்ட காலம் இருக்கம் நிலை ஒரு உலக சாதனையைக் கூட ஏற்படுத்தலாம். அவ்வளவு தூரம் நீண்டகால சிறைகளில் வாழும் நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர்.

இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடி நாதமாக செயற்படுகின்றார். இவரைப் போன்றதொரு கருங்காலி என்றைக்குமே பௌத்த பேரிளவாதத்திற்கு கிடைக்காது. வடக்கு-கிழக்கு மண்ணை மிதிக்காத தமிழ்மொழியை உச்சரிக்கத் தெரியாத, வெறும் தமிழ் பெயரை தன்னை அடையாளம், காட்ட மட்டும் தூக்கித் திரியும் காக்கை வன்னியன் என்றே இவரை குறிப்பிட முடியும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தை நிராகரிக்கும், இவர் இவ்வள காலமும் பதவியில் இருந்த இலங்கை அரசுகளின் யோக்கியத்தை கூற முன் வருவாரா 1958ல் உருவாக்கப்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தத்தில் இருந்து, 1987ல் உருவாகிய இலங்கை இந்திய ஒப்பந்தம் வரை துரோகம் இழைத்தது இலங்கை அரசே. கடந்த 20 வருட காலமாக நடைபெறும், உள்நாட்டு யுத்தத்தினால் 60,000 ற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் இலங்கை அரசை மட்டும் நம்பி ஒரு பேச்சுவார்த்தையில், ஈடுபடுவதற்கு எந்த ஒரு சுயமரியாதையுள்ள அமைப்பும் முன் வராது. அதே சமயம் இலங்கையில் ஆளும் தரப்பும், எதிர் தரப்பும் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தொல்லை தவிர்ப்புக் குழு என்ற பெயருடன் ஒரு குழு செயற்படுவதாக கூறப்படுகிறது. இக்குழு காலத்துக்கு காலம், சில இடங்களில் கூடி சில அறிக்கைகளை விடுவதோடு இதன் பணி முடிந்து விடுவது போல் தெரிகிறது. தீர்வுப் பொதி சம்பந்தமாக அதிரடி பிரசாரத்தில் ஈடுபட்டுத் திரிந்த கௌரவ நீதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தற்போது அந்தப் பணியை நிறுத்தியுள்ளார். தொல்லை தவிர்ப்புக் குழுவின் செயற்பாட்டில் அதிக ஈடுபாட்ட காட்டத் தொடங்கியுள்ளார் போல் தெரிகிறது. தமது அரசால் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதை உணர்ந்துள்ளாரா என ஐயப்பட வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இத் தொல்லை தவிர்ப்புக் குழுவில் ஒன்று அக்கறையுடன் செயற்படுவது போல் தன்னைக் காட்டுகிறது. தமிழ் இளைஞர்களின் இரத்தத்தால் பொட்டு வைத்துக் கொண்டு கொழும்பு வந்த இவர்கள் இன்று கடும் அரச பாதுகாப்புடன் தலைநகரில் முடங்கியுள்ளனர்.

ஆங்காங்கே அரச வைபவங்களிலும் தூதரலய விருந்துகளிலும் மட்டும் இவர்களின் தலையை தற்போது காணமுடிகிறது. இவர்களில் யாரேனும் ஒரு ஆள் திடீரென இறந்தால், அஞ்சலி தெரிவிக்கும் நிகழ்ச்சிகளிலும் இவர்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. வெளிநாட்டு அமைச்சர் தமிழ் தேசிய இனத்துக்கு செய்யும் சேவைகளில் ஒன்றில் இரண்டை இவர்களும் செய்து வருவதாக அறியக் கூடியதாக உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# சாண்டினிஸ்டா பெண் போராளிகள்!

சாண்டினிஸ்டா பெண்போராளிகள்
நிகாராகுவா தேசிய விடுதலை முன்னணியின்
பயிற்சிச் சீருடையுடன், பூட்ஸ்களுடன்
கையில் இயந்திரத் துப்பாக்கியுடன்
கோடையில் வளர்ந்த நீண்டு விரிந்த கூந்தலுடன்
நீதான் எத்தனை அழகு!
நீ வேறொரு உறவைத் தொடங்குவதற்காக
உன் காதலனைப் பிரிந்தாய்
காரணம் உனது உண்மையான காதல்
அவனுக்கானதல்ல-வேறு:
அது நாடு முழுவதன் மீதுமுள்ள காதல்...

(கார்லோஸ் மெய்ஜா கோடாய் எழுதிய சாண்டினிஸ்டா முன்னணிப் பெண் என்ற பாடலின் இது. ஆங்கில மொ.பெ. மார்கரெட்ரண்டால், லத்தீன் அமெரிக்கா படைப்புகள் மொழிபெயர்ப்பு:அமரந்தா)

1979 ஆம் ஆண்டு ஜுலை 19 ஆம் நாள், நிகராகுவாவின் மக்கள் அனஸ்டேசியோ சமோசாவின் ஒடுக்குமுறை சர்வாதிகாரத்தை வீழ்த்தி மகத்தான வெற்றி கண்ட நாள். இந்தப் புரட்சியின் வெற்றியில் மிக முக்கியமான அங்கம் வகித்தவர்கள் பெண்கள். விசசாயக் கூலிகள். தொழிலாளர்கள். தொழில் நிபுணர்கள். பூர்ஸ்வாக்கள் என பல்வேறு சமூகநிலையைச் சேர்ந்த பெண்களும் தங்கள் சகோதரர்களுடன் தோளோடு தோள் நின்று மக்களின் வெற்றிக்கு வழி வகுத்தார்கள்.

இந்த வெற்றிக்கு முந்தைய சமோசாவின் ஆட்சியில் நிகராகுவின் நிலைமை இதுதான்: நூறு வருடகால சார்பு நிலை முதலாளித்துவ பொருளாதாரத்தினால் பருத்தி.காக்பி ஆகிய கச்சாப் பொருள்களை அமெரிக்காவைச் சேர்ந்த சர்வதேச கம்பெனிகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிர்ப்பந்தம் உள்நாட்டு தொழில்களில் 40 சதவிகிதத்துக்கும் மேல் சமோசா குடும்பத்தினருக்குச் சொந்தமானவை. சாகுபடி செய்யக்கூடிய நிலங்களில் 30 சதவிகிதம், மீன்பிடித் தொழில், பால் உற்பத்தி, கட்டுமானத் தொழில்கள்.தேசியவிமானக் கம்பெனி, கப்பல் போக்குவரத்து இவையும் சமோசா குடும்பத்திற்கே சொந்தம். இதன் விளைவு கடுமையான வறுமையில் மக்கள் அனைவரும் இருக்க. சமோசா குடும்பத்தினர் மட்டுமே வசதி படைத்தவர்கள். 35% தகுதிக்குக் குறைவான வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள். 22% வேலையின்மை. வயதுவந்தோரில் 60% கல்வி அறிவற்றவர்கள். கிராம மக்களில் 93% கல்வியறிவில்லாதவர்கள். மொத்த ஜனத்தொகையில் பல்கலைக் கழகப் படிப்பு வரை சென்றவர்கள் 0.3% மட்டுமே. ஐந்தாவது கிரேடைத் தாண்டுபவர் 5% மட்டுமே.நோய்கள் கொள்ளை கொள்ளையாகப் பரவிய நிலையில், நாட்டில் மருத்துவக் கொள்ளை, திட்டம் எதுவுமில்லை. பலன்: இக்கண்டத்தின் அதிகபட்ச இறப்பு விகிதம் கொண்ட நாடு என்ற பெருமை நிகராகுவாவுக்குக் கிட்டியது.

இவையாவும் சமூகத்தில் பரிதாபகரமான நிலைமைகளைத் தோற்றுவித்தன. வேலையின்மை, வறுமை, பாதுகாப்பின்மை ஆகியவை ஆண்கள் குடும்பத்தைக் கைவிட்டுச்செல்ல காரணமாயின. கணவர்களையும் தந்தைகளையும் இழந்த குடும்பங்களின் பொறுப்பு பெண்கள் மீது விழுந்தது எத்தகைய வேலையும் செய்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில், வீட்டு வேலைகள், சந்தையில் உணவுப்பொருட்களை விற்பது, விபச்சாரம் செய்வது என பெண்களின் உழைப்பு



வருவாய்க்கு வழியானது. இதுதவிர சம்பளம் பெற்று வேலைகளில் ஈடுபட்ட பெண்கள் 1977 இல் மொத்த ஜனத்தொகையில் 28.7%. இது லத்தீன் அமெரிக்காவிலலேயே அதிகபட்சம். தேசியப் பொருளாதாரத்தில் அதிகமான பங்கு வகித்த காரணத்தினாலேயே பெண்கள் புரட்சியில் பங்கேற்றதும் இயல்பாகிப் போயிற்று. பெண்கள் அடக்கவொடுக்கமாக வீட்டுக்குள் போகப் பொருளாக இருப்பதை ஸ்பானிய கத்தோலிக்க மரபு வலியுறுத்தியது. ஆனால் சுற்றிலுமிருந்த உலகம் வேறு நிர்ப்பந்தங்களை உருவாக்கியது. வரலாறு பெண்களை தெளிவான நிலைப்பாட்டுடன் சமூக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்தது.

ஆனால் பொருளாதார நிலைமை மட்டுமே பெண்கள் புரட்சியில் ஈடுபடக் காரணம் என்று சொல்வது தவறு. எல்லா லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஒடுக்குமுறை அரசுகளே இருந்தன என்றாலும், சமோசா ஆட்சியில் நிகராகுவாவில் நிலவிய அரசியல் நெருக்கடியும், சமோசா குடும்பத்தினரை அனைத்து எதிர்ப்புகளினின்றும் பாதுகாக்க அமைக்கப்பட்ட தேசிய பாதுகாப்புப் படையின் (நேஷனல் கார்ட்) அட்லீழியங்களும் லத்தீன் அமெரிக்காவெங்கும் கதை கதையாகப் பேசப்பட்டன. இந்த ஒட்டுமொத்தமான சீரழிந்த நிலைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எல்லாத் தரப்பிலிருந்தும் எல்லா சமூக நிலைமையினரும் புரட்சிகர போராட்டத்தில் ஈடுபட முடிவெடுத்தனர். இந்தப் பெண்கள் அனைவரும் இணைந்து செயல்படுவதற்காக தமக்கென உருவாக்கிய அமைப்புத்தான் AMPRONAC. (Association of Nicaraguan Women Confronting the Nation's Problems). "சாண்டினோவின் புதல்விகள்" பல்வேறு சமூக நிலைமைகளில் வாழ்ந்துவந்த பெண்கள் புரட்சிகர போராட்டத்தில் ஈடுபடுவதென முடிவெடுத்த காரணத்தினால் வாழ்வில் தாங்கள் சந்தித்த முரண்பாடுகளை, தேர்வுகளைப் பற்றி அளித்த விரிவான வாக்கு மூலங்களின் தொகுப்பு.

இப்பெண்கள், சமோசா ஆட்சியின் ஒடுக்கு முறையின் கீழ் போராட்டம் நடைபெற்ற காலத்தில்-புரட்சி வெற்றியடைந்த பின் தேசிய புனரமைப்பு அரசியல் பணியாற்றுகையில்-தமது வாழ்நிலையைப் பற்றியும், குடும்பத்தையும் சமூக மௌடீகங்களையும் எதிர்த்து தாம் வென்ற அந்தஸ்த்தைப் பற்றியும் தங்களது வார்த்தை-களிலேயே விவரித்திருக்கிறார்கள். தாம் சார்ந்த வர்க்கம் எதுவானாலும், அனுபவித்த கொடுமைகள் எதுவானாலும், எல்லாப் பெண்களுக்கும் குறிக்கோள் ஒன்றுதான்: சமோசாவின் அரசை வீழ்த்துவது, பெண்களுக்கு கௌரவமான சமூக அந்தஸ்தை உறுதி செய்வது.

"சாண்டினோவின் புதல்விகள்" புத்தகம் முழுவதிலும் பளிச்சென்று கவனத்தைக் கவரும் அம்சம் அன்னைகளுக்கும் குழந்தைகளுக்கும் இடையில் நிலவும் அற்புதமான தொடர்புக் கண்ணி. சாண்டினிஸ்டா புரட்சியில் தலைமையேற்றவர்களும் வழிநடத்தியவர்களும் பெரும்பாலும் இளைஞர்களே. ஆனால் 30-35 வயதுக்கு மேற்பட்டவர்களில், ஆண்களைவிட் பெண்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். இதற்குக் காரணம் இவர்களது குழந்தைகள் கைது செய்யப்பட்டது அல்லது கொலை செய்யப்பட்டது தான். தங்களது குழந்தைகளை காப்பாற்ற முயலும்போது, அல்லது இழந்த குழந்தைகளின் காரணமாக அவர்களைப் போன்ற மற்ற குழந்தைகளைக் காக்கும் பொறுப்பேற்கும்போது, இயக்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தொடங்கி, பின்பு நேரடி நடவடிக்கைகளிலும் பங்கேற்ற பெண்கள் அநேகம். தமது குழந்தைகளுக்கு அரசியல் அறிவூட்டிய அன்னைகளும் அநேகம். குறிப்பாக, அன்னைக்கும் பெண் குழந்தைகளுக்-குமான உறவு விசேஷமானது.

பெண்விடுதலை என்பது புரட்சிக்கு வெளியில் தனியாக சாத்தியமே இல்லை என்பதைத்தான் நிகராகுவா பெண்கள் உலகத்துக்கு உரக்கச் சொல்கிறார்கள். பழமையிலிருந்து விடுபட்டு முழுமையான சமஉரிமை பெறக்கூடிய சாத்தியங்களை உருவாக்கிக் கொடுத்தது புரட்சிகர நடைமுறை தான் என்பதையும், ஆனால் அந்த நடைமுறை சுலபமானதல்ல என்பதையும், புரட்சியின் ஒவ்வொரு கட்டமும் ஒவ்வொரு வகையில் பெண்களின் முன்னேற்றத்தை துரிதப்படுத்திய அதேவேளையில், பழைய பிரச்சினை-களைத் தீர்த்து புதிய சாத்தியங்களை உருவாக்கவும் காரணமாக அமைந்தது என்பதையும் இப்பெண்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

ரீகன் நிர்வாகத்தின் ஆதரவில் நிகராகுவா புரட்சி கடுமையான எதிர்ப்பைச் சந்தித்த சமயத்தில், இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டது. க்யூபாவில் வாழ்ந்து வந்த மார்கரெட் ரண்டால், நிகராகுவா கலாச்சார அமைச்சரின் அழைப்பை ஏற்று நிகராகுவா சென்று நவம்பர் 1979 முதல் ஜனவரி 1980 வரை புதிய நிகராகுவாவின் வீரமிக்க 80 பெண்களை சந்தித்து அவர்களது அனுபவங்களைத் .தொகுத்து புத்தகமாக்கியுள்ளார். லூயிஸா அமாண்டா எஸ்பினோசா நிகராகுவா பெண்கள் கூட்டமைப்பு, சமூக நலத்துறை, தவிர பற்பல நண்பர்களுடைய ஒத்துழைப்புடன் இந்த அரிய பணி செய்து முடிக்கப்பட்டது. புத்தகத்தின் தொகுப்பாசிரியர்: லிண்டா யான்ஸ்.

இப்புத்தகத்துக்காக தேசிய புனரமைப்பு அரசாங்கத்தின் அட்டார்னி ஜெனரல் பதவியை வகிக்கும் நோரா அஸ்தோர்கா அளித்த பேட்டியும், சமூக நலத்துறை அமைச்சர் லீகிடோ எழுதித்தந்த கடிதமும் இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சமூகத்தில் அன்னைகளுக்கும் மகள்களுக்கும் இடையே நிலவும் அற்புதமான உறவை படம்பிடிக்கும் வகையில், இடானியா என்ற பெண் போராளி தன் மகளுக்கு எழுதிய கடிதமும் இங்கு இணைப்பு -1 ஆக தரப்படுகிறது.

* இடானியா என்ற போராளி தன் மகளுக்கு எழுதிய கடிதம்: இணைப்பு -1

* மார்கரெட்ரண்டால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட அமெரிக்கப் பெண் எழுத்தாளர். கியூபாவில் பத்து வருடங்களும், நிகராகுவாவில் புத்தகம் எழுதும் காலம் வரையிலும் தங்கியிருந்தார்.

## அன்னை இடானியா / பெர்னாண்டஸ் (படையில்:ஏஞ்சலா) மகள் க்ளாடியாவுக்கு எழுதியது. கடிதம் எழுதப்பட்ட தேதி: மார்ச் 8, 1979. இவர் போரில் இறந்த தேதி: 16 ஏப்பிரல், 1979. தேசிய பாதுகாப்புப் படையால் இடானியா கொல்லப்பட்டபோது அவருக்கு வயது 24.

எனது அன்பு மகளே,

எல்லா இடங்களிலும் மக்களுக்கு இது ஒரு முக்கியமான நேரம். இன்று நிகராகுவாவில், நாளை பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில், உலகம் முழுவதிலும். புரட்சி, ஒவ்வொருவராலும் தரமுடிந்த அனைத்தையும் கோருகிறது. நமது மனசாட்சியோ, தனிமனிதர்களாக நாம் பிரத்யோகமாகச் செயல்பட்டு இந்த உருவாக்கத்தில் இயன்றளவு உதவிகரமாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது.

விரைவிலேயே ஒரு நாள், மனிதர்களைப் போல வளர்ந்து முன்னேறி, விரோதிகளாக அல்லாமல் சகோதர சகோதரிகளாக சுதந்திரமான சமூகத்தில் வாழ்வது உனக்குச் சாத்தியமாகும் என்று நம்புகிறேன். அப்போது, உன்னுடன் கைகோர்த்து நடந்து வீதிகளில் செல்லும்போது, எல்லோரும் புன்னகைப்பதை, குழந்தைகள் சிரிப்பதை, பூங்காக்களை, நதிகளையெல்லாம் பார்க்க விரும்புகிறேன்.



நமது மக்கள் மகிழ்ச்சியான குழந்தைகளாக வளர்வதையும், புதிய மனிதர்களாகவும் எங்குமுள்ள மக்களுக்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்தவர்களாக மாறுவதையும் கவனித்து, நாம் சந்தோஷத்துடன் புன்னகை செய்வோம்.

நீ அனுபவிக்கப்போகும் அமைதியும், சுதந்திரமும் கொண்ட சொர்க்கத்தின் மதிப்பை நீ அறிந்து கொள்ள வேண்டும். நான் ஏன் இதைச் சொல்கிறேனென்றால், ஏற்கனவே நமது வீரமான மக்களில் சிறந்தவர்கள், மக்கள் மீதும் சுதந்திரத்தின் மீதும் அதைதியின் மீதும் தமக்குள்ள ஆழ்ந்த அன்பினால், நாளைய தலைமுறையினருக்காகவும், உன்னைப் போன்ற குழந்தைகளுக்காகவும் தங்கள் ரத்தத்தைத் தந்துவிட்டார்கள்-மிக்க விருப்பத்துடன். நமது அழகான நிகராகுவாவின் எத்தனையோ ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அடக்குமுஜறயிலும் அவமானத்திலும் வேதனையிலும் துடிப்பதுபோல இனி ஒருபோதும் குழந்தைகள் துடிக்கக்கூடாது என்பதற்காக, கொடுத்துவிட்டார்கள்.

ஒருவேளை நான் இவற்றையெல்லாம் உன்னிடம் நேரில் சொல்லமுடியாமல் போகலாம்: வேறொருவர் சொல்வதும் முடியாது போய் விடலாம் என்பதால் இப்போது உன்னிடம் சொல்கிறேன். அன்னை என்பவள் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பவள் மட்டுமல்ல. எல்லாக் குழந்தைகளும், தனது கர்ப்பத்திலிருந்து தோன்றியவர்கள் போல எல்லா மக்களின் வலிகளையும் அன்னை என்பவள் நன்கறிவாள். ஒரு நாள் நீ மனித குலத்தின் மீது பேரன்பு கொண்ட உண்மையான பெண்ணாக உருவாக வேண்டும் என்பதே எனது முதன்மையான விருப்பம். நீதியை யார், எப்போது குலைக்க முயன்றாலும் அதனை எதிர்த்து நின்று காப்பது எப்படி என்று உனக்கு எப்போதும் தெரிந்திருக்க வேண்டும்.

அப்படிப்பட்டவளாக நீ மாற வேண்டுமானால், நம் நாட்டுப் புரட்சியின் தலைவர்களும், பிறநாட்டுப் புரட்சிகளின் மாபெரும் தலைவர்களும் எழுதிய புத்தகங்களை நீ படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்திலிருந்தும் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்தி அதன் மூலம் எப்போதும் வளர்ச்சியைத் தொடரவேண்டும். நீ இதைச் செய்வாய், உன்னால் முடியும் என்று எனக்குத் தெரியும்.

உனக்கென வார்த்தைகளையும், வாக்குறுதிகளையும் வெற்று போதனைகளையும் விட்டுச்செல்ல நான் விரும்பவில்லை. உனக்கென நான் விட்டுச் செல்ல நினைப்பது வாழ்க்கையைப்பற்றிய ஒரு கண்ணோட்டத்தை என்னுடையதையும் (அதுதான் சிறந்தது என்று நான் நினைக்கவில்லை என்றாலும்), எனது எல்லா சாண்டினிஸ்டா சகோதர - சகோதரிகளுடையதையும் - உனக்கு விட்டுச் செல்கிறேன். அதனை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று நீ கற்றுக் கொள்வயென்று எனக்குத் தெரியும்.

சரி என் குண்டுப்பெண்ணே, உன்னை மறுபடியும் பார்க்கும் பேறு எனக்குக் கிடைத்தால் - அதுவும் கூட சாத்தியம்தான் - வாழ்க்கை பற்றியும் புரட்சி பற்றியும் நாம் நீண்டநேரம் பேசுவோம். நமக்குக் கொடுக்கப்-படும் செயல்களை கடினமாக உழைத்து நிறைவேற்றுவோம். கிடார் வாசித்து பாட்டுப்-பாடி, ஒன்றாக விளையாடுவோம். இவற்றின் மூலமாக நாம் ஒருவரையொருவர் மேலும் புரிந்து கொள்வோம். ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்-கொள்வோம்.

வா, பூவையும் சுதந்திரத்தையும் போன்ற பிரமாதமான

உன் அழகு முகத்தை எனக்குக் காட்டு

உன் சிரிப்பையும் நமது யதார்த்தத்தையும் பிணைத்து

நான் போராடுவதற்கான சக்தியைக் கொடு

தினமும் உன்னைப்பற்றியே நினைக்-கின்றேன்

எப்போதும் நீ எப்படியிருப்பாய் என்று கற்பனை செய்கிறேன்

எப்போதும் உன் மக்களை, மனித குலத்தை நீ நேசி.

உன் அம்மாவின் அன்பு முழுவதும் உனக்கே,

இடானியா.

என்றென்றைக்குமான வெற்றி கிட்டும்வரை,

சுதந்திரத்தாய் நாடு, அல்லது மரணம்!

-சாண்டினோவிய புதல்விகள்
புத்தகத்திலிருந்து தொகுப்பும்
மொழிபெயர்ப்பும் அமரந்தா

படிப்பகம்

www.padippakam.com






(இக்கட்டுரை 1997 நவம்பரில் சரிநிகரில் வெளியானது. லண்டனிலிருந்து வெளிவரும் புலம் சஞ்சிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்ட இக்கட்டுரை காலப்பொருத்தம் கருதி நன்றியுடன் மீள பிரசுரிக்கிறோம்)

# ஜே.வி.பி.யின் 10வது மாவீரர் தினம்

# றோகண விஜேவீர படுகொலையின் பின்னணி!

இம் மாதம் நவம்பர் 13ஆம் திகதியன்று ஜே.வி.பி. 8வது மாவீரர் தினத்தை நினைவு கூரியது. இன்று இலங்கையில் சக்தி வாய்ந்த இடதுசாரி இயக்கமாக முதன்மை நிலையில் இருப்பது ஜே.வி.பி.யே. 1971, 1988 ஆகிய இருமுறையும் புரட்சி செய்யவெனப் புறப்பட்டு தோல்வி கண்டு, மீண்டும் புறப்பட்டுள்ள ஜே.வி.பி.யானது இன்றும், இடதுசாரி இயக்கங்களிலேயே பெருமளவு உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். நிறுவனக் கட்டமைப்பு, ஒழுங்கு விதிகள், போன்ற இறுக்கமான ஒழுங்குக்குட்பட்டு இயங்கி வரும் ஜே.வி.பி, இன்றும் அதிகார தரப்பினருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வரும் இயக்கமாகவும் எதற்கும் விலைபோகாத கட்சியாகவும் இருந்து வருகிறது என்றால் மிகையில்லை. 1989ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி அதன் ஸ்தாபகரும் தலைவருமான றோகண விஜேவீர, ஆளும் அதிகார வெறியர்களால் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, இறுதியில் ரகசியமாக சுடப்பட்டு, எரிக்கப்பட்டார். அத்தினத்தை வருடா வருடம் ஜே.வி.யினர் கொல்லப்பட்ட தங்களது தோழர்களின் நினைவாக அனுஷ்டித்து வருகின்றனர்.

விஜேவீரவின். "புரட்சிகர பாத்திரம்", கட்சிக்குள் தலைமை வழிபாடு சதா காலம் நிலவுவதற்கு அவரின் பாத்திரம், கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவத்துக்கு வழங்கிய இடம், விமர்சனம் - சுயவிமர்சனம் என்பவை குறித்த அணுகு முறை, ஆதிக்க சித்தாந்தங்களை சரியாக அடையாளம் காணாமை, கட்சிக்குள்ளும் அதற்கு வெளியிலும் காணப்பட்ட அராஜகம் என்பன உட்பட அது போன்ற தன்மைகள் குறித்து இக்கட்டுரை பேசவில்லை. அது வேறு ஒரு களத்தில் விரிவாகப் பேசப்பட வேண்டியவை. இக்கட்டுரை விஜேவீர படுகொலை செய்யப்பட்டது

சம்பந்தமாக மட்டும் பேசுகிறது. ஆதிக்க சக்திகள் புரட்சிகர சக்திகளை எப்போதுமே விட்டு வைப்பதில்லை என்பதும் அவ்வாறான புரட்சிகர அமைப்புகளை முழுமையாக அழிப்பதென்றால் அதன் தலைமையை அழித்து விட்டால் எல்லாம் அடங்கிவிடும் என நம்புவதும் சாதாரணமானது. அவ்வாறான நம்பிக்கை வெறுமனே சோஷலிசப் போராட்டம் மட்டுமல்ல பல்வேறு சமூகப் போராட்டங்ளையும் கூட இதே அணுகுமுறையில் ஆதிக்க சக்திகள் நம்பிக்கை வைத்து வருவது பொதுவாக காணக் கூடியதே. அந்த நம்பிக்கையின் நிமித்தமே விஜேவீர உட்பட ஜே.வி.பி.யின் மத்திய குழு உறுப்பினர்கள் (தற்போதைய தலைவர் சோமவங்ஷ அமரசிங்க தவிர்ந்த) அனைவரும் வேட்டையாடிக் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி. மீண்டும் பகிரங்க அரசியலுக்கு வர நீண்ட காலம் எடுத்தது. இந்தக் கால தாமதத்துக்கு விஜேவீர வளர்த்து வைத்திருந்த "தலைமை வழிபாடும்" முக்கிய காரணமாக ஆகியிருந்தது. அதே வழிபாட்டுமுறையே இன்றும் அதன் போக்கில் குடிகொண்டுள்ளது.

## 'விஜேவீர வாக்குமூலம்'

"அன்புக்குரிய நாட்டு மக்களே! நான் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோகண விஜேவீர. நான் நவம்பர் 13ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நிலையில் பேசுகிறேன். நேற்று கண்டியில்-உலபன பகுதியிலிருந்து இராணுவம் என்னைக் கைது செய்தது. பின் கொழும்பு இராணுவ முகாமுக்கு கொண்டு வரப்பட்டு அதிகாரிகளின் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டேன். நாட்டில் தற்போது உருவாகியிருக்கும் நிலை பற்றிய எனது கருத்தென்னவென்றால், நாடு அந்நிய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் இச்சூழ்நிலையில் பல அழிவுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மக்கள் வன்முறையிலிருந்து விலகி அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்..."

றோகண விஜேவீர படுகொலை செய்யப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் அவரை வதைக்குள்ளாக்கி வலுக்கட்டாயமாகப் பெறப்பட்ட வாக்குமூலம் இது. மேற்படி வாக்கு மூலம் அடுத்த நாள் தொலைக் காட்சியிலும் காட்டப்பட்டது.

வரலாறானது அதிகார வர்க்கத்தின் பிடிக்குள் சிக்கி பலியான புரட்சிகர தலைவர்களின் எத்தனையோ பேரின் படுகொலைகளையும் கடந்து போய்க்கொண்டிருக்கிறது.

சேகுவேரா சீ.ஐ.ஏ.வினால் பொலிவியாவில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். ஜெர்மானிய புரட்சிகர தலைவி ரோஸா லக்ஸம்பர்க் அந்நாட்டு அரச படையினரால் குரூரமாக கொலை செய்யப்பட்டு ஆற்றில் தூக்கியெறியப்பட்டார். லியோன் ட்ரொஸ்கி சீ.ஐ.ஏ.வினால் குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். நக்ஸலைட் தலைவர் சாரு மஜும்தார் இந்திய ஆளும் வர்க்க கைக்கூலிகளால் ரகசியமாகக் கொலை செய்யப்பட்டார். அந்த போக்கின் தொடர்ச்சி இன்னும் மேலே மேலே சென்று கொண்டிருக்கிறது.

## தலைமறைவும் தற்காப்புக்கான நிர்ப்பந்தமும்

1971 கிளர்ச்சி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியினால் அழித்து அடக்கப்பட்டது. இதன் போது 20,000 பேருக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். கிளர்ச்சிக்கான சூத்திரதாரிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விஜேவீர உட்பட 41 பேரின் மீது ஆணைக்குழு அமைத்து விசாரணை செய்யப்பட்டனர். அவர்களில் 31 பேர் சிறைத்தண்டனை பெற்றனர்.

1977 தேர்தல் பிரச்சாரத்தின் போது ஜே.ஆரால், சிறிமாவுக்கு எதிரான ஆயுதமாக "அரசியல் கைதிகளை விடுதலை செய்" எனும் கோஷம் பாவிக்கப்பட்டது. வரலாறு காணாத வெற்றி பெற்ற ஜே.ஆர் "சொன்னபடி செய்யும் நேர்மையாளனாக" தன்னை காட்ட 1977 நவம்பர் 2ம் திகதி விஜேவீர உட்பட பல அரசியல் கைதிகளை விடுவித்தார்.

1982ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆரை எதிர்த்துப் போட்டியிட்ட அறுவரில் மூன்றாவதாக பெரும்பான்மை வாக்குகள் விஜேவீரவுக்கு கிடைத்திருந்தது. அத்துடன் மாவட்ட சபைத் தேர்தலிலும் ஜே.வி.பிக்கு கணிசமான ஆசனங்கள் கிடைத்திருந்தன. மாவட்ட சபைத் தேர்தலில் இடம்பெற்ற தேர்தல் மோசடிகளை எதிர்த்து ஜே.வி.பி. வழக்கும் தொடுத்திருந்தது. இந்த போக்கு தனது எதிர்கால அரசியலுக்கு அச்சுறுத்தல் என்பதை ஜே.ஆர் விளங்கிக் கொள்ள நேரம் செல்லவில்லை. பலமடைந்து வரும் ஜே.வி.பி.யை அடக்க தருணம் பார்த்து வந்த ஜே.ஆர்., அடுத்த வருடமே 83 இனக்கலவரத்தை தூண்டிவிட்டதுமல்லாமல் அதற்கான முழுப் பொறுப்பையும் இடதுசாரிக் கட்சிகளான ஜே.வி.பி., நவ சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் மீது சுமத்தினார்.

அக்கட்சிகளை தடைசெய்ததுடன், அதன் தலைவர்களை கைது செய்ய உத்தரவிட்டார். பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த கட்சிகளின் தலைவர்கள் பலர் சரணடைந்தனர்.இந் நடவடிக்கை ஜே.வி.பி.யை தலைமறைவு அரசியலுக்கு இட்டுச் சென்றது. காலப் போக்கில் ந.ச.ச.க., கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன மீதான தடைகள் நீக்கப்பட்ட போதும் ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்படவில்லை. தமது கட்சியின் மீதான தடையை நீக்கக் கோரி விஜேவீர பல முறை ஜே.ஆருக்கு கடிதம் எழுதியிருந்த போதும் அது தொடர்ந்து நிராகரிக்கப்பட்டது. ஜே.வி.பியின் தலைமறைவு அரசியலை இந்த நடவடிக்கை ஸ்தூலப்படுத்தியது. காலப் போக்கில் ஜே.வி.பியினர் மீதான அடக்குமுறையும் கட்டவிழ்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜே.வி.பி.யினர் தமது தற்காப்புக்காக ஆயுத பாணிகளாக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டனர். இந்த அடக்குமுறை அதிகரித்த வேளையில் அதற்கு பதிலடி கொடுத்தனர். பிரேமதாச பதவியில் அமர்ந்ததும் ஜே.பி.யினர் எனும் பேரில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இறுதியாக விஜேவீர கொல்லப்பட்டதுடன் ஜே.வி.பி.யின் அனைத்து வேலைகளும் முடக்கப்பட்டன. அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தனது மொழியில் கேம் ஓவர் ....



(Game over) என்றார்.

## அரசு-ஜே.வி.பி பேச்சுவார்த்தை

ஜே.வி.பி. தலைவர்களைப் பிடிப்பதற்கென்றே பிரேமதாச அரசாங்கம், "ஒப்பரேஷன் கம்பைன்ஸ்" எனும் இராணுவ உட்பிரிவொன்றை உருவாக்கியிருந்தது.

ஜே.வி.பி.யை முழுமையாக அழித்துவிடும் திட்டத்தை அரசாங்கம் மிகவும் தந்திரமாக செய்து வந்தது. பிரேமதாச பல தடவை ஜே.வி.பியுடன் தான் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாகவும் காலம் தாழ்த்த வேண்டாம் என்றும் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் இதில் உள்நோக்கம் இருக்கும் என்றும் தம்மை பிடிக்க விரிக்கும் வலை என்றும் நம்பி அசட்டையாக இருந்த ஜே.வி.பி.யின் தலைமை, பின்னர் பேச்சுவார்த்தைக்கு தாம் தயாரென ரகசியமாக சிக்னல் கொடுத்தது. "சலாகா" முதலாளி மற்றும் அமைச்சர் தொண்டமான் ஆகியோருரினூடாக இந்த முயற்சிகள் நடந்தன. முன் கூட்டியே செய்திருந்த ஏற்பாட்டின் பிரகாரம் 1989 ஒக்டோபர் 14ஆம் திகதியன்று ரம்பொட தோட்டத்திலுள்ள தொண்டமானின் வீட்டில் ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர் ஒருவர் மொழி பெயர்ப்பாளர் ஒருவருடன் அரசின் பிரதிநிதியான தொண்டமானுடனான பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இச்சந்திப்பில் ஜே.வி.பி.யினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளையும் முன்னேற்றத்தையும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அவ்வப்போது தெரிவித்து வந்தார் தொண்டமான். இப்பேச்சுவார்த்தை பற்றி ஜே.வி.பி.க்குள் முரண்பாடான கருத்தும் இருந்தது. குறிப்பாக அரசுடன் எந்த விதத்திலும் உடன்பாடொன்று காண்பது தேவையற்றது என்ற கருத்து பலமாக இருந்தது. இதன் காரணமாக நவம்பர் 8ஆம் திகதியன்று நடாத்தப்படவிருந்த பேச்சுவார்த்தை ஒத்திப் போடப்பட்டது. இந்த 8ஆம் திகதிக்கும் 12ஆம் திகதிக்குமிடையில் தான் ஜே.வி.பி.யின் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக இன்று தொண்டமானும் எதுவும் எதுவும் கூறப்போவதில்லை. ஜே.வி.பி.யும் இதனை ஒப்புக்கொள்ளப் போவதில்லை. பிரேமதாசவும் உயிருடன் இல்லை. ஆனால் உள்ளளவில் தொண்டமானுடனான இப்பேச்சுவார்த்தை தான், தமது தலைவர்கள் வலையில் அகப்பட காரணமாக இருந்திருக்கிறது என்பதை கட்சியின் தலைவர்கள் பலர் நம்பி வருகிறார்கள்.

## அரசு விரித்த வலையும் காட்டிக் கொடுப்பும்

இந்த நிலையில் தான் டீ.எம்.ஆனந்த கைது செய்யப்பட்டார்.

ஜே.வி.பி.யின் தலைமையை ஒழித்துக் கட்டுவதாயின் அதன் தொடர்பு வலைப்பின்னலை தேடிக்கண்டு பிடிக்க வேண்டும் என ஒப்பரேஷன் கம்பைன்ஸ் தீர்மானித்திருந்தது. அதன்படி ஏலவே கிடைத்திருந்த தகவல்களின்படி மூவர் இலக்கு வைக்கப்பட்டனர். சோமவங்ச அமரசிங்க, கதுருபொகுணு மற்றும் டீ.எம்.ஆனந்த ஆகியோரே அவர்கள். கதுருபொகுணுவுக்கும் ஆனந்தவுக்குமிடையிலான தொடர்பு ஆனந்தவின் டிரைவருக்கூடாக நடப்பதாகத் தெரிய வந்தது. பிலியந்தலையில் வைத்து கதுருபொகுணு பிடிக்கப்பட்டார். அவரின் தகவலின் பின்னர் தான் டீ.எம்.ஆனந்த கொழும்பு மாவட்ட ஜே.வி.பி.யின் தலைவர் எனப் பாதுகாப்புப் பிரிவினருக்கு தெரியவந்தது.

படையினரின் அடுத்த நாடகம் ஆரம்பமானது. கதுருபொகுணுவுடன் வேடமணிந்து சென்ற இராணுவ கப்டனை டீ.எம்.ஆனந்தவின் டிரைவரிடம் அவர் தலைவரிடமிருந்து ரகசிய தகவல் ஒன்றை கொண்டு வந்திருப்பதாகவும் ஆனந்தவிடம் இதனை ஒப்படைக்க அழைத்துச் செல்லும்படியும் கேட்கவே, அவரும் தெமட்டகொடைக்கு அழைத்துச் சென்றார். இலகுவாக படையின் வலையில் சிக்கிக் கொண்ட ஆனந்தவை மூன்று நாட்களாக கடும் சித்திரவதை செய்து உண்மையை கக்க வைத்தனர். ஜே.வி.பி.யின் தொடர்புகள் அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டன. அவர் வெளியிட்டிருந்த தகவல்களின்படி முதலில் பண்டாரவளையில் ரெஜினோல்ட் பெட்ரிக் எனும் பெயரில் இருந்து வந்த சோமவங்ச அமரசிங்க தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்தனர். ஆனால் அதற்குள் சோமவங்ச அமரசிங்க தப்பிப் போயிருந்தார். வீட்டை சல்லடைபோட்டு தேடிப் பார்த்ததில் ஆதாரங்கள் எதுவும் மிஞ்சியிருக்கவில்லை.

பல்லேகல படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆனந்தவை மீண்டும் சித்திரவதை செய்து உண்மையை வரவழைக்க முயற்சித்தனர். water treatment எனப்படும் தலைகீழாக தொங்கவிட்டு தண்ணீரில் தலையை அமிழ்த்தி வதை கொடுத்தனர். இறுதியில் விஜேவீரவின் இருப்பிடத்தையும் கக்கினார். எச்.பீ.ஹேரத் உட்பட இன்னும் பலரின் இருப்பிடங்களையும் டீ.எம்.ஆனந்த வெளியிட்டிருந்தார்.

## விஜேவீர பிடிபட்டமை

இத்தகவல் உடனடியாக தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டது. உலபனையில் அமைந்துள்ள விஜேவீரவின் இருப்பிடத்துக்குப் போகும் வழியை தெளிவாக ஆனந்தவுக்கூடாக அறிந்து சென்றனர்.

ஒப்பரேஷன் கம்பைன் பிரிவிலிருந்து ஒரு படையணி விஜேவீரவை பிடிப்பதற்கென்று

## அத்தநாயக்க எனும் விஜேவீர

ஒருவருடத்துக்கு கூடாத வகையில் இருப்பிடங்களை மாற்றி குடியிருந்து வந்த விஜேவீர உலபனை வீட்டுக்கு 1987 செப்டம்பர் 2ஆம் திகதியன்றிலிருந்து அத்தநாயக்க எனும் பேரில் தனது குடும்பத்துடன் குடியிருக்கத் தொடங்கியிருக்கிறார். பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்லுதல் உட்பட பத்திரிகைகள் தொடக்கம் ஏனைய வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குவது அனைத்தையும் முதிர்ந்த வீட்டு வேலையாள் ஒருவர் செய்து வந்தார். அத்தநாயக்க எவருடனும் வீணாக பேச்சு வைத்துக்கொள்வதில்லை. முதியவர் இல்லாத வேளைகளில் அக்கடமைகளை அத்தநாயக்கவே செய்வார். திருமதி அந்தநாயக்க பற்றி சுற்றார் நல்ல மதிப்பு வைத்திருந்தனர். உலபனை இருப்பிடத்துக்கு ஜே.வி.பி.யின் தலைவர்கள் நான்கு பேர் மட்டுமே வந்து போயிருந்தனர். தனது சிறு குழந்தை கூட தனது தகப்பனார் தான் விஜேவீர என்பதை அறியாது இருக்குமளவுக்கு இரகசியம் பாதுகாக்கப்பட்டிருந்தது.

ஒரு முறை ஜே.வி.பி.யின் இராணுவப் பிரிவான "தேஷப்பிரேமி ஜனதா வியாபார" (தேசாபிமான மக்கள் இயக்கம்) வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடையாள அட்டைகளை பறித்துக் கொண்டிருந்தனர். அத்தநாயக்கவிடமும் துப்பாக்கியைக் காட்டி அடையாள அட்டையைக் கேட்டு மிரட்டினர். வியாபார நடவடிக்கைகளுக்காக நாடு முழுதும் போய் வரும் தான் அடையாள அட்டையை தர முடியாது என வாதிட்டுள்ளார். இதன் மூலம் தெரிவது என்னவென்றால் கண்டி மாவட்ட ஜே.வி.பி. தலைவர் கூட தமது தலைவரின் இருப்பிடத்தை அறிந்திருக்கவில்லை என்பதே.

படிப்பகம்

www.padippakam.com



ன்றது.

சென் மேரி எஸ்டேட்டில் அமைந்துள்ள அந்த 'களாவின் சிகப்பு நிற வாயிற் கதவை தாண்டிச் ன்று கொண்டிருந்தது வாகனம். 1989 நவம்பர் ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி. விஜேவீர மை போல தனது பிள்ளைகளுடன் ஒன்றாக சையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டி-தார். திடீரென நுழைந்த வாகனத்திலிருந்து கமாக இறங்கிச் சென்ற படையினர் வீட்டை-விஜேவீரவையும் சுற்றி வளைத்தனர். சூழ்ந்து ாண்டவர்கள் கேள்வி எழுப்ப முன்னமே ஜேவீர அவர்களை நோக்கி கேள்வி எழுப்பி-ர்.

"என்ன இது..? என்னை என்ன செய்யப் ாகிறீர்கள்."

"ரோகண விஜேவீர! சரணடைந்து விடு."

"நான் விஜேவீர இல்லை. விஜேவீர என்பது ர்? உங்களது கணிப்பு தவறு என னைக்கிறேன். நான் அத்தநாயக்க. நன்றாகப் ருங்கள்." இவ்வாறு கூறியதும் கேர்னல் னக்க பெரேரா தனது 9 எம்.எம் பிஸ்டலை த்துக் கொண்டு முன்னே பாய்ந்து விஜேவீர-ன் தலையில் பிஸ்டலை வைத்து...

"நீ விஜேவீர அல்லவா...?"

அதிர்ச்சியை வெளியே காட்டாது மைதியாக. விஜேவீர

"நீங்கள் கண்டியிலிருந்தா வருகிறீர்கள்..?" ாக் கேள்வி எழுப்பினார்.

அது வரை இந் நபர் விஜேவீர தானா என்ற ந்தேகம் இருந்த படையினருக்கு இந்த ள்வியும் அதன் தொணியும் தமது இலக்கு தான் என்பதை நிருபித்தது.

"நான் உங்களோடு வந்து விடுகிறேன் எனது டும்பத்தவரை எதுவும் பண்ணி விடாதீர்கள்...." ன்று கூறி விஜேவீர இராணுவத்தினரின் ஹ.368 இலக்க வாகனத்தில் ஏறினார். ஜேவீர இருந்த வாகனத்துக்கு முன்னும் ன்னுமாக ஐந்து வாகனங்களில் படையினர் ன்றனர்.

வாகனம் கொழும்பு ஹெவ்லொக் டவுனில் மைந்துள்ள ஒப்பரேஷன் கம்பைன்ஸ் லைமையகத்தை அடைந்தது.

### சித்திரவதை தொடக்கம்.

அன்று இரவு முழுவதும் விஜேவீர ந்திரவதைக்குட்படுத்தப்பட்டார். எஞ்சிய-ர்கள் இருக்குமிடத்தைச் சொல்லுமாறு ப்புறுத்தினர். உண்மையில் விஜேவீரவுக்குக் ஏனையோரின் இருப்பிடங்கள் அனைத்தும் ரிந்திருக்கவில்லை. இரவு 12.45 அளவில் இரு டையினர் விஜேவீரவின் குடும்ப புகைப்படமொ-றைக் கொண்டு வந்து கொடுத்தனர். இப்போ-ா அடையாளம் கண்டு பிடிக்க முடியாதவகை-் தாடி மீசையில்லாமல் இருந்தார் விஜேவீர. டுத்த நாள் காலை 9.30 அளவில் விஜேவீரவின் ரல் ரேகைகள் பரீட்சிக்கப்பட்டடு அதன் முடிவு டைத்திருந்தது. அன்று முழுவதும் சித்திர-தை தொடர்ந்தது. இதன் போது தான் ஜே.வி.-பின் மத்திய குழு உறுப்பினர்களான கமநாய-கவின் இருப்பிடத்தையும் ஏனையோரது பரங்களையும் விஜேவீர வெளியிட்டார் என ரச யந்திரத்தின் காவல் நாய்களான தேசிய த்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்த ாதும் அது பொய் என்பது பின்னர் தான் பலரு-த் தெரிய வந்தது. கமநாயக்க பிடிபட்டிருந்த ாது பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வளியிட்ட செய்தியிலும் கமநாயக்கவை ஜேவீர தான் காட்டிக் கொடுத்ததாக ரிவித்திருந்தார். (15-11-1989 தினமின)

### பிரேமதாசவின் உத்தரவு

இறுதியாக, மேஜர் ஜெனரல் சிசில் வைத்தி-த்ன, பிரிகேடியர் சானக பெரேரா, பிரிகே-பர் லக்கி அல்கம, பிரிகேடியர் ஜயசுந்தர, ர்னல் பலகல்ல, மேஜர் தோரதெனிய, மேஜர் டுகம்பொல, கெப்டன் கபூர் ஆகியோர் விஜேவீ-வ என்ன செய்வது என்பது பற்றிக் கலந்துரை-டினர். பின்னர் அதைப் பற்றி ரஞ்சன் ஜேரத்னவுடன், சிசில் வைத்தியரத்னவும் வறு சில அதிகாரிகளும் கலந்துரையாடினர். து பற்றி கெசல்வத்தை (வாழைத்தோட்-த்தில்)யில் ஜனாதிபதியின் சொந்த வீட்டில் ருந்த ஜனாதிபதி பிரேமதாசவுடன் தொடர்பு காண்டு முடிவைக் கேட்டனர். அரசியல் ரீதியில் ற்படும் பிரச்சினைகளை தான் கவனித்துக் காள்வதாகவும் நேரத்தைக் கடத்தாமல் டனடியாக விஜேவீரவை முடித்து விடும் படியும் கசல்வத்தையிலிருந்து தகவல் வந்தது.

அதன்படி விஜேவீரவை கொல்லும் பாறுப்பை பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபூர், கர்னல் தோரதெனிய மற்றும் லெப்டினென்ட் கர்னல் ஒருவருக்கும் அளிக்கப்பட்டது.

அதுவரை விஜேவீர பிடிபட்ட தகவல் முழுவதும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. கள்விகள் பல கேட்கப்பட்டன. அவற்றுக்கு மைதியாக பதிலளித்தார் விஜேவீர. இறுதி-ல் ஒரு கடதாசியை வாங்கித் தனக்குள் டித்தார். பின் அதிலுள்ளபடி வீடியோ முன்னி-லயில் உரையாற்றப் பணிக்கப்பட்டார். மீண்டும்

எங்கே?" என கேட்ட கேட்டபோது.

"அப்படியான கேள்விகள் கேட்பது அர்த்த-மற்றது" என விஜேவீர பதிலளித்தார். அன்றிரவு 10.45 வரை கேள்விகள் கேட்கப்பட்டன. அப்போது பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்-னவும் வந்து சேர்ந்திருந்தார். 15 நிமிடங்கள் ரஞ்சன் விஜேரத்ன அவருடன் உரையாடியிருக்-கிறார்.

### விஜேவீர பிரிந்தார்.

விஜேவீரவை யு.ஹ.601 இலக்க இராணுவ வாகனம் ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. பொரல்-லையில் காசல் வீதிக்கு அருகில் உள்ள கோல்ப் மைதானத்தில் இலக்கம் 6 குழியருகில் வாகனம் வந்து தரித்தது.

பெரிய மரத்தினடியில் ரோகன விஜேவீர கொண்டு செல்லப்படடார். தனக்கு என்ன நடக்-கப்போகிறது என்பதை அவர் அறியாமலிருக்க நியாயமில்லை.

"இவனை உயிரோடு கொளுத்துவோம்" என ஒரு படையினன் கூறினான்.

"இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறாய். மரண பயம் உன்னை ஆட்கொள்ளவில்-லையா...?"

"இல்லை அப்படியொன்றையும் உணரவி-ல்லை. நான் எப்போதும் மரணத்தை எதிர்பார்-த்துக் கொண்டு தான் எனது கடமைகளை செய்து வந்திருக்கிறேன். எனது மரணம் எப்போது எங்கே நடக்கும் என்பதை மட்டும் தான் அறியாமல் இருந்தேன்...."

தன்னால் எதிர்த்தாக்குதல் நடாத்த முடி-யாத நிராயுதபாணியாக இருக்கும் நிலையில், சில மணி நேரங்களுக்கு முன்னர் வரை அடி உதை போன்ற வதைகளுக்கு முகம் கொடுத்த நிலையில், அந்த வலி கூட மாறுமுன்னர் தனது இறுதி நேரம் கிட்டிவிட்டது என்பதை தெரிந்த நிலையிலும் - ஆயுதமுனையில் அளிக்கப்பட்ட இந்த பதில் நிச்சயம் அந்த கொலைஞர்களைக் கூட ஆச்சரியப்பட வைக்காமல் இருக்க முடியாது.

கைத்துப்பாக்கியை எடுத்து முதலாவதாக சுட்டவன் கபூர், விஜேவீர அப்படியே சாய்ந்தார். துடிதுடித்துக் கொண்டிருந்தார்.

"ஹாங்...ஹாங்... டக்கென்று முடி..."

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தோரதெனிய தனது கைத்துப்பாக்கியால் விஜேவீரவின் நெஞ்சை தோட்டாக்கள் முடியும் வரை சுட்டுத் தள்ளி-னான். ரோகன விஜேவீர துடிதுடித்துக்கொண்-டிருந்தார். விடியற்காலை 3.00 மணிக்கு அந்த உடல் மைதானத்தக்கு பின்னால் அமைந்தி-ருந்த பொரல்லை கனத்தை மயானத்துக்கு அதே வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. ஏற்கெனவே அந்த வானத்தில் எச்.பீ.ஹேரத்தின் பிரேதமும் கிடந்தது.

இரண்டு பிரேதமும் பொரல்லை மயானத்தில் கேஸ்ஸில் எரிக்கப்பட்டன. எரிக்கும் கருவிக்கு விஜேவீரவின் உடல் தூக்கிப் போடப்பட்டபோது அவரது உயிர் முற்றாக போயிருக்கவில்லை.

### அரசின் பொய்ப் பிரச்சாரம்

விஜேவீரவை இத்தனை பயங்கரமாக, இரகசியமாக படுகொலை செய்த அரசாங்கம், விஜேவீரவை நவம்பர் 10ஆம் திகதியே கைது செய்திருந்த போதும், விஜேவீரவை கொலை செய்த அடையாளங்கள் முழுவதையும் அழித்-ததன் பின்னர் தான் (13ஆம் திகதி) அது பற்றிய தகவலை அறிவித்தது. 14ஆம் திகதியன்று சகல பத்திரிகைகளிலும் இதுபற்றிய தலைப்புச் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி இத்தகவல்களை வெளியிட்டி-ருந்தார். அத்தகவல்கள் அடுத்த நாள் பத்திரி-கைகளில் பின்வருமாறு வெளியிடப்பட்டிருந்தன.

" மக்கள் விடுதலை முன்னயின் தலைவர் ரோகண விஜேவீர நேற்றைக்கு முன்தினம் கம்பொல-உலபனவில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு கொழும்பிலுள்ள ஜே.வி.பி.யின் தகவல் மத்திய நிலையத்தை காட்டுவதற்கு வந்து கொண்டிருந்த போது அதே வாகனத்தில் கொண்டு வரப்பட்ட எச்.பீ.ஹேரத் படையினரின் துப்பாக்கியைப் பறித்து விஜேவீ-ரவை சுட்டுக் கொன்றார். ஹேரத்தை படையினர் சுட்டதில் ஹேரத்தும் கொல்லப்பட்டார். அவசர-கால சட்டத்தின் கீழ் அவர்களது இறுதிக் கிரியைகள் இராணுவத்தால் செய்து முடிக்கப்-பட்டது." இதன் மூலம் அரசாங்கம் "விஜேவீரவை பிடித்து விட்டோம். அவர் தனது ஏனைய தோழர்களை அரசாங்கத்துக்கு காட்டிக்கொ-டுக்க முயற்சித்த போது அவரது தோழர் ஒருவ-ராலேயே கொலை செய்யப்பட்டார். நாங்கள் கொல்லவில்லை." என்பதையே சாதிக்க விரும்பியது. ஆனால் பொதுவாக அரசின் இந்த கூற்றை பொது மக்கள் நம்பியிருக்கவில்லை.

விஜேவீர கொல்லப்பட்ட இரகசியம் முதன் முதலில் பாராளுமன்றத்தில் தான் அம்பலமா-னது. ஆனால் அதனையும் பல வதந்திகளில் ஒன்றென்றே பலர் கருதினர்.

### கொலை பற்றி பாராளுமன்றத்தில்...

1990 ஜனவரி 12ஆம் திகதி பாராளுமன்றத்-தில் ஹலீம் இஷாக் எம்.பி. பாதுகாப்பு அமைச்சரை நோக்கிப் பின்வரும் கேள்விகளை கேட்டார்.

"..நீங்கள் அவரைக் கொன்றீர்கள். கோல்ப் மைதானத்திற்கு கொண்டு வந்தீர்கள். 3.30 அளவில் இலக்கம் 6 கோல்ப் குழியினருகில் வைத்து கொன்றீர்கள்..."

"அப்படியென்றால் நீங்கள் நாட்டின் பாதுகாப்-புத்துறையின் அறிக்கையை நம்பவில்லையா..." என ரஞ்சன் விஜேரத்ன கேட்டார்.

"நீங்கள் விஜேவீரவைப் பிடித்து ஒப்பரேஷன் கம்பைன்ஸ் தலைமையகத்துக்கு கொண்டு வந்து விசாரித்து விட்டு, கொன்ற விடயங்கள் பொய்யில்லை... மோடல் பாம் வீதியில் வதியும் கோல்ப் கிளப் ஊனியர்கள் இச்சம்பவத்தைக் கண்டுள்ளனர் "என்றார். இதே விடயத்தை ஏற்கெனவே (1989 டிசம்பர் 4ஆம் திகதி) தகவல் குறைவாக என்றாலும் லக்ஷ்மன் ஜயக்கொடியும் அரசை நோக்கி கேள்வி எழுப்பியிருந்தார். (ஹன்சார்ட் - டிசம்பர் 4 1989 பக்கம் 933, 934, 1990 ஜனவரி 12 . பக்கம் 556-569)

ஜே.வி.பி. 1994 இன் பின்னர் மீண்டும் பகிரங்க அரசியலுக்கு வந்ததிலிருந்து இது வரை விஜேவீரவின் கொலை பற்றிய உண்மைகளை வெளிக் கொணரவென ஒரு ஆணைக்குழு விசாரணையை ஆரம்பிக்குமாறு பல தடவைகள் அரசாங்கத்தைக் கோரியிருந்தது. ஆனால் இது வரை அப்படி எதுவும் விசாரிக்கப்படவில்லை. மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ, ஸ்ரீமணியின் கணவர் லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜேகுமாரணதுங்க ஆகியோர் கொல்லப்பட்டமையை விசாரிக்க-வென ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்ட போதும், அரசியல் இயக்கமொன்றின் தலைவரது ரகசியம் நிறைந்த படுகொலையை விசாரிக்க எந்த விசாரணையும் மேற்கொள்ளாதது ஏன்? ஜனாதிபதி சந்திரிகா, ஜனாதிபதித் தேர்தலின் போது தனது பிரச்சாரத்துக்கென தனது புகைப்-படத்துடன் விஜேவீர, விஜயகுமாரணதுங்க, கொப்பேகடுவ, பிரேமதாச என எல்லோரது புகைப்படங்களையும் போட்டு போஸ்டர் ஒட்டியி-ருந்தார். தான் ஆட்சிக்கு வந்தால் இவர்கள் கொல்லப்பட்டமை பற்றி விசாரணை செய்வதா-கவும் வாக்குறுதி அளித்திருந்தார். இன்று ஏனைய அனைத்து வாக்குறுதிகளைப் போலவே இதுவும் போலி வாக்குறுதியாகப் போனது.

ஆனால் இந்த அரசாங்கமும் இன்று ஜே.வி.-பி.யின் நடவடிக்கைகளை ஆராய்வதற்கென விசேட பிரிவொன்றை 1995ஆம் ஆண்டு உருவாக்கி ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் பற்றியும் அதன் அங்கத்தவர்கள் குறித்தும் தகவல் சேகரித்து வருகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் தற்போதைய ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவங்ஷ "இனி ஒரு போதும் ஜனநாயக பாதையை விட்டு விலகிப் போவதில்லை என்றும் பாராளுமன்ற வழிமுறை-யில் தாங்கள் இயங்கவே விரும்புவதாகவும் கருத்து வெளியிட்டிருக்கிறார். இது ஒரு வித தந்திரோபாய கருத்தாக இருந்தாலும் யாருக்கு தந்திரோபாயம் என்ற கேள்வி எழுகின்றது. (அரசுக்கு இந்த பாட்சா எல்லாம் பலிக்காது.) மக்களுக்கு தமது வேலைத்திட்டம் பற்றி என்ன கூறப் போகிறார்கள் என்பதும், என்ன அடிப்படை-யில் அணிதிரட்டப் போகிறார்கள் என்றும் கேள்வி எழுகின்றது. கொல்லப்பட்ட ஆயிரக்-கணக்கான கட்சித் தோழர்கள் தங்களை தியாகம் செய்தது எதற்கு என்ற கேள்விக்கு ஜே.வி.பி.யால் என்ன பதில் கூற முடியுமோ தெரியாது?

**-கோமதி**



முன்னாள் மிலிட்டரி பொலிஸைச் சேர்ந்த படப்பிடிப்பாளர் இந்திரானந்த டி சில்வாவால் எடுக்கப்பட்ட புகைப்படம்.



அப்புகைப்படம் ஓவியர் ஒருவரிடம் கொடுக்கப்பட்டு தாடி மீசை என்பவை வரையப்பட்டு விஜேவீர என நிருபிக்கப்பட்ட புகைப்படம் இது

## ரகசியம் வெளியிட்ட படையினன்!

ராகுபத்த கங்கானம்கே இந்திரானந்த டி சில்வா என்பவர் தான், விஜேவீரவை இறுதியாக படமெடுத்தவர். இராணுவப் பொலிஸ் (military police) ஐச் சேர்ந்த இவர், அக்காலப்பகுதியில் படையினரால் கொல்லப்பட்ட இளைஞர்கள் பலர் கொல்லப்படுவதற்கு முன்னரும் கொல்லப்பட்டபின்னரும் புகைப்படம் எடுக்க வேண்டியது இவரது கடமை. பிற்காலத்தில் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவை கொல்ல சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 15 வருட சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவர். கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதியன்று அவர் வழக்கறிஞருக்கூடாக ஒரு வாக்குமூலத்தை வெளியிட்டிருந்தார். அவ்வாக்குமூலத்தில் பல உண்மைகளை வெளியிட்டிருந்தார்.

"...அன்று 1989 நவம்பர் 12ஆம் திகதி. நான் தூங்கிக் கொண்டிருந்த போது 11 மணியளவில் எமது படையைச் சேர்ந்த கப்டன் ஒருவர் வந்து என்னை எழுப்பினார். ஒரு அவசர கடமைக்காக ரகசியமாக தன்னுடன் புறப்பட்டு வரும்படியும். வெளியில் வாகனம் நிற்பதாகவும் கெமராவை எடுத்துக்கொண்டு வரும்படியும் கூறினார். அந்த முகாமிலிருந்து ரகசியமாக நாங்கள் இருவரும் வெளியேறினோம். தற்போதைய பணி குறித்து எந்த ஒரு போதும் வாய் திறக்காதிருக்கும்படியும் உத்தரவிட்டார். கொழும்பு திம்பிரிகஸ்யாயவில் அமைந்தள்ள ரகசிய நடவடிக்கை இணைப்பு செயலகத்தை அடைந்தோம். மேல் மாடியில் சிரேஷ்ட அதிகாரிகள் 15 பேர் அளவில் கூடியிருந்தனர். கைது செய்யப்பட்டிருந்த நபரொருவரும் மேல்மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் அளிக்கும் வாக்குமூலமும் வீடியோவில் பதிவாகிக்கொண்டிருந்தது. அப்போது தான் நான் தெரிந்து கொண்டேன் அவர் வேறு யாருமல்ல, ஜே.வி.பியின் தலைவர் ரோகண விஜேவீர என்பது. அதன் போது நான் அவரைப் பல கோணங்களில் எட்டுப் புகைப்படங்கள் எடுத்தேன். வீடியோ செய்து கொண்டிருக்கும் போதே அதிகாரிகள் அவரிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் அதற்கு அவருக்கேயுரிய முறையில் பதிலளித்துக்கொண்டிருந்தார். பல கொலைகளுடன் எவ்வாறு தமது கட்சித் தோழர்கள் வீணாக குற்றஞ்சாட்டப்படுள்ளனர் என்பதை விளக்கினார். ஐ.தே.கவின் திட்டமிட்ட செயற்பாடுகள் தம்மை தலைமறைவுக்கு இட்டுச் சென்றதைப் பற்றியும் விரிவாக விளக்கினார். இதே வேளை நான் அதே கட்டிடத்தில் கீழ் தளத்தில் இன்னும் ஒரு நபரை புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தேன். அவர் தான் ஜே.வி.பி.யின் அரசியல் பிரிவைச் சேர்ந்த எச்.பீ.ஹேரத். மிகவும் வதைபுரியப்பட்ட நிலையில் இருந்த அவரை புகைப்படம் எடுக்க மிகவும் சிரமப்பட்டேன். அவரது உடலை ஒழுங்காக நிறுத்தி வைக்கக் கூட சிரமப்பட்டோம்.

சில மணி நேரத்துக்குப் பின் விஜேவீரவின் கண்களும் கைகளும் கட்டப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டு பொரல்லையில் காசல் வீதிக்கருகிலுள்ள கோல்ப் மைதானத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்."

நியாயமான விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்படும் பட்சத்தில் இவ்வுண்மைகளை தான் வெளியிடத் தயாராக இருப்பதாகவும், பல புகைப்படங்கள் அடங்கிய ஆதாரங்கள் பலவற்றையும் [illegible] தான் ஒப்படைப்பதாகவும் இவர் தெரிவித்திருக்கிறார்.

www.padippakam.com



# மனிதர் செய்யும் ஈனங்கள் அவர்கள் இறந்த பின்பும் நிலைக்கும்!

"அதே வேளை. அவர்கள் புரியும் நன்மைகள் அநேகமாக அவர்களின் மறைவோடு மறைந்து விடும்."

இந்த மேற்கோள் உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். நீங்கள் எமக்கு சமாதானம் கிடைப்பதற்கு அயராது பேசி வருகிறீர்கள். எவ்வாறு அதனை அடைய வேண்டும் என நீங்கள் கொண்டுள்ள சிந்தனையை உலகில் எட்டுத் திக்கிலும் எடுத்தியம்பி வந்துள்ளீர்கள். அரசியல் உங்கள் குரு ஆக விளங்கியவரும் உங்களை அரசியலில் பிரபல்யம் பெறச் செய்தவருமாகிய நீலனின் மறைவுக்குப் பின் நீங்கள் இராஜதந்திரிகளை அழைத்து ஆற்றிய உரையில் அவரை நன்றாக புட்டுக்காட்டியுள்ளீர்கள். பயங்கரவாதிகளுக்கும், தமிழீழ விடுதலைப்புலியாகிய பித்தர்களுக்கும் எதிரான பிரதான பீரங்கியென உங்களை பல்வேறு மட்டங்களிலுள்ள மக்கள் தவறாக எண்ணினர். வெளிநாட்டமைச்சராக பதவியேற்ற ஆரம்ப காலத்தில் நீங்கள் விடுதலைப்புலிகளை "சுதந்திர போராளிகள்" என வர்ணித்திருந்தீர்கள். பண்பாட்டின் இருப்பிடமாக அன்று உங்களை சித்தரித்தீர்கள். உயர்ந்த பண்பாட்டுடன் கூடிய அரசாங்கமொன்று எவ்வாறாயிருக்க வேண்டுமோ என எடுத்துரைத்தீர்கள். அவ்வாறான நிலையிலிருந்து எவ்வித பிசக்கேனும் ஏற்பட்டால நீங்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேற தயங்கப் பொவதில்லையெனக் கூறிவைத்தீர்கள். அவையெல்லாம் பட்டவர்த்தனமாக தூக்கி வீசப்பட்டுள்ளன.

நாம் கடந்த 41/2 வருடங்கள் கண்டது தான் என்ன? எந்த ஒரு அம்சத்திலும் முன்னைய எல்லா அரசாங்கங்களும் இழைத்த எல்லா துரச்செயல்களின் கூட்டுத்தொகையையும் இந்த அரசாங்கம் மிஞ்சியே விட்டது. நாட்டில் இரத்த ஆறு ஓடுகிறது. மனித உரிமை மீறல்கள் விதிவிலக்கன்றி விதியாகி விட்டன. விதிவிலக்காக மீறல்கள் ஏதும் இல்லாதிருந்தால் அது சாதாரண நாளாந்த நடைமுறைக்கு வேறென காலப்பகுதியைச் சார்ந்ததாயிருக்கும். நீங்களோ "ஈனங்களைப்பார்க்காதே ஈனங்களைச்செவிமடுக்காதே" எனும் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள் செம்மணிப்புதை குழியிலிருந்து இறைப்படும் எழும்புக்கூடுகளுக்கு உங்கள் மௌனம் ஏனோ?

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அமெரிக்க அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட போது, நீங்கள் அதற்கான தளகர்த்தன் என வானளாவைபுகழப்பட்டீர்கள். ஆனால் பின்பு சந்தேகங்கள் வெளிவந்தன. அதாவது. உங்களால் ஒதுக்கி விடப்பட்டவராகிய தனபால (பிரபல்ய இராஜதந்திரி ஜயந்த தனபால என்பவர்மு) தான் இதன் காரணகர்த்தா என தெரிய வந்தது. (தனபால ஐ.நா. ஸ்தாபனத்தினால் பின்பு பெரிதும் கௌரவிக்கப்பட்டவர்)

ஆனால் செய்திமடல்கள், கிளிண்டன் தம்பதியினரின் நெருங்கி நண்பராக விளங்கிய நீலனையே அந்த பெருமை சாரும் போல தோன்றுகிறது. நீலன் ஒரு தலை சிறந்த மூளைசாலி, இந்த நாட்டில் சமாதானம் மலரச் செய்வதற்கு வேண்டிய அறிவு. ஆற்றல், செல்வாக்கு யாவும் அவரிடம் இருந்தது. ஆனால் அவரோ தமிழரை தவறாக எடை போட்டிருந்தார். அவர் ஒரு கொழும்புத் தமிழர். வடக்கு கிழக்கு தமிழர்களுடன் நேசபாசமற்ற வேரறுந்த நிலையில் இருந்தவர். அவருக்கு கொழும்பில் உள்ள மேட்டுக்குடியினருடன் தான் கூடுதலான தொடர்பு இருந்தது. இவர்களில் சில தமிழ் பச்சோந்திகளும் அடங்குவர். தமிழ் மக்களின் "அநியாயமான" கோரிக்கைகளைக் கண்டனம் செய்யும் "நியாயமான தமிழனாக திகழும் செல்வாக்கான நிலைக்கு நீலன் தாவிச் சென்றுள்ளார். நீங்கள் அவரின் சிறந்த சீடனாகவும் இடித்துரைக்கும் பக்குவம் பெற்றவராகவும் வளர்ந்துள்ளீர்கள். அதற்கும் மேலாக அவரை வெளிநாட்டமைச்சின் ஆலோசகராகவும் கொண்டிருந்தீர்கள். இந்த நிலையில் சில வெளிநாட்டு அரசாங்கங்கள் அவரை சட்டபூர்வமற்ற வெளிநாட்டமைச்சராக கருதின. நீங்கள் பெரும்பாலும் அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டியிருந்திருக்கும்: அல்லாவிட்டால் உங்கள் பட்டம் பதவிக்கே ஆபத்து நேர்ந்திருக்கும் நிலைமைகளை மக்கள் நன்கு பகுத்தறியக் கூடிய அத்தனை அறிவாற்றல் படைத்த, நீலன் தமிழீழ விடுதலைப்புலிகளை சரியாக எடை போடத்தவறிவிட்டார். அது தான் அவரின் அகால மரணத்திற்கு காரணமாகும்.

மேலும் நீலன் தான் உள்ளூரில் இயங்கும் இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் உந்து சக்தியாக விளங்கியவர். இனத்துவ சிறுபான்மையின் மக்கள் தொடர்பான சர்வதேச அமைப்பிலும் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார். அவ் அமைப்பானது, பெண்கள் உரிமை, மற்றும் பெண்களுக்கெதிரான புறக்கணிப்புகள் போன்ற விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. அத்தகைய நிலையிலிருந்த அவருக்கு வெகு அவதானமாக, பாரபட்சமற்ற முறையில் தமிழ் மக்களின் மனக்குறைகள், பிரச்சினைகளை எடுத்துரைத்து, சாதாரணமான தீர்வினைக் கொண்டு வருவதற்கு சந்தர்ப்பம் இருந்தது. ஆனால், செம்மணியில் தோண்டி எடுக்கப்படும் எலும்புக் கூடுகளோ. மன்னாரில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கோரமாகக் கொலை செய்யப்பட்ட ஜீடாகமலிற்றா பற்றியோ நீலன் மூச்சும் விடவில்லை. ஏனென்றால் அவர் தானொரு "நியாயமான தமிழன்" என்ற பெயரைப் பேணுவதிலேயே பெரும்பாலும் கவனமாயிருந்திருப்பார். (கமலிற்றாவின் உடலில் 18 அடி காயங்கள்-ஈற்றில் அவர் பெண்குறியூடாக வேட்டுத்தீர்க்கப்பட்டே இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்) தமிழர்கள் கொலை செய்யப்பட்டாலென்ன, எக்கேடு கெட்டாலென்ன, அரசாங்கத்துடன் பகைத்துக் கொள்ளக் கூடாதென்பதே அவரின் நோக்கமாயிருந்தது. தமிழ் மக்கள் தமது வீடுவாசல்களுக்குத் திரும்புவதற்காகவும், இராணுவத்தின் கட்டுப்பாடற்ற இடங்களுக்கு உணவு விநியோகம் செய்வதற்காகவுமான பாதை திறக்கப்படுவதை தமிழீழ விடுதலைப்புலிகள் தடுத்ததையிட்டு நீங்கள் அடைப்பட்டிருக்கும் உங்கள் உடன்பிறப்புகளாகிய தமிழர்களுக்கு உணவு வழங்குவதற்காக எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும் கூட நீங்களும் உங்கள் இராணுவம் பிய்த்துக் கொண்டு அங்கு சென்றடையப் போவதாக ஆத்திரமாக முழங்கியிருந்தீர்கள். ஆனால் நீங்கள் தரும் சிந்தனையால் உந்தப்பட்டதால் இரண்டொரு முக்கியமான விடயங்களை மறந்து விட்டீர்கள்.

(அ) பாதை யாரால் மூடப்பட்டது.? நிச்சயமாக இராணுவத்தினரால்-புலிகளால் அல்ல.

(ஆ) உங்கள் முழு படைபலமும். ஏன் பின்பு இந்திய இராணுவம் கூட (புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு) இடித்துக் கொண்டு செல்ல முடியாமற் போனதை மறந்துவிட்டு நீங்கள் பத்திரிகைப் பிரசாரத்திற்காக மட்டும் அவசரப்பட்டு எதை எதையோவெல்லாம் கதைத்து விட்டீர்கள்.

இறுதியில் பாதை திறக்கப்பட்ட போது ஆயுதப் படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நேருக்கு நேர் சந்தித்து எல்லைக் கோட்டையும் பரஸ்பரம் ஏற்றுக் கொண்டனர். துயருறும் மக்களுக்காக நீங்கள் திடீரென அக்கறை காட்டி, பலத்காரமாக நுழைய எடுத்த முயற்சி முயற்சிபலிக்கவில்லை. அது பலிக்காதென்பது உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதான தீர்வினைக் காண்பதற்கு நீங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாக வுடே தொலைக்காட்சியில் ஒரு முழு அளவிலான விவாதம் நடத்த இணங்குவீர்களா? விவாதத்தினை ஆங்கிலத்திலேயே நடத்தலாம். ஏனென்றால், தமது அடையாளத்தை உலகில் எங்காவது பண்டமாற்று செய்யாமல் தமது பிறந்த நாட்டில் அவருக்கும் சமனான பிரசைகளாக வாழவிரும்பும் தமிழ் மக்கள் நலன் மீது கொண்டுள்ள அக்கறை உங்கள் தமிழ்மொழி புலமையும் சமனானதாகும். 1999 ஆவணி 15-22 தினமுரசு பத்திரிகையில் 7ம் பக்கத்தில் வெளியாகிய கட்டுரையின் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பித்து வாசியுங்கள் உங்கள் தமிழ் வாசிக்க முடியாத படியால் மொழிபெயர்ப்பு அவசியம் தானே. நீலன் போன்றவர்களுக்கு இது தான் வரலாற்றின் தீர்ப்பு ஆகும்.

நன்றி : சண்டேலீடர்.

# திட்டமிட்ட குடியேற்றத்துக்கு வயது 50

இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிற் இடையே கசப்புணர்வை மிகப் பெரியளவில் ஏற்படுத்திய நிகழ்வுக்கு தற்போது 50 வயது ஆகின்றது. கிழக்கு மாகாண மண்ணை அபகரிக்கும் கபட நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டத்தின் சிற்பியாக டி.எஸ்.சென நாயக்கா விளங்கினார். அவரைத் தொடர்ந்து பல சிங்கள பௌத்த பேரினவாதிகள், பசுத்தோலை போர்த்த் புலிகளாக அவரின் அடிச்சுவட்டை பின்பற்றி வருகின்றனர்.

கல்லோயாவில் தொடங்கிய நில அபகரிப்பு நடவடிக்கைகள், இன்று காரை நகர் வரை விரிவடைந்து சென்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் தமிழ் மக்கள், பெரும்பான்மையாக வாழ்ந்த நிலப்பகுதியாகும். இன்று தமிழ்மக்கள், சிறுபான்மையாக சுருங்கியுள்ள நிலை அம்பாறை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட விமான நிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்டம் தமிழ் மக்கள் பரந்து வாழ்ந்த பிரதேசமாகும். இங்கும் குடியேற்ற விசவிதைகள் திட்டமிட்டு துவட்டப்பட்டது. விளைவு இம்மாவட்டத்தில் தமிழ் பாரம்பரிய பூமி கரைந்து சேரவிலை என்ற குறைமாத குழந்தை ஒன்றை சிங்கள பௌத்த பேரினவாதம் திருகோணமரை மாவட்டத்தில், பிரசவித்தது. இக்குழந்தைக்கு சகலவிதமான அரச ஆதரவும் வழங்கப்பட்டு இன்று திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிலை நிறுத்தும் தொகுதியாக இத்தொகுதி உள்ளது. தமிழ் மக்களின் தலை நகரமாக விளங்கிய திருகோணமலை, தமிழ் மக்களுக்கு உரிய பகுதி இல்லை என்கிறது.

### சிங்கள பேரினவாதம்

திருகோணமலை மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் புதிய,புதிய சிங்கள கிராமங்கள் உருவாக்கப்பட்டு அதற்கு பாதுகாப்பு வழங்கி தமிழ் மக்களின் மண் பறிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தமது நிலக்கொள்ளை நடவடிக்கையில் ஈடபட்ட இலங்கை அரசு காலப்போக்கில் வடக்கையும், கிழக்கையும் பிரித்து வைக்கும், நடவடிக்கையிலும் ஈடுபட்டது. வெலிஓயா போன்ற நடவடிக்கைகள் இத்தகைய நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

வடபகுதியில் இராணுவ நோக்கத்திற்காக பெருமளவு நிலப்பகுதி கபளீகாரம் செய்யாதுள்ளது. இலங்கை அரசு வலிகாமம் பகுதியில் குடிமக்கள் வாழ்ந்த வளம் மிகுந்த நிலப்பரப்பு கொள்ளையிடப்பட்டுள்ளது. யுத்தம் என்ற போர்வையில் இவை மிக நுட்பமாக மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. காரை நகர் பகுதியில் கூட ஏராளமான ஏக்கர் நிலம் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடகால உள் நாட்டு யுத்தத்தை தமக்கு சாதகமாக்கிய இலங்கை அரசு எந்த வளிகளில் குடியேற்றங்களை மேற்கொள்ளளாமோ, அந்த வளிகளை பின்பற்றி குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றது. யுத்தம் நடைபெறும் பகுதிகளில் தமிழ் மக்களை விரட்டிவிட்டு அப்பகுதிகளில், இராணுவ வீரர்களை நிலைநிறுத்தி தமது நிலப்பறிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தமிழர் தாயகம் இன்று சிங்கள அரசின் குடியேற்றத்தாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும், உருக்குலைந்து போய் கிடக்கிறது. வடபகுதியில் இருந்து 48,000 தொன் மீன்கள் தென்பகுதிக்கு முன்னைய காலத்தில், ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இன்று 400 தொன் மீன்களே ஏற்றுமதி செய்யப்படுகிறது. வாழ்க்கை சுமை தாங்க முடியாது தென் இலங்கை மக்கள் திண்டாடுகின்றார்கள். வடக்கு கிழக்கு பகுதியில் தமிழ் மக்கள் அமைதியான முறையில், தமது வாழ்வை நடத்துவார்கள் ஆயின் அது தென் இலங்கை மக்கள் சிறப்புடன் வாழும் நிலை ஏற்படும். வடக்கு கிழக்கு பகுதியில் இருந்து நெல், மீன், வெங்காயம், பழங்கள், உபதானியங்கள் தென் இலங்கை நோக்கி பெருந்தொகையாக வரும் நிலையும் ஏற்படும்.

இலங்கை அரசு இலங்கை மக்களின் துயரவாழ்வை பெரிதுபடுத்துவதாக இல்லை. யுத்தத்தில் இறக்கும் தென் இலங்கை இளைஞர்களின் உயிர்களை கூட பெரிது படுத்தவில்லை. மாறாக இறந்த இளைஞர்களின் நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்த முண்டி அடிக்கிறது.

பிரித்தானியர் இந்த நாட்டை விட்டு போன பின்பு இலங்கை அரசு எதை மறந்தாலும் தமிழ் மக்கள் மீது துரோகம் புரிவதை என்றும் மறக்கவில்லை. முதலில் நிலத்தில் கை வைத்தது, மொழியிலும் கைவைத்ததது, வேலைவாய்ப்பில் கைவைத்தது, வர்த்தக நடவடிக்கைகளில் கைவைத்தது, கல்வியில் கைவைத்தது. இன்று தமிழ் மக்களை முழுமையாக அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கல்லோய குடியேற்றத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவு விழா அண்மையில் அரசதரப்பில் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. நிலத்தை இழந்த தமிழ் தேசிய இனம் எவ்வளவு துயரப்படும் என்பதை அரசு சிறிது கூட சிந்திக்கவில்லை. தமிழ் மக்களின் நிலங்களை பறிப்பதில் கருத்தாக இருக்கும் இலங்கை அரசு, தென் பகுதி நிலங்களை அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு தாரைவார்த்து வருகிறது. இதன் விளைவை தென் இலங்கை மக்கள் உணரத் தொடங்கும் போது, இலங்கை ஆண்ட அரசுகளின் துரோகத் தனங்கள் அம்பலத்துக்கு வரும்.

## உனக்கு எது சொந்தம்

தமிழா நீ யார்?
ஏன் கலங்குகிறாய்?
உனக்கு எது சொந்தம்?
பேசடா! ஏன் கலங்குகிறாய்

தமிழ் எனும் போர்வைக்குள்
தவளும் நீ
ஏங்குகிறாய்
சமாதானம் பெற்றிடவே
உன் சமாதான எண்ணம்
எப்போதும்
விடைக்காண விடுகதைதான்

சிந்தித்துப்பார்! உனக்கு
எது சொந்தம்
செம்மணிப் புதைகுழிதான்!
அதுவும்
விசாரணை எனும் பெயரில்
களவாடப்படுகிறது!

நீ என் செய்வாய்?
பாவமடா தமிழா நீ
பாரினில் பாவம் செய்த
ஆத்மா நீ மட்டும் தான்!

ஆனால்
நீ துவண்டு விடாதே
துணிந்து செயற்படு நீ
கை கோர்த்துச் செல்
கயவர்களை வென்று
செல்

இளையதம்பி பிரதாபன்
வி.சி. வீதி, வந்தாறுமுல்லை.

## ஜன/பன—நாயகம்

சந்தியிலே நாறுதடீ
ஜன நாயகம் - ஆமா
பண நாயகம்! - நாம
முந்திவந்து உணராட்டீ
முழு நாசன்டீ! - நாடு
முழு நாசன்டீ

தேர்தல் ஓட் டுஎல்லாமே
தெருக் கூத்துடீ! - தேஞ்ச
செருப் பேடீ! - நாம
ஓரணியில் திரளாட்டீ
உருப் படாமூடீ! - நாடும்
உருப் படாதேடீ.

காசுபண முள்ளோர்க்கே
கை கொடுப்புடீ! - நமக்கோ
கை விலங்குடீ! - தலைவர்க
வேஷம்போட் டுமுன்வந்தே
வெறும் நடிப்பேடீ! - நம்பி
வீணாணோண்டீ

அரிசிதான்யம் பாஷைண்ணு
புரி யாமலே - ஓட்டு
போட் டுநாமடீ! - இப்போ
தெருச்சிரிப்புக் காளானோம்
தேஞ் சசெருப்பா! - ஐயோ
மூஞ் சைமூடுடீ

தொழிலாளியும் விவசாயியும்
தோ ழராகக் - கூடி
தோள் உயர்த்தி - இங்கே
வழிபுதுசாக் காணாட்டீ
வக் கிரமேடீ! - சூழல்
சக் கரந்தாண்டீ

கண்டி எம். ராமசந்திரன்

படிப்பகம்

www.padippakam.com



# கதிர்காமர் ஏன் ஆவேசப்படுகிறார்!

மகாத்மா காந்தியை இந்திய மக்கள் விபுனைந்து வாழ்த்திய பாணியில் "கதிர்காமர் பால் ஒரு காந்த சொரூபனை காண்பது ளிதாமோ" என சிங்கள இனவாதிகள் மைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை வானளாவப் கழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதாவது அவர் ண்மையில் ஐ.நாவில் ஆற்றிய உரையிலும் தனைத் தொடர்ந்து பத்தரிகையாளர் த்தியில் ஆற்றிய உரையின் போதும் லங்கையில் தமிழ் இனப்பிரச்சனையில் றிப்பாக ஐ.நா எங்களுக்கு யார்? நாங்கள் வர்களுக்கு நிதி வழங்கி உதவுகின்றோம் e are their pay masters) என்றெல்லாம் B.Cக்கு அளித்த பேட்டியிலும் ஐ.நா.வின் து பறக்க அறைந்துள்ளார்.

### சந்திரிகாவின் மிக சிறந்த விசுவாசி

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு கக் கூடுதலான விசுவாசமான உழைப்பவர் மைச்சர் கதிர்காமர் என்று சொன்னால் அது கையல்ல. உண்மையில் அவா ஆற்றிய ஐ.நா. ரையினை பார்க்குமிடத்து சந்திரிகா அம்மையாரே அதிசயப்படக் கூடிய அளவிற்கு அது த்திரம் கொண்டதாயிருந்தது. அது மட்டுமல்மல் அவர் பௌத்தத்தின் மகிமையைபற்றி ட ஒரு மலைப்பிரசங்கத்தையே செய்து ட்டார். ஆனால் பௌத்தம் ஒரு மதமேயல்ல, து ஒரு அருமையான தத்துவம். சிறந்த ழ்கை நெறி: அதனை ஆட்சியாளர் சரியாக டைப்பிடித்தால் இந்த யுத்தமே இருக்க டியாது. அதை விடுத்து அதனை ஒரு மதம் ர்று கற்பித்து மமதை கொண்டு சிங்கள ளத்த பேரினவாதம் கோலோச்ச ஜனதிபதி திரிக்காவும் விரும்பியோ விரும்பாமலோ வ்வழி செல்பவர் என்பதை எந்தவொரு ரசியல் மாணவனுக்கும் தெரிய வேண்டும்.

### அடிமைத்தனத்தின் விளைவுகள்

ஆனால் சிங்கள பௌத்த பேரினவாதத்குகு தலைவணங்குவது அமைச்சர் கதிர்காக்கு ஒரு பிரச்சினையே இல்லை எனலாம். 450 டகாலம் அந்நிய ஆட்சியின் கீழ் அடையாளளை துறந்து ஆங்கிலம் மூலம் அந்தஸ்து ற்ற அங்லோ-சக்ஸன் சமுதாயம் மூழ்கியுள்ள மை தன்மையிலிருந்து விடுபடுவது அவ்வளவு குவான காரியமல்ல.

அமைச்சர் கதிர்காமர் போன்றோர் அதற்கு விதிவிலக்காயிருக்க முடியாது என்பதையே காணக்கூடியதாயுள்ளது. சமுதாயத்தில் மிக உயர்ந்த அந்தஸ்த்தில் உள்ளவர்களிடமே இந்த அடிமைத்தன்மை மிக மோசமாயுள்ளது என ஒரு அரசியல் அவதானி அன்று கூறியது தான் ஞாபகத்திற்கு வருகின்றது. "நீங்கள் ஒரு தமிழராயிருந்தும் உங்கள் நிலைப்பாடு காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் ஒரு துரோகியென கருதப்படுகின்றீர்களே" என B.B.S நிருபர் முன்வைத்த வினாவுக்கு அமைச்சர் கதிர்காமர் அளித்த பதில் சுவையானதாகும். "அதனை நான் சிறிதேனும் பொருட்படுத்தப் போவதில்லை. இன உணர்வினை அதிகளவில் பிரயோகிப்பது கேடானது" Ethnicity overdone destructive என்பது அவர் ஆங்கிலத்தில் அளித்த பதிலாகும். சிங்கள பௌத்த பேரினவாதம் மலையளவு இருந்தாலும் அது ஒன்றும் பிரச்சினை இல்லை. அதற்கு வக்காளத்து வாங்கி கொண்டிருப்பது ஒரு பிரச்சினையே இல்லை. இனவாத ஆங்கில/ சிங்கள நாளேடுகளில் கொட்டை எழுத்துக்களில் தலையங்கம் பொறித்து போற்றி புகழ்பாடுவது என்றால் அது எல்லோராலும் எட்டக்கூடிய விடயமா? கதிர்காமர் ஒரு நியாயம் தெரிந்த மனிதன். அவர் ஒரு கனவான் என்றெல்லாம் பேராசிரியர் நலின் டி சில்வா போன்ற சிங்கள வீரவிதான பிரமுகர்கள் கூட புகழ்மாலை சூட்டியுள்ளனர்.

### புதுக்குடியிருப்பில் 'விபத்து' - கோணகலையில் கோரக்கொலை

கோணகலையில் அப்பாவி சிங்கள மக்கள் கோரமாக கொலைசெய்யப்பட்டது போன்ற சம்பவங்கள் (Massacres) பற்றி கதிர்காமர் மிகுந்த கவலை தெரிவித்துள்ளார். அதாவது, அத்தகைய கொடூரச் செயல்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருவதனால் தான் பிரச்சினை மோசமாகியுள்ளதாக அவர் சாடியுள்ளார். எந்த இன மதத்தை சேர்ந்தவர்களாயினும் குறிப்பாக அப்பாவி மக்கள் கொல்லப்படுவது கடுமையாக கண்டிக்கப்பட வேண்டியதே ஆனால், புதுக்குடியிருப்பில் அப்பாவி தமிழ் மக்கள் விமானக் குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட சம்பவம் ஒரு விபத்து (accident) என்று பதிர்காமர் வாய் கூசாமல் சொல்கிறாரே? அதனை கண்டித்து அமைப்புகளையும் அவர் கடுமையாக சாடியுள்ளார். அது அவருக்கு கைவந்த கலை. 1995 ஜீலையில் நவாலி தேவாலயத்தில் விமானக் குண்டு வீச்சினால் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டதையும் ஒரு விபத்து என்று தான் கதிர்காமால் உட்பட அரச தரப்பினர் கூறி வந்தன். அச்சந்தர்ப்பத்தில் அதனை அம்பலப்படுத்திய சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதி மீது கதிர்காமர் எரிந்து விழுந்தார். தேவாலய கட்டிடம் அப்படியே திறந்தபடி நிற்கிறதே என்றெல்லாம் அரச தரப்பினரால் கூறப்பட்டது. தேவாலயம் எனும் போது கட்டிடம் மட்டுமா, அதன்வளவு சேர்ப்பில்லையா? என பிரதிநிதி சவால் விட்டிருந்தார் அச்சம்பவத்தினை நேரில் பார்வையிட்ட யாழ்மாவட்ட உயர் அரச அதிகாரிகள் சமர்ப்பித்த அறிக்கை அரச தரப்பினரால் நிராகரிக்கப்பட்டது.

### கதிர் கூறும் இறைமை படும் பாடு

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தை நிராகரித்துள்ள கதிர்காமர் நாட்டின் இறைமை பொன்னானது அது தாரைவார்க்க கூடியதல்ல என்றெல்லாம் கூறியுள்ளார். கதிர்காமரை வாழ்த்தியுள்ள பேராசிரியர் நலின் டி சில்வா மேலும் கூறுகையில் "குடியேற்றவாதம் இன்றிருக்கும் கட்டத்தில் அதனை உலக ஏகாதிபத்தியம் என்று கூறலாம். ஆதலால் அரசு தனது அதிகாரங்களை இழந்து வருகிறது. எந்தவொரு அரசும் பல்தேசிய கம்பனிகளை கட்டுப்படுத்த முடியாது. அரசுகள் கருகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் காள்மாக்ஸ் நினைத்தது போல் அல்ல. ஏகாதிபத்தியமானது இன்று மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்தையும் இறைமையையுமே பறித்து விட்டது" என சூழுரைத்துள்ளார். கதிர்காமர் கூறும் எமது நாட்டின் பொன்னான இறைமை படும் பாட்டை அவரைப் புகழ்ந்துள்ள நளின் டி சில்வாவே புட்டுக்காட்டியுள்ளார்.

### ஈனவும் முடியாமல் முக்கவும் முடியாமல் ஆத்திரம் பொங்கி வழிதல்

கதிர்காமர் ஆத்திரம் பொங்க ஐ.நா.வில் உரையாற்றியதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அதாவது தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்விற்கான அரசாங்கத்தின் முயற்சி முடங்கிப் போயுள்ளது. தான் தயாரித்த தீர்வுப் பொதியினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கே வக்கற்ற பரிதாக நிலையில் அரசாங்கம் உள்ளது. அந்த கெட்ட கேட்டை மூடிமறைப்பதற்கு சமவாய்ப்பு சட்ட மூலம் ஒன்றினை கொண்டு வந்தது. அதற்கும் பிரதானமாக சிங்கள, பௌத்த சக்திகளிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பி ஆனந்தா, நாலந்தா போன்ற பாடசாலைகள் ஆர்ப்பாட்டங்களையே நடாத்தியுள்ளன. எனவே தான் அந்த மசோதாவையும் திட்டமிட்டபடி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாத திரிசங்கு நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில் அரசாங்கத்தின் இராணுவ முனைப்பும் முறிக்கப்பட்டு அடுத்தடுத்து தோல்வியை தழுவும் நிலை உருவாகியுள்ளது. 13 மாதகாலமாக நடத்திய "வெற்றி நிச்சயம்": (ஜயசிக்குறு) நிச்சயமான தோல்வியில் முடிந்தது. அண்மையில் மேற்கொண்ட "யுத்த முழக்கம் 5" (றணகோச 5) படு தோல்வி. அரவாங்கத்தின் கையாலாகதனத்திற்கும் பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் அகங்காரத்திற்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக வன்னிவாழ் மக்களுக்கு வேதனைக்கு மேல் வேதனை. வன்னி மக்களுக்கு உணவு மருந்து அனுப்புவதற்கான பாதை திறப்பு விடயத்தில் விடுதலைப் புலிகளின் அழுங்குப் பிடித்தனத்தை எமது ஆயுதப்படையினர் முறியடித்துக் கொண்டு வன்னிக்கு சென்று அல்லலுறும் மக்களுக்கு உணவு மருந்து வழங்குவர் என கதிர்காமர் சவால் விட்டிருந்தார். அதெல்லாம் தவிடு பொடியாகி விட்டது.

எனவே தான் அரசியல் முயற்சியிலும் அதே போல் இராணுவ தீர்வு முறையிலும் திரிசங்கு நிலையை அடைந்துள்ள நிலைமையில் பொங்கி வந்த ஆத்திரத்தின் வெளிப்பாடு தான் கதிர்காமரின் ஐ.நா முழக்கமும் புதுக்குடியிருப்பு படுகொலைகளும் ஆகும்.

தமிழ். முஸ்லிம் மக்கள் மட்டுமல்லாமல் 77 வீதமான சிங்கள மக்களுமே சமாதானத்தை விரும்புகின்றனர் என மிக அண்மையில் பதுளையில் நடத்தப்பட்ட 5வது ஆண்டு நிறைவு கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி கூறியுள்ளார். இதை ஜனாதிபதி யாருக்கு சொல்கிறார்? இது அவர் 5 வருடங்களுக்கு முன் ஆட்சிக்கு வரும் போதே தெரிந்த விடயம் தானே! தான் சமாதானத்தைகக் கொண்டு வருவதற்கு ஏன் தவறினார் என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிய ஜனாதிபதி சிறுபான்மையான சிங்கள பேரினவாத கும்பலுக்கும் அதே நேரத்தில் ஏகாதிபத்திய எஜமான்களுக்கும் அடிபணிந்து ஆட்சி நடத்திக் கொண்டு நல்லவர் போல் வேடம் போடுவது இந்த நாட்டின் எல்ல ஏழை எளிய மக்கள், தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள் ஆக மொத்தமாக 80% மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

**வ.திருநாவுக்கரசு**

அரசியல் குழு உறுப்பினர்

நவசமசமாஜ கட்சி

உறுப்பினர் கொழும்பு

மாநகர சபை

# எப்பாவெல வழிப்பறி !

எப்பாவெல பகுதியில் பொஸ்பேற் கனிமத்துக்காக ங்களை அந்நிய கம்பனிகளுக்கு விற்கும் வடிக்கைக்கு அப்பகுதி மக்கள் காட்டி வரும் ப்புகளை அரசாங்கம் எந்தவளியில் சமாளிப்பது என்று சித்துக் கொண்டு இருக்கிறது. புத்தளம் பகுதியில் சோலை அனல்மின் நிலையம் அமைப்பது தொடர்பான பத்திலும் அரசாங்கம் தனது முடிவை மாற்றப்போவதாக யவில்லை.

இன்று இந்த நாட்டில் வடக்கு கிழக்கு மட்டுமே, அந்நிய திபத்தியத்திடம் இருந்து தப்பிக்கிடக்கிறது. இதற்காக மக்களுக்கு தென் இலங்கை மக்கள் நன்றி சொல்ல ண்டும்.

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டு காலமாக இந்த நாட்டை ட மேல்நாடுகள் தமது ஆட்சிக்காலத்தில், தமக்காக ற்படக் கூடிய ஒரு கூட்டத்தை இங்கு உருவாக்கி டே சென்றுள்ளனர். அத்தகைய கூட்டத்திடமே, தானிய அரசும் ஆட்சிப் பொறுப்பை கையளித்தது. களை ஆங்கிலோ அமெரிக்க அடிவருடிகள் என்றும் பிடலாம். இலங்கையின் சனத் தொகையில் 5 த்துக்கும் குறைவான இந்த சமூகமே எப்போதும் சிப்பரப்பில் நிலைத்து வருகின்றது. அது லக்ஸ்மன் காமா். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா, என்ற களில் உள்ள பரம்பரையாகும்.

சூழல் மாசுபடும் விடயத்தில் மத நிறுவனங்கள், பொது பனங்கள் முற்போக்கு சக்திகள் இணைந்து ற்பட்டு வருகின்றன. குறிப்பாக சிலாபம் பகுதியில் தோலிக்க மதகுருமார் சிறந்த முறையில் சூழல் படுவதற்கு எதிராக போராடுகின்றனர். இவர்களின் ட்டங்களில் நாம் எல்லோரும் இணைய வேண்டும்.

இரணவில் பகுதியில் கொட்டப்படும் அமெரிக்க புகளுக்கு, அந்த அமெரிக்க நிறுவனம் பொறுப்பல்ல ஒப்பந்தம் கூறுகிறதாம். அதாவது கொட்டப்படும் புகளினால் ஏற்படும் விளைவுகளுக்கு மேற்படி கம்பனி றுப்பாக மாட்டாது என்பதே ஒப்பந்தத்தின் சாராம்சம் ம். எனவே பணத்துக்காக எமது நாடு எவ்வளவு தூரம் வான நிலைக்குச் சென்றுள்ளது. இத்தகைய ந்த்துரோகச் செயல்களையா இந்த நாட்டு மக்கள் மதிக்க வேண்டும்?

### பெண்களும் விளையாட்டும்

இன்று பத்திரிகைகளில் தலைப்பு தியாகவிளையாட்டு இடம் பெறுகின்றது. தொடர்பு ங்கள் அனைத்திலும் விளையாட்டு பெரும்பகுதியை ஆக்கிரமித்துள்ளது. ஆண்களின் ஆதிக்கம் மிகுந்த துறையாகவே விளையாட்டுத் துறை இன்றும் காணப்படுகின்றது. ஆண் பார்வையாளர்கள் குழப்பம் விளைவிக்கும் பல சம்பவங்கள் நிகழ்கின்ற ஒரு இருண்ட யுகத்தில் நாம் வாழ்கின்றோம்.

பெண்கள் சார்பாக வெளிவரும் சஞ்சிகைகள் பயிற்சி பற்றி அறிவுறுத்துகின்றன. இது நிறையை குறைப்பதை மட்டும் நோக்கமாக அல்லாமல், தொடர்பு சாதனங்களில், காட்சி தருகின்ற அழகு தேவதைகள் என்பது போல் ஆகின்ற வேணவாவையும் கொண்டதாகும். உலகில் இன்று விளையாட்டுக்கள் பால் ரீதியாக பிரிக்கப்பட்டுள்ளன. பாரம்பரியமாக விளையாட்டுகள் ஆண் ஆதிக்கம் நிறைந்ததாகவே இருந்துள்ளன. இன்றும் கூட அத்தகைய நிலை தொடர்வதையே பலரும் விரும்புகின்றனர். நவீன ஒலிம்பிக் துறையை உருவாக்கிய பாரன் பிறாறி கபூட்டன் என்பவர் கூட பெண்களுக்கு தனியாக ஒலிம்பிக் விளையாட்டு வைப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. அங்கனம் தனியாக வைத்தால், அது மகிழ்ச்சிதராது, அழகாக இருக்காது, சரியாகவும் அமையாது என்கிறார்.

இது ஒரு காலங் கடந்த கருத்தாகவே விளையாட்டுத்துறை முற்போக்கு விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதை தீய சிந்தனையாகவும் வர்ணித்துள்ளனர். 1999ல் தொலைக் காட்சி தருகின்ற விளையாட்டு துறை பெண்ணைப் பார்க்கின்ற எவரும் பெண்களின் விளையாட்டுத் துறை விரிவடைந்துள்ளது என்றே கருத்து தெரிவிப்பார்கள். "ஜிம்னாஸ்ரிக்ஸ்" என அழைக்கப்படுகின்ற விளையாட்டில் பெண்கள் அதி உச்ச நிலையை அடைந்துள்ளனர். உயர் நிலை விளையாட்டுகள், ஆண், பெண் இருபாலரினதும் உடற் தோற்றத்தை நாசம் செய்துள்ளது. பெண்கள் தாம் விளையாட்டில் முதன்மை பெற வேண்டும் என்பதற்காக, ஹோமோன்களை உள்வாங்கத் தொடங்கியுள்ளனர்.

சோவியத் நாட்டில் விளையாட்டு பயிற்சியாளர்கள் அங்குள்ள பெண் விளையாட்டு விராங்கனைகளை ஆண்களுடன் உடலுறவு கொள்ளுமாறு தூண்டியதாக அறியப்படுகிறது. இதனால் பெண்களின் உடல் நிலை வலுப்பெறுவதுடன் அதிகளவு பிராணவாயுவும் உடலுக்கு கிடைக்க வாய்ப்பு உண்டாகிறது என்றும் கூறப்படுகிறது. இதன் பின்பு கருச்சிதைவு செய்யப்படுகிறது.

இவற்றைப் பார்க்கின்ற போது. வெளிப்படையாக சில உண்மைகள் தெரிகின்றன. விளையாட்டு பயிற்சியாளர்கள், வெற்றி பெறும் நோக்கத்திற்காக வீராங்கனைகளின் உடலை எது வேண்டுமானலும், செய்யத்தயாராகின்றனர். பெண்கள் புதிய விதத்தில் அதிக "ஹோமோன்" உட்கொள்வதால் அவர்களின் மாதவிடாய் குறிப்பிட்ட தினத்துக்கு முன்பாகவே அல்லது காலம் கடந்தே ஏற்படுகிறது.

இவை எல்லாம் எதற்காக நடைபெறுகிறது. புகழ், பதக்கம் பெருந்தொகை பணம் உழைக்கலாம் என்கின்ற வெறி போட்டிகள் பலமாக உள்ள இன்றைய விளையாட்டு உலகம், 21ம் நூற்றாண்டுக்குள் நுழையப் போகின்றது. இன்றைய நிலையில் பெண்கள் பல்வேறு விளையாட்டு துறைகளில் ஆண்களுக்கு சரிசமமாக வளர்ந்துள்ளனர். சில துறைகளில் ஆண்களை விஞ்சும் அளவுக்கு, வந்துள்ளனர்.

சமூக ஆய்வாளர். கதறின், லொவியூ என்பவரது கருத்துப்படி பெண்களின் விளையாட்டுத் திறமை இன்று நேற்றையதை விட அதிகமாக முன்னேறி உள்ளது என்று கூறியுள்ளார். எனவே ஆரம்ப காலங்களில் ஆண்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த விளையாட்டுத் துறையில் பெண்கள் பல சவால்களை எதிர் கொண்டு கடுமையாக உழைத்ததன் பலனாக இன்று சமநிலைக்கு வந்துள்ளன.

எது எப்படி இருந்தாலும் போட்டிகள் அதிகம் நிறைந்த இன்றைய விளையாட்டு உலகம் கடுமையான உடல் பயிற்சிகள் மேற்கொள்வதன் பலனாக ஆண்களினதும் பெண்களினதும் உடல் அமைப்புகள் ஒரே மாதிரியான தோற்றத்தை பெறுகின்றன. இவ்வாறான சூழல் விளையாட்டுத் துறையில் உள்ளதால் பல்வேறுபட்ட உண்மைகள் விளையாட்டுத் துறை சம்பந்தமாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. அதாவது சிறுவயதில் இருந்தே பெண்களுக்கும், ஆண்களுக்கும் ஒரே மாதிரியான விளையாட்டு பயிற்சியை வழங்குவதன் மூலம் ஆண்களையும், பெண்களையும் சரிசம நிலைக்கு கொண்டுவர முடியாதா என்பது இன்னும் பொதுவான ஊடகமாகவே உள்ளது. சிறு பராயத்தில் இருந்து வேறு எங்கும் கவனத்தை செலுத்தாது, உயர் விளையாட்டுத்துறைக்காக, தன்னை தயார் செய்யும் பெண் ஒருவரால் அந்நிலையை எட்ட முடியும். ஏனையவர்கள் தமது சாதாரண உறவு முறை சூழலில் பழகுவதிலும் செயற்படுவதும் தொடர வேண்டிய ஒன்றாகும்.

உயர் நிலை விளையாட்டுத் துறை பெண்கள் உடல் ரீதியாக ஆண்கள் நிலையை எட்டுவது விதிவிலக்காக இருக்கும்.

இன்றும் சில விளையாட்டுகள் முழுக்க, முழுக்க ஆண்கள் ஆதிக்கம் உள்ள துறையாகவே உள்ளது. கால்பந்து, றகர், குத்துச்சண்டை என்பவற்றை குறிப்பிடலாம். கால்பந்து விளையாட்டு ஆண்கள் ஆதிக்கம் அதிகம் நிறைந்ததாகும். இவ்விளையாட்டு வன்முறை நிறைந்த விளையாட்டாகவே உள்ளது. பெண்கள் கால்பந்து விளையாட்டும் உள்ளது. இவ்விளையாட்டை தொலைக் காட்சியில் காட்டுவதில்லை. இதற்குரிய காரணம் என்னவென்றால் இவ் விளையாட்டுக்கு ரசிகர்கள் அதிகம் பேர் இல்லை. பெண்கள் கால்பந்து போட்டியில் தற்போதைய உலகின் வீராங்கனைகள் இல்லை. ஆனால் ஆண்கள் கால்பந்து விளையாட்டில் வீரர்கள் பலர் உள்ளனர். கால்பந்து விளையாட்டால் ஒரு நகரம், அல்லது பிராந்தியம், அன்றேல் முழுத்தேசமே புகழ் பெறுகிறது. இதனால் ஆண் ஆதிக்க அடையாளம் மேலும், மேலும வலுப்பெறுகின்றது.

ஏனைய விளையாட்டுகள், பெண்கள் பங்கெடுக்கக் கூடிய விளையாட்டுக்களாகவே உள்ளன.

கூடைப்பந்து 1891ல் ஜேம்ஸ் நய்ஸ்மித் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. "கிறிஸ்த்தவர்கள் தன்னைப்போல அயலவரையும் நேசிக்க வேண்டும்" என்ற கருத்து இவ்விளையாட்டில் கடைப்பிடிக்கப்படுகிறது. சகல வன்முறைகளும் இவ் விளையாட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. ஏனைய விளையாட்டை போல் சுய நலத்தை நோக்கமாகக் கொண்டு பிசாசு போல் செயற்படும் முறை இவ் விளையாட்டில் இல்லை. கூடைப் பந்து விளையாட்டில் விளையாட்டு வீரர் சுய கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

எனவே ஆண், பெண் இருபாலரும் உள்ள விளையாட்டு உயர்வு தரும். தனி ஆண் ஆதிக்கம் உள்ள விளையாட்டு சமூகத்துக்கு நலன் தராது. இவ்விடயத்தை பாடசாலையில் இருந்தே கவனிக்க தொடங்க வேண்டும். இரு பாலரையும் இணைத்து செயற்படுவதில் பல பிரச்சினைகளை சமாளிக்க வேண்டும். ஆனாலும் இரு பாலார் விளையாட்டே சிறந்ததாகும்.

நன்றி-இன்டர்நெஷனல் வியுபொய்ன்ட்

www.padippakam.com

# தமிழ் மக்கள் மயான அமைதியைத் தேடவில்லை !

கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பணிக்குழுவினால் 18.9.99 ல் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நடத்தப்பட்ட பகிரங்கக் கூட்டத்தில் நவசமசமாஜ கட்சி அரசியல் குழு உறுப்பினர்/கொழும்பு மாநகரசபை உறுப்பினர் வ.திருநாவுக்கரசு ஆற்றிய உரை

முன்னைய ஐ.தே.க. அரசாங்கம் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் யுத்தத்தினை 17 வருடகாலமாக நடத்தியது. 1994ல் சந்திரிகா அம்மையார் சமாதானப்புறாவாக காட்சியளித்து பதவிக்கு வந்தார். தமிழ் மக்களும் அவரில் நம்பிக்கை வைத்து அமோகமாக ஆதரித்தனர். ஆனால் ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார். யுத்தத்தினை முன்னரைக் காட்டிலும் கொடூரமாகவும் மிலேச்சத்தனமாகவும் நடத்திக் கொண்டு, தமிழ் மக்கள் மீது வேதனை மேல் வேதனைகளைச் சுமத்தி வருகிறார். இந்த யுத்தத்தினை நடத்துவதற்கு தாம் விடுதலைப்புலிகளால் தள்ளப்பட்டதாகவும் அதனை ஒரு "சமாதானத்துக்கான யுத்தமாக", தமிழ் மக்களுக்கு எதிராக அன்றி, விடுதலைப்புலிகளுக்கெதிராக நடத்த வேண்டியதாயிற்று என. ஜனாதிபதி சந்திரிகாவும் ஏனைய அரசாங்க முக்கியஸ்தர்களும் ஓயாது பிரசாரம் செய்து வருகின்றனர். இது முழுப்பூசிணிக்காயை சோற்றில் மறைக்க முற்படுவதைக் காட்டிலும் பெரிய மோசடியாகும். பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகளையோ, தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்றம் பெற்றதற்கான வரலாற்றுப் பின்னணியையோ ஆராய்வது கிடையாது. எனவே தான் உண்மையில் இந்த யுத்தமானது தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுத் திணிக்கப்பட்டதொன்றாகும். இதனை உடனடியாக நிறுத்த வேண்டுமென்பதே அவர்களின் குமுறலாகும். மேலும், எல்லா சமூகங்களையும் சேர்ந்த அதிகப்பெரும்பான்மையான மக்களும் இந்த இனக்கொலை யுத்தத்தினை மேலும் எதுவித தாமதமுமின்றி முடிவுக்கு கொண்டு வரவேண்டுமென்றே வேண்டி நிற்கின்றனர். ஆனால் சிங்கள பேரினவாத பிற்போக்கு சக்திகள் இராணுவ முறையில் வெற்றியீட்டி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என எண்ணிச் செயற்படுகின்றனவே ஒழிய, நாட்டுமக்கள் அனைவருக்கும் சமாதானமும் சுபீட்சமும் கிட்ட வேண்டும் என்று அவை எண்ணுவதே கிடையாது.

## பெரும்பான்மை-சிறுபான்மை கருதுகோள்

பொரும்பான்மை, சிறுபான்மை கருதுகோள் தொடர்பாக இந்த நாட்டில் மிக ஆபத்து நிறைந்த தப்பபிப்பிராயம் நிலவுகின்றது. major எனும் ஆங்கில பதத்திற்கு பெரிய, மேல்தரம் எனவும், மறுபுறத்தில் miror என்ற பதத்திற்கு சிறிய, குறைவான, கீழ்தரமான எனவும் அகராதியில் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விரு பதங்களும் MAJORITY மற்றும் MINORITY என்ற சொற்களின் மூலச்சொற்களாயிருப்பதால் சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது சவாரி விடலாம் என எண்ணத் தலைப்பட்டன போலும். அதாவது "பெரிய" சிங்கள மக்கள் "சிறிய" தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது தமக்கு உரித்தான பணியென எண்ணிச் செயற்பட்டு வந்துள்ளன. இந்த அடிப்படையில் தான், உதாரணமாக, தமிழ் பிரதேசங்களையும் கிராமங்களையும் சிங்கள குடியேற்றங்களுக்கு உள்ளாக்கி வந்துள்ளன. அதற்கு படைபலமும் அரசபயங்கரவாதமும் பாவிக்கப்படுகின்றன. மொழி, கல்வி, வேலைவாய்ப்பு காணி / குடியேற்றம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட புறக்கணிப்புகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக ஏறத்தாழ 3 தசாப்பதங்களாக தமிழ் அரசியல் தலைமைகளினால் நடத்தப்பட்ட சாத்வீதப் போராட்டங்களை முறியடிப்பதற்காகவும் அதிகளவு அரச பயங்கரவாதம் பாவிக்கப்பட்டது வரலாறு. அவ்வாறான வரலாற்றுப் பின்னணியிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள், அடங்கலாக, பல்வேறு தமிழ் இளைஞர் அமைப்புகள் 1980களில் ஆயுதமேந்திப் போராடத்தலைப்பட்டன. தமிழ் மக்களை ஒதுக்கி சிறுமைப்படுத்த 1956ல் கொண்டு வந்த தனிச் சிங்கள சட்டம் இயற்றி 25 வருட நீண்ட நெடுங்காலம் பொறுத்தது போதும் என்ற நிலைக்கு தமிழ் இளைஞர் இட்டுச் செல்லப்பட்டனர் என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும். 1958ல் தமிழருக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தினை பிரத்தியேகமாக வைத்து அன்றைய பிரபல பத்திரிகையாளராகிய ரார்சிவித்தாச்சி "அவசரகாலம் '58" (EMERGENCY'58)எனும் நூல் ஒன்றினை வெளியிட்டிருந்தார். அந்தப்பிரளயமானது எந்தளவு பரிமாணத்தைக் கொண்டிருந்தது என்று கேட்டால், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் பிரிந்து செல்லக் கூடிய சமிக்ஜையாக அது அமைந்து விடுமோ என அவர் வினா எழுப்பியிருந்தார்.



## அரசாங்கங்களே கசப்புணர்வுகளை விதைக்கின்றன

அன்று முதல் இன்று வரை அரசாங்கங்களே சிங்கள மக்களுக்கும் தமிழ் /முஸ்லிம் மக்களுக்குமிடையில் கசப்புணர்வுகளை வளர்த்து வந்துள்ளன. இதற்காக அரசாங்கங்கள் நாட்டின் கல்வி முறையையும் குறிப்பாக வரலாற்று நூல்களையும் பாவித்து வந்துள்ளன. இதன் மூலம் சிங்கள பெரும்பான்மை மேலாதிக்கத்தினை நிலைநாட்டுவதற்கு முனைந்து வந்துள்ளன. இதன் மூலம் சிங்கள பெரும்பான்மை மேலாதிக்கத்தினை நிலைநாட்டுவதற்கு முனைந்து வந்துள்ளன. உண்மையில், சிங்கள மொழியில் பெரும்பான்மை என்பதற்கு "மஹாஜாத்திய" என்ற பதங்கள் பாவிக்கப்படுகின்றன. இது ஒரு



பட்டவர்த்தனமான தவறாகும். எனவே இந்த நாட்டின் சமூகங்களைக் குறிப்பிடுகையில் பெரும்பான்மை, சிறுபான்மை எனும் இரு பதங்களும், அடிப்படையில் தவறானதும் இனங்களுக்கிடையிலான செனஜன்யத்துக்கு ஆபத்தானதுமான அர்த்தத்திலேயே பாவிக்கப்பட்டு வருகின்றன. வரலாற்றாசிரியராகிய பேராசிரியர் கிங்ஸ்லி டி.சில்வா சிங்கள மேலாதிக்கத்திற்காக உழைக்கும் ஒருவர். அவர் கூட 1986ல் எழுதிய ஒரு கட்டுரையில் "20ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை தமிழர் சிறுபான்மை சமூகமன்றி 2 பெரும்பான்மை சமூகங்களில் ஒன்றாகவே மதிக்கப்பட்டு வந்தது" பின்பு பிரித்தானிய குடியேற்றவாத (COLONIAL) ஆட்சியாளரால் கொண்டுவரப்பட்ட 'வெஸ்மின்ஸ்ரா' முறை அறிமுகமாகிய பின்னர் தான் சிங்கள மக்கள் பிரத்தியேகமான பெரும்பான்மையினர் எனும் நிலைமை உதயமாகியதுடன், அவர்கள் ஆட்டிப்படைக்கலாம் என்ற தப்பான எண்ணமும் உருவாக்கப்பட்டது. இதன் காரணமாகவே, "ஐம்பதுக்கு ஐம்பது" சமஷ்டி ஆட்சி முறை, மற்றும் இன்றைய தனிநாடு ஆகிய கோரிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து கிளம்பின: இதனை பிரபல பத்திரிகையாளர் குவாட்ஹி இஸ்மாயிலும் அண்மையில் கட்டிக்காட்டியிருந்து ஆனால் வெஸ்மின்ஸ்ரர் முறை வருவதற்கு முன்னரே, சிங்கள பேரினவாத வண்டு அளிக்க ஆரம்பித்து விட்டது. அதனால் தான் அன்றைய இலங்கை தேசிய காங்கிரசில் பிளவு ஏற்பட்டதுடன், சேர்பொன்.அருணாசலம் போன்ற பிரபல்யம் வாய்ந்த தலைவர்கள் விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்பட்டு காங்கிரசிலிருந்து வெளியேறினர்.

## தேசிய கொடி

இன்றைய தேசிய கொடியைப்பாருங்கள். ஒரு வாழேந்திய சிங்கம் நிரம்பிய கொடி அதற்கு வடிவமைத்த குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் அந்தச்சிங்கம் சிங்கள மக்களைப் பிரதிநிதிப்படுத்துவதாக எண்ணினர் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. சிறுபான்மையினர் என்றழைக்கப்படுபவர்கள் அக்கொடியில் ஒதுக்கப்பட்டிருப்பது நன்கு புலனாகிறது. இந்தக் கொடியானது இதே வடிவத்திலேயே நீண்டகாலமாக இருந்து வந்துள்ளதால், அதனை இப்போது ஒரு பிரச்சினையாக எடுக்க வேண்டிய அவசியமில்லை என வேறுயாருமல்ல, நீதி, அரசியலமைப்பு மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் கூறியுள்ளார். நீண்டகால சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவற்றை அப்படியே விட்டு விடுவது அற்புதமான அணுகு முறையல்லவா?

## யுத்தம் அகோரமாகத் தொடர்கிறது - அப்பாவிகள் குண்டு வீச்சிக்கு இரை

யுத்தமோ இன்று அகோரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இருபக்கங்களிலும் ஆயிரக்கணக்கானோர் மடிந்து
கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களோ வரலா
காணாத. நரக வாழ்க்கை நடத்தி
கொண்டிருக்கின்றனர். அப்பாவி பொதுமக்க
குண்டுவீசி அழிக்கப்படுகிறார்கள். அன்
நவாலி புனித பீற்றேஸ் தேவாலயத்தாக்குத
முதல் (15.9.99) (புதன்) புதுக்குடியிருப்பு பகுதியி
குண்டுவீசி அப்பாவி பொதுமக்க
கொல்லப்பட்டது வரை பல சம்பவங்கள் இட
பெற்றுள்ளன. நவாலியில் ஒரே நா
தாக்குதலில் ஏறத்தாழ 150 பே
கொல்லப்பட்டனர். 1500 பேர்வ
காயமடைந்தனர். புதுக்குடியிருப்பில் 22 பே
கொல்லப்பட்டதுடன் 40க்கு மேற்பட்டோ
காயமடைந்தனர்.

ஜனாதிபதி கிளின்ரன், ஐ.நா.செயலாள
கோபி அனான், ஜனாதிபதி சந்திரிக
பண்டாரநாயக்க குமாரத்துங்
வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காம
ஆகியோர் அண்மையில் நீலன் திருச்செல்வ
படுகொலை செய்யப்பட்டதையிட்டு பலத்
கண்டனங்களும் ஆழ்ந்த அனுதாபங்களு
தெரிவித்திருந்தனர். அதே வேளை அப்பா
பொதுமக்கள் வகை தொகையின்றி கொன்
குவிக்கப்படுவது பற்றி அவர்கள் காட்டு
மௌனமானது காதைப் பிழக்கிறதே
கொல்லப்படும் தமிழ்மக்கள் எல்லோரையு
ஆயுதப்படையினர் புலிகள் என்றே முத்தின
குத்தி விடுகின்றனர். அன்று புதுக்குடியிருப்பி
கொலை செய்யப்பட்டவர்களும் அர
தரப்பினரால் அவ்வா
கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்
கொல்லப்பட்டவர்களில் ஒருவர் 70 வய
நிறைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புதுக்குடியிருப்பு தாக்குதல் இடம்பெற்ற பி
நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தி
ஜனாதிபதி உரையாற்றும் போ
அத்தாக்குதலைப்பற்றி ஏதும் குறிப்பிடவில்ல
ஆனால், தமிழ் மக்கள் அன்றாடம் சந்தித்
வரும் பிரச்சினைகளையிட்டு கவலை தெரிவித்
அவர் எல்லோரும் தமிழ் மக்களையு
சிறுபான்மை மக்களையும் பற்றி திறந்
மனதுடன், கருணையுடன் சிந்திக்
வேண்டுமென்று பரிந்து பேசியுள்ளார். அத்தோ
தமிழ் அரசரும் மொழியாக 2000ம் ஆண்
ஜனவரி நடைமுறைப்படுத்த நடவடிக்க
ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளா
இது ஒன்றும் புதியதல்ல. ஏறத்தாழ
வருடங்களுக்கு முன்னர் கூட தமிழ் மக்களுக்
சிங்கள மொழியில் கடிதங்கள் முதலிய
அரசாங்க அலுவலகங்களிலிருந்
அனுப்பப்படுவதை அறிந்து தான் அதிர்ச்சிய
ஆத்திரமும் அடைந்ததாகவும், 2 மாத கா
எல்லைக்குள் தமிழ் மொழி அமுலாக்க
கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும் எ
கூறிவைத்தார். நடந்தது ஒன்றுமில்ல
வழக்கம் போல் பேச்சுவழக்கு. தமிபிகா
நடைதான்.

தமிழ் மக்கள் வேண்டுவது சுயநிர்ண
உரிமை சுயாட்சி இறைமை கருணை, சலுக
அல்ல அது ஒரு புறமிருக்க, ஜனாதிப
சந்திரிகாவிடமிருந்தோ
அரசாங்கத்திடமிருந்தோ தமிழ் மக்க
எந்தவித கருணையையோ சலுகைகளைய
எதிர்பார்க்கவில்லை, எதிர்பார்க்
வேண்டியதுமில்லை. அவர்களுக்
வேண்டியதெல்லாம் அவர்களுக்குரி
பாரதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரி
சுயாட்சி இறைமை மீது வைக்கப்பட்டுள்
தடைக்கற்கள் நீக்கப்பட வேண்டும் என்ப
தான் ஏற்கனவே கூறியது போல யுத்தமான
தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டதே அதன
அவர்கள் வேண்டாம், வேண்டாம் எ
குமுறுகின்றனர். புதைகுழிகள் வேண்ட
என்கின்றனர். செம்மணி புகழ் புதைகுழி மட்டு
வடக்கு கிழக்கில் எங்கு
பெருகியிருக்கின்றன. மேலும் பெருகவிட
தேவையில்லை. மட்டக்களப்ப
வந்தாறுமூலை, சந்துறுக்கொண்டா
சித்தாண்டி ஆகிய இடங்களிலு
திருகோணமலையிலும் புதைகுழிக
இருப்பதாக தெரியவந்துள்ளது. இவற்றுக்
பொறுப்பான சிங்கள (அரச)படைகள் வடச்
கிழக்கில் நிலைகொண்டிருக்கக் கூடா
அவை வெளியேற வேண்டும். தமிழ் மக்களுச்
தேவை இராணுவ ஆட்சிய
அடாவடித்தனங்களும் மயான அமைதியுமல்
அவர்களுக்குத்தேவை கௌரவத்துடன் கூ
சமாதானமும், சுயநிர்ணய உரிமை, சுயாட்
அதிகாரமுமே.

படிப்பகம்

www.padippakam.com



சிங்கள பேரினவாதம் தமிழ் இனத்தை டியடிக்க வேண்டும். அல்லது பூண்டோடு ந்து விட வேண்டும் என கனவு காண்கிறது. கனவை நனவாக்குவதற்கு தமிழ் மைகளே துணை போய்க்-ண்டிருக்கின்றன. பட்டது போதும் எனியும் ாடாம். நிறுத்துங்கள். நிங்கள் அரசுக்கு தனையுடனோ நிபந்தனையின்றியோ கும் ஆதரவை என்பது தான் தமிழ் தின் ஆவேசமாகும்.

### பண்டாரநாயக்காவின் ஆரம்ப அரசியல் நோக்கும் பிந்திய இனவெறிப் போக்கும்

ஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க 1920 இங்கிலாந்தில் மேற்படிப்பை முடித்துக் ண்டு நாடு திரும்பிய பின், ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றினை கொண்டிருந்தார். அதனையடுத்து ங்கைக்கு சமஷ்டியாட்சி முறை தான் ந்ததாயிருக்குமென அவர் கூறிவைத்தது அறிந்த விடயம். இதே பண்டாரநாயக்க 1940 களில் "சிங்கள் மகா சபா" என்னும் மைப்பினை உருவாக்கியவர். பின்பு ஐ.தே.க ாங்கத்தில் சேர்ந்து சுகாதார. ளூராட்சி அமைச்சர் பதவி வகித்தவர். ம். அன்று சபைத்தலைவராய் விளங்கிய அடுத்த பிரதமராக பதவி வகிக்க த்துடையவராயிருந்தவர். ஆனால் றைய பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க டாரநாயக்காவை திட்டமிட்டு கட்டியதன் காரணமாக அவர் ஐ.தே.க ாங்கத்தை விட்டு வெளியேறி 1951ல் ங்கா சுதந்திரக் கட்சியை அமைத்தார். போது சிங்களம். தமிழ் இரு மொழிகளும் ரும் மொழிகளாயிருத்தல் வேண்டுமென ஞாபனம் வரைந்தவர்.

### தமிழ் மக்களை ழித்தொழிக்கும் ஆரம்ப கால திட்டம்

தமிழ் மக்களை எப்படியாவது ம் தட்டி அழித்தொழிக்க ண்டும் என்ற எண்ணம் டாரநாயக்கா ஐ.தே.க.வில் கம் வகித்த காலத்திலேயே ' கட் சியிடம்' ாங்கியிருந்தது. இன்று 50வது ண்டுவிழா பொதுஜனமுன்னணி ாங்கத்தாலும் ஐ.தே.க. ாலும் கொண்டாடப்படும் லோயா திட்டம் தமிழ் தசங்களை அபகரிக்கும் ப றிய ானது ஸ்.சேனநாயக்காவினால் கொள்ளப்பட்ட ஆரம்ப டிக்கையே. பல தமிழ். தசங்கள் மறைந்து பொருமளவுக்கு மிட்ட சிங்கள் குடியேற்றங்களை கொண்டதும் மலையக தமிழ் ழிலாளர்களின் குடியுரிமை மற்றும் குரிமையைப்பறித்ததும் டி.எஸ். இந்த டுக்கே விழைவித்த கேடுகளாகும். அது மல்லாமல் தனது மகன் டட்லி மீது அளவு த பாசம் கொண்டிருந்த டி.எஸ். க்குப்பின் பண்டாரநாயக்காவை க்கிவிட்டு டட்லினை பிரதமராக்க ண்டுமென அன்றைய தேசாதிபதி சோல்பரி டன் சூழ்ச்சி செய்து வெற்றியும் கண்டார்.

### ண்டாரநாயக்க ஐ.தே.க. வை முட்டி முந்திக் கொண்டு '24 ரித்தியாலத்தில் சிங்களம்' கோசம் முன்வைத்தல்

டி.எஸ். 1952ல் மரணித்து விட்ட போதும் அவர் இடத்திலிருந்து தொடர்ந்த ஐ.தே.க. கள மொழியை அரசரும் ழியாக்குமுகமாக. 1955ல் தீர்மானம் றவேற்றியது. அதேவேளை பிரதமர் யானசயால் உந்தப்பட்டுக் கொண்டிருந்த பண்டாரநாயக்கா தான் ஐ.தே.க. வை முந்திக்கொண்டு "24 த்தியாலயத்தில் குணவர்தன. டபிள்யூ ாயக்க போன்ற தலைவர்களுடன் ாட்சி திட்டம் தீட்டி 1956 ஏப்ரல் மாதத்தில் மர் பதவியையும் எட்டிப்பிடித்தார். அதே ம் ஜின் மாதத்தில் தனிச்சிங்கள த்தையும் நிறைவேற்றி வைத்தார். அன்று ச்சிங்கள சட்டமூலத்தை ளுமன்றத்தில் சமர்ப்பித்து அவர் ஆற்றிய ரயில் பின்வருமாறு கூறிவைத்ததன் னம் சூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

சிங்கள மக்களுக்கு இலங்கையைத்தவிர நாடில்லை. தமிழ் மக்களின் நிலை வாறானதல்ல. பாக்குநீரிணைக்கப்பால் 5 டி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். எனவே

மொழி அந்தஸ்த்து வழங்கினால் சிங்கள மொழியை தமிழ் மொழி விழுங்கி விடும். இவ்வாறான அம்சமானது சிங்கள மக்கள் மனதில் தீராத கறையை ஏற்படுத்தி விடும்"

இன்றைய "சிங்கள வீரவிதான" விடமிருந்து வரும் நிலைப்பாட்டுக்கு ஒத்ததாகவே இது உள்ளது,

அந்த சந்தர்ப்பத்தில், அன்றைய இடதுசாரித் தலைவர்கள், குறிப்பாக என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோர் தனிச்சிங்கள சட்டத்தினை கடுமையாக எதிர்த்தனர். அது நாட்டை இரண்டு துண்டாக்கும் என எடுத்துரைத்தனர். "இரு

மந்திரிப்பதவிகளையும் தமதாக்கிக் கொண்டனர். டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான முதலாவது ஐ.தே.க.அரசாங்கத்தில், ஜீ.ஜீபொன்னம்பலம், எஸ்.நடேசன், செ.சுந்தரலிங்கம், சீ.சிற்றம்பலம் ஆகியோர் அமைச்சர்களாயிருந்தனர். எனினும் அவர்கள் தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கசப்பான அனுபவங்களைச் சந்திக்க நேர்ந்தது வரலாறு. அப்படியிருந்தும் பின்பு 1965ல் தமிழரசுக் கட்சியின் சார்பில் மு.திருச்செல்வமதி டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தில் அமைச்சர் பதவி ஏற்றதானது மிகப் பெரிய வரலாற்றுத்தவறாகும். டட்லி ஒரு கனவான்

## தமிழ் தலைமைகள் சிங்கள தலைமைகளுக்குத் துணைபோவதைத் தவிர வேறு வழியே இல்லையா?

மொழிகள், 1 நாடு, 1மொழி, இரு நாடுகள்" என திட்டவட்டமாக எச்சரித்தனர். அவற்றையெல்லாம் பண்டாரநாயக்க புன்முறுவலுடன் உதாசீனம் செய்தார். இந்த நாட்டில் இன்று இரத்த ஆறு பெருக்கெடுத்துக் கொண்டிருப்பதற்கு அது ஒரு பெரிய வரலாற்றுக் காரணி என்பது வெள்ளிடை மலை.

### அன்று இலங்கை தேசிய காங்கிரஸ் தமிழ் தலைவர்களை ஓரங்கட்டியது

(Dudley is a gentleman) என அன்றைய தமிழ் தலைவர்கள் எண்ணியதுண்டு. இன்று கூட ஜனாதிபதி சந்திரிகா நேர்மையானவர் (President Chndrika is Sincere), அல்லது மறு புறத்தில் ரணில் விக்ரமசிங்க புதிய தொலைநோக்குடைய இளம்தலைவர் (Ranil Wickremasinghe is a young leader with a new vision) என வர்ணிக்கும் தமிழ் தலைவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்தோ பரிதாபம் முதலாளித்துவ தலைவர்கள் தனிப்பட்ட முறையில் நல்லவர்களாக தோன்றினும், அவர்கள் அரசியலில் அபடகபடம்





இருபதாம் நூற்றாண்டு முடிவடையும் தறுவாயில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியை சற்று பின்னோக்கிப்பார்ப்பது பொருத்தமாகும். ஏனென்றால் யாணை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பது போல அந்த கால 'கட்டத்திலேயே சிங்கள இனவாதம் துளிர் விடத் தொடங்கிவிட்டது. அதாவது 1920 களில் இலங்கை தேசிய காங்கிரஸ் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை சேர் பொன். இராமநாதன், சேர். பொன் அருணாசலம் ஆகிய தலைவர்கள் சோ.டி.பி.ஜயத்திலக்க, எப்.ஆர். சேனநாயக்க போன்ற தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டதுடன் பலலக்கு மரியாதைகளும் பெற்றனர். ஆனால் அவர்கள் பின்பு அதே சிங்கள தலைவர்களால் ஒரங்கட்டப்பட்டனர். அதன் காரணமாக

நிறைந்த ஆபத்தான பேர்வழிகள் என்பதை எவரும் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது.

### நீலன் கொலையும் அவர் பெற்ற புகழாரமும்

அண்மையில் நீலன் திருச்செல்வம் கொலை செய்யப்பட்டதையடுத்து ஜனாதிபதி கிளின்ரன், ஐ.நா.செயலர் கோபி அனான் முதல் ஜனாதிபதி சந்திரிகா வரை பல்வேறு மட்டங்களில் உள்ளவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்ததுடன், அவரை வெகுவாகப்புகழ்ந்தும் உள்ளனர். அவர் அரசாங்கத்தின் விலை மதிக்க முடியாத ஆலோசகராக விளங்கினார் என அமைச்சர் கதிர்காமர் குறிப்பிட்டிருந்தார். நீலன் ஒரு தலைசிறந்த கல்விமான், ஜனாதிபதி சட்டத்தரணி. அரசியலமைப்பு நிபுணத்துவம்

**அடக்கியொடுக்கப்படும் அனைத்து மக்கட் பிரிவினருடனும் இணைந்து போராடுவோம். எமது தலைவிதியை நாம் நிர்ணயிப்போம் என்ற சுயநிர்ணய உரிமை உணர்வுடன் போராடி விடுதலையடைவோம்.**

அவர்கள் பெரும் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இத்தகைய பின்னணியில் அவர்களுக்குப் பின்னர் அரசியலில் பிரவேசித்த தமிழ் தலைவர்கள் குறிப்பிடத்தக்க தொலை நோக்குடனும் தீர்க்க தரிசனத்துடனும் செயற்பட்டு வந்தனர். எவ்வாறாயினும் 1940 களின் பிற்பகுதியில் தமிழ் தலைவர்கள் சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களுடன் இணக்கப் போக்கை கடைப்பிடித்து, பின்னர்

வாய்ந்தவர் என்பதெல்லாம் யாரும் அறிந்ததே. அதே நேரத்தில் அவர் அரசியலில் வகித்த பாத்திரம் எத்தகையது என்பதையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

நீலனின் மறைவையடுத்து அவரின் வழிநடத்தலில் இயங்கும் இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தில் (International Centre for ethnic studies) பணிபுரிந்து வந்தவராகிய சீ.ஏ. சந்திர பிரேமா எழுதிய கட்டுரையொன்றில் "நீலன் விடுதலைப் புலிகளை ஒரு போதும் பகைத்துக் கொள்ளாதவர்,

அவர்களுக்கு கடுமையான பணிவாக (STUBBORNLY SUBMISSIVE) நடந்துவந்தவர் என குறிப்பிட்டுள்ளார். மறுபுறத்தில், ஏறத்தாழ அதே போலவே அவர் வலதுசாரி சிங்கள் தலைவர்களுடனும் நடந்து கொண்டார். அவர் யாரையும் மனம் புண்படத்தக்க ஒரு வார்த்தையாவது கூறியது கிடையாது என (அல்லது அக்கருத்துப்பட) அமைச்சர் கதிர்காமர் கூறியிருப்பது மிகச்சரியானதே. அவர் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் சில அமைச்சர்களுடன் மிக நெருக்கமாயிருந்தவர். அவர் விலைமதிக்க முடியாத அறிவாற்றல் கொண்டவர் என வர்ணித்து. அவரின் மறைவைவிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளனர். தமிழ் தேசிய பிரச்சினை தீர்வுக்கான தீர்க்கமான ஆலோசனைகளை நீலன் முன்வைத்திருந்தாலும் அவை அரசதரப்பினரால் கணக்கில் எடுக்கப்படவில்லையே! ஆரம்பத்தில், அதாவது 1995 ஒகஸ்டில் முன்வைத்த ஆலோசனைகளையும் படிப்படியாக உருக்குலைத்து இழுத்தடித்து வந்த அரசாங்கம் திக்கற்ற நிலையில் இருந்து வருகிறது. எனவே பிரச்சினைக்கு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய, தகுந்த தீர்வொன்றினை அரசாங்கம் காணத்தவறியதே நீலனின் கொலைக்கு வழிசமைத்தது. இது போன்ற பல கொலைகளுக்கு காரணமாணிருந்து வந்துள்ளது. மத்திய வங்கி, கொலொன்னாவ எண்ணெய்க்குதம், தலதாமாளிகாவ போன்ற நிலையங்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதற்கு காரணமாயிருந்துள்ளது. எனவே பிரச்சினைக்கு அரசியல் தீர்வின்றி யுத்தம் தொடருமாயின் இத்தகைய சம்பவங்கள் தொடர்கதையாகவே இருக்கும் என்பதே துர்ப்பாக்கியமான யதார்த்தமாயுள்ளது என்பதை நாம் சொல்லத்தேவையில்லை.

சந்திரிகா நேர்மையானவர், அவரைக்காட்டிலும் நல்ல தலைவர் இப்போதைக்கு இல்லை என நீலன் எண்ணியிருந்ததாகவும், ஆயினும் கடந்த 3 வருடமாக அவர் அதிகளவு ஏமாற்றம் அடைந்திருந்ததாகவும் அவர் மறைவதற்கு இரண்டொரு மணித்தியாலங்களுக்கு முன்னதாக தனக்கு 'தொலைபேசியில்' கூறியிருந்தாரென பிரபல பத்திரிகையாளராகிய டி.பி.எஸ். ஜெயராஜ் தனது அண்மைய கட்டுரையொன்றில் கூறியிருந்தார்.

நீலனின் மறைவைவிட்டு அதிர்ச்சி, கவலை தெரிவித்துள்ள உலக தலைவர்கள், இலங்கை அரச தரப்பினர் மற்றும் மேட்டுக்குடியினர், வடக்கு கிழக்கு மக்கள், குறிப்பாக வன்னி மக்கள் பலகாலமாக முகம் கொடுத்து வரும் பயங்கர உணவு, மருந்து தட்டுப்பாடுகள், போக்குவரத்து தடைகள் திறந்த வெளி சிறைச்சாலை வாழ்க்கை நிலைமைகள் யாவையும் கண்டும் காணாத கல்நெஞ்சங்களாக இருந்து வந்துள்ளனர். புதை குழிகளில் உறங்குபவர்கள் ஒருபுறம், மறுபுறத்தில் இன்று ஆயிரக்கணக்கானோர் கண்ணிவெடியில் சிக்கி கண்ணீரும் கம்பலையுமாக "வாழ்ந்து" கொண்டிருக்கின்றனர். கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையுமோ ஆமை வேகத்தில் தான் நடைபெறுகின்றது.

கடந்த 50 வருடகால சிங்கள பேரினவாத ஆட்சிகளின் ஒட்டுமொத்த விளைவாக இன்று தமிழ் மக்களின் இருப்பே குத்தக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அன்று முதல் இன்று வரை அத்தகைய ஆட்சியாளருக்கு தமிழ் தலைமைகள் வழங்கி வந்துள்ள ஆதரவும் ஒத்துழைப்பும் தான் இத்துர்ப்பாக்கிய நிலைக்கு பிரதான காரணமாகும். இன்று இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இது தான் சிங்கள வீரவிதான போன்ற பேரினவாத அமைப்புகளின் ஆசையும் அல்லவா? இந்தப் போக்கில் ஆகக்குறைந்தது அடுத்த 50 வருடங்களில் இந்த நாட்டில் தமிழ் மக்கள் நிலைமை எப்படியிருக்கம் என்று சிந்திக்க வேண்டாமா? வெளிநாடுகள் சென்றுள்ள தமிழ்மக்கள் படிப்படியாகவேனும் நாடு திரும்ப வேண்டும். ஒடுக்கப்படும் தமிழ் இனம் ஒரு குரலில் பேசி அடங்கி வாழ்வதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். எதிர்கால சந்ததியினர் காப்பாற்றப்பட வேண்டும். அடக்கியொடுக்கப்படும் அனைத்து மக்கட் பிரிவினருடனும் இணைந்து போராடுவோம். எமது தலைவிதியை நாம் நிர்ணயிப்போம் என்ற சுயநிர்ணய உரிமை உணர்வுடன் போராடி விடுதலையடைவோம். மானமெல்லாம் போக விட்டால் எங்கு தான் வாழ்ந்தென்ன?

www.padippakam.com



புதிய
சமதர்மம்
Registered as a news paper in Sri Lanka

வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

# தெற்காசியாவில் இராணுவ முனைப்பு !

தெற்காசியாவில் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அரசியல், பொருளாதார துறைகள் இரண்டிலுமே அடிபணிந்து செயற்பட்டு வருவதில் பல தீமைகள் உள்ளன. அவை பெரும்பாலும் மக்கள் அறிந்ததே. ஏன், அதிகப்பெரும்பான்மையான மக்கள் தீமைகளை அனுபவித்துக் கொண்டே இருக்கின்றனர். உணவு, உடை, உறையுள் என்ற மூன்று விடயங்களிலுமே இலட்சக்கணக்கான மக்களின் நிலை சிதைவுக்குள்ளாகியுள்ளது என்றால் அது நிச்சயமாக மிகையல்ல. எனவெ மக்கள் அதிருப்தி கொண்டு கிளர்ந்தெழுவது இயல்பு, கிளர்ச்சிகளை அடக்குவதே முதலாளித்துவ ஆட்சியாளரின் பிரதான பணிகளில் ஒன்றாகும். எனவே நாடுகளில் அமைதியின்மை, லஞ்சம், ஊழல் யாவும் தலைவிரித்தாடத் தொடங்கும் ஆயுதப்படையினரும் கூடுதலான அதிகாரங்களை தம்வசப்படுத்திக் கொள்வர். இப்படியெ படிப்படியாகவோ என்னவோ நேரடியான இராணுவ ஆட்சியே வந்து சேர்ந்து விடும்.

அது தான் இன்று பாகிஸ்தானில் நடந்துள்ளது. பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் சரிபின் ஆட்சியில் திறமையின்மை, ஊழல் எல்லாம் மலிந்திருந்தது உண்மை. இராணுவத்திற்கும் சரிபுக்கும் இடையில் ஏற்கனவே சற்று விரிசல் நிலை ஆரம்பித்துவிட்டது தெரிந்ததே. இறுதியில் கார்கில் இருந்து வெளியேறும் விடயத்தில் சரிப் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் ஜனாதிபதி கிளின்ரனுக்கும் அடிபணிந்து கார்சிலிலிருந்து வெளியேறச் செய்தமை அவமானமாகவே கொள்ளப்பட்டது. எனவெ சரிபுடன் ஆத்திரம் அடக்கத்தில் இருந்தது. எனவே சரிப் அவருப்கெதிராக நடவடிக்கையை முறையாகப் பயன்படுத்திய சரியை கவிழ்த்தேவிட்டார். தேவைக்கு மேலாக 1 நிமிடமாவது இராணுவ ஆட்சியை நீடிக்கப் போவதில்லையென கூறியுள்ளார். பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஒன்றும் புதிய விடயமல்ல. முன்னைய இராணுவு ஆட்சியாளர்கள், ஆயூப்கான் சியா உல் ஹக், இருவருமே கூறுவதையே அன்று கூறினர். ஆனால் தசாப்தக் கணக்கில் பதவியில் வீற்றிருந்தனர்.

இந்தியாவில் இராணுவப்புரட்சி ஒரு போதும் இடம் பெறவில்லையாயினும், இராணுவம், "றோ" ஆகியன அரசாங்கங்கள் மீது கடுமையாக செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. வாஜ்பாய் அரசாங்கம் தனது பதவிக்காலம் பூராவும் ஆட்சியிலிருந்தால் ஏற்படக்கூடிய கொந்தளிப்புகளைப் பொறுத்து இந்திய இராணுவம் தன்னிச்சை கொள்வதற்கு இடமுண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை 1980களில் இராணுவம் புரட்சித்திட்டம் ஒன்று திட்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அந்த முயற்சியானது நேரகாலரத்தோடு தகவல் பரவியதால் முறியடிக்கப்பட்டது. இன்று, நீண்டகால யுத்த நிலையும், சிங்கள வீரவிதானவின் பேரினவாத வெறியும், இராணுவத்துக்கு ஒரு தூண்டுதலாக அமையலாம். இன்று கூட இராணவத்தின் கை மேலோங்கியிருந்த போதும், நாளை அது நேரடியான இராணுவ ஆட்சியென்றால் நிலைமை கவலைக்கிடமாகி விடும் குறிப்பாக தமிழ்/ முஸ்லிம் மக்கள் மீது இன, மத ரீதியான அதர்மங்கள் மேன்மேலும் தாண்டவமாட இடமுண்டு.

# இரணவிலவில் அமெரிக்க இரசாயண கழிவுகள்!

இலங்கைளில் "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" என்னும் தகவல் நிலையத்தை நிறுவுவதற்கு பெருந்தொகையான நிலப்பரப்பை அமெரிக்காவுக்கு, இலங்கை அரசு தாரை வார்த்து கொடுத்திருந்தது.

இங்கனம் இலங்கை அரசு செய்வதை எதிர்த்து பெரும் எதிர்ப்பு நடவ-


(REUTERS)

டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிலாபம் பேராயர் பிறாங் மார்க்கஸ் பெர்னாண்டோ, தலைமையில் இவ் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாது என்பது போல் வந்த எதிர்ப்புக்களை கவனத்தில் கொள்ளாது நிலம் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டது.

## பௌத்த குருவின் கெடுமதி

இன்று "வெய்ஸ் ஒப் அமெரிக்கா" கட்டுமானப் பணிகள் துரிதகெதியில் நடைபெறுகிறது. அமெரிக்கா தனது இரசாயண கழிவுகளை நிலத்தில் புதைப்பதற்கு, இப்பகுதியில் உள்ள பௌத்த மத குரு ஒருவருடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் அடிப்படையில் ஒரு பெரிய கொள்கலன்கள் கழிவை நிலத்தில் புதைப்பதற்கு இம்மத குருவுக்கு 3000 ரூபா வழங்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் அண்மையில் 10 கொள்கலன்களில் இரசாயண கழிவுகள் இப்பகுதிக்குக கொண்டு வரப்பட்டு புதைக்கப்பட்டுள்ளது. 100 அடி நீளத்திலும் 400 அடி அகலத்திலும் பாரிய குழிகள் வெட்டப்பட்டே இவ் இரசாயண கழிவுகள் புதைக்கப்பட்டுள்ளன.

இக்கழிவுகள் புதைக்கப்பட்ட ஒரு சில நாட்களுக்குள் 10க்கு மேற்பட்ட வளர்ப்பு நாய்களும், 4 மாடுகளும் இறந்துள்ளன. இங்குள்ள பொதுமக்கள் இக் கழிவுகளை அரச பகுப்பாய்வு திணைக்களத்திடம் பரிசோதிக்குமாறு கையளித்திருந்தனர். அரச பகுப்பாய்வுத் திணைக்களம் இக் கழிவுகள் இரசாயணத் தன்மை கொண்டவை எனவும், இந் நடவடிக்கைகள் தொடர்ந்தால் சூழல் மாசுபடும் அபாயம் உள்ளது எனவும் எச்சரித்துள்ளது.

இவை பற்றி எத்தகைய கருத்தும் பொது ஜன முன்னணியிடம் இருந்து வெளிவரவில்லை.

ஆனால், சிலாபம் பகுதியில் மீண்டும். எதிர்ப்பு அலைகள் கிளம்பியுள்ளன. இன்று மேற்கு நாடுகள் வுக்கு அதிகமான நச்சுப் பெ கழிவுகளை வைத்து திண்ட ன்றன. ஜப்பானில் அணுக் அண்மையில் ஏற்பட்டதால் ஒரு முழு மக்களும், இடம் பெயர வே கட்டாயம் ஏற்பட்டது. எனவே வ பெற்ற நாடுகள் தமது இரச கழிவுகளை அகற்றுவதற்கு தேடித் திரிகின்றன. தனியா மாக்கலில் முன்னணியில் இரு இலங்கை அவர்களை கனவை வாக்குகின்றது. இலங்கை அர கடந்த 20 ஆண்டு காலமாக, ஐ பிய, அமெரிக்க மற்றம் ஜப் நாடுகளிடையே பெரும் ம உண்டு. இம் மதிப்பு இலங்கை பொருளாதார நிலையாலோ, அ ஜனநாயக விழும்மியங்களை க காப்பதனாலோ, அன்றேல் உரிமைகளை சரிவர பின்ப தனாலோ உண்டானது அல்ல. வங்கியினதும் சர்வதேச நா நிதியத்தினதும் இன்று உலக தக ஸ்தாபனத்தினதும் நிபந்த களை ஒழுங்கை நடை மு படுத்தும் நாடும், இலங்கைய மேற் கூறப்பட்ட மூன்று அமை களின், நிபந்தனைகள் யாவை? நிறுவனங்கள் தனியார் மய குதல், இலங்கையின் வளங் வெளிநாடுகளுக்கு விற்பனை தல் அரசாங்கத்தால் மக்க வழங்கப்படும் மானிய உதவி வெட்டுதல் மேற்கூறப்பட்ட நி னைகளை பூர்த்தி செய்வதில் ஐ தேசியக் கட்சி அரசும் பொது முன்னணியும் ஒன்றை ஒன்று வெ அளவுக்கு போட்டி போட்டு செய டுள்ளன.

1977ல் ஜே.ஆர் திறந்த பொ தாரக் கொள்கையை நடைமு படுத்த தொடங்கியவுடன் நாட்டின் அனைத்து தன்மை மங்கத் தொடங்கி விட்டன. சந்திரிகா இந்த நாட்டை காடாக்குவதற்கு மு செய்கின்றார்.

# தமிழீழம் தான் தீர்வு என்ற முடிவில் மாற்றம் இல்லை.

-வைகோ-

ஈழத்தமிழர்களின் சுதந்திர வாழ்விற்கு தனித் தமிழீழம் தான் தீர்வு என்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவில் எப்போதும் எந்த மாற்றமும் இல்லை. நாம் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றிருந்தாலும் தமிழீழம் தான் தீர்வு என்ற முடிவில் மாற்றத்தினை ஏற்படுத்த மாட்டோம். எம்மை பொறுத்த வரை ஈழத் தமிழர்களுக்கு அமைதியான உரிமையான வாழ்வு கிடைக்க வேண்டும். தற்பொழுது ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அவலம் நீங்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். ஆயினும் தமிழகத்தின் அரசியல் சூழ் நிலைகள் காரணமாக இலங்கை இனப்பிரச்சினைக்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் கொடுக்கப்படாத போதிலும் ம.தி.மு.க. ஈழத்தமிழர்களின் வாழ்வு தொடர்பாக தொடர்ந்து உறுதியான நிலைப்பாட்டினையே எடுத்து வருகிறது.

முன்பு தனித்தமிழீழம் தான் தீர்வு என்று சொன்னவர்கள் பின்பு தமது முடிவினை மாற்றிக் கொண்டாலும் நாம் மாற்றமடையவில்லை. இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஐ.பி.சி. வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கின்றார்.

ராஜீவ் கொலை வழக் மேன்முறையீட்டு தீர்ப்பில் நீதிமன்றம் மரண தண் உறுதிப்படுத்தியது கேட்கப்பட்ட கேள்விக்கு வழக்கில், சட்டத்தின் அடிபடை பார்த்தாலும் உச்ச நீதிமன்றத் இத்தீர்ப்பு விமர்சனத்த உரியதாகும் உலகமெல்லாம் ப வாழும் தமிழ் மக்கள் இந்த முடி எதிராக தங்களுடைய மனுக்க அனுப்ப வேண்டும். நானும் விவகாரத்தில் என் கடமை வெல்வேன் எனவும் தெரிவித்துள்ளார்.

# இடது சாரிகள்!

மூன்றாவது சக்தியை உருவாக்க வேண்டிய இடதுசாரிகள் இன்று அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் எப்படி வாக்கு பெறுக்கலாம் என்பதில் தமது கவனத்தை செலுத்த தொடங்கியுள்ளனர். பொது நிறுவனங்களை துரித கதியில் தனியார் மயமாக்கலில் அரசாங்கம் முழு முயற்சியும் எடுத்து வருகிறது. இதனால் தொழிலாளர்கள் மிகக் கடுமையான ஆத்திரத்தில் உள்ளனா. வாழ்க்கை சுமையை தாங்க முடியாது மக்கள் தவியாய் தவிக்கின்றனர். அரசாங்கத்தினதும், எதிர்கட்சியினதும் கபட நோக்கத்தை அடையாளம் கண்டுள்ள தமிழ், முஸ்லீம் தேசிய இனங்கள் கட்டுக் கடங்காத கோபத்தில் உள்ளனர். இத்தகையதொரு சூழ்நிலையில் இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளின் கடமை என்னவாக இருக்க வேண்டும். இலங்கையில் வலதுசாரி சக்திகள் தம் உள்ளே ஒப்பீட்டளவில் ஐக்கியமாகவே உள்ளனர். துர் அதிர்ஷ்ட வச இடதுசாரி தலைமைகள் சுயந துக்காக சுகபோகத்திற்காக லாளித்துவ சக்திகளுடன் இனை உக்கிய நிலையில் உள்ளனர். ப பரிய இடதுசாரி கட்சிகள், தே இனப்பிரச்சினையில் இருந்து கியே நிற்கின்றன. ஆனால் ஒ மட்டும் உண்மை, இலங்கை தேசிய இனப்பிரச்சினை தீர்க் படாத வரை வேறு எத்தகைய பி னைகளையும் தீர்க்க முடியாது.

படிப்பகம்